மே 13, 2001 ~~ரூபா 14.00~~ அறிமுக விலை ரூபா 12.00

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

# சுடர் ஒளி

THE SUDAR OLI සුඩර් ඔළි

வார மலர்



# சர்ச்சையை கிளப்பிய பல்குழல் ரொக்கெட் லோஞ்சர் விவகாரம்

# மாவனல்லையில் நிகழ்ந்த பயங்கரம்!



சேதப்படுத்தப்பட்ட பெற்றோல் நிலையம், சுப்பர் மார்க்கெட்




முற்றாக எரிந்த கடைகள்.

## அரசின் சமாதான வேஷம் முழு உலகும் கண்டு கோபம்

## அக்கினி சுவாலை அணைந்தது எப்படி?

## ஈ.பி.டி.பி. கூட்டத்துக்கு ஏன் இந்தப் பாதுகாப்பு?



எரிந்த கடை வீதிகளில் மக்கள்.



மற்றொரு கடைத்தொகுதியின் பரிதாப நிலை.

# புலிகளிடம் 62 சுடு குழல்கள் உள்ள நவீன ரொக்கெட் லோஞ்சர்களா?

## படைதரப்பின் மறுப்புக்கு மத்தியில் குடாநாட்டில் சூடு பிடிக்கும் விவகாரம்



அன்ரன் விஜேந்திரா

குடாநாட்டு மக்கள் கடந்த வாரம் சந்திக்குச் சந்தி நின்று பேசிக் கொண்ட விடயம், புலிகள் வசம் 62 சுடுகுழல்களைக் கொண்ட மல்ரி பரல் ரொக்கெட் செலுத்திகள் இருப்பதாக இராணுவம் வெளியிட்ட தகவலே.

மிகப் பெரிய ஏற்பாடுகளுடன் படையினர் ஆரம்பித்த 'அக்கினிச் சுவாலை' நடவடிக்கை அப்படியே பொசுங்கி — அடங்கிப் போனதற்கு புலிகளின் அகோரமான ரொக்கெட் வீச்சே காரணம் என்று சண்டை நடைபெற்ற வேளையிலேயே பொது மக்கள் பேசத் தொடங்கி இருந்தனர்.

கொழும்பில் வெளியாகும் 'சண்டே டைம்ஸ்' பத்திரிகையில் இராணுவ விவகாரங்களை விலாவாரியாக விஸ்தரித்து எழுதி வருபவர் இக்பால் அத்தாஸ்.

'அக்கினிச் சுவாலை' நடவடிக்கை தொடர்பாக யாழ். மாவட்ட படைத்தளபதி மேஜர் ஜெனரல் அன்ரன் விஜேந்திரா அத்தாஸுக்கு பேட்டி ஒன்றை வழங்கி இருந்தார்.

புலிகள் 62 பரல்கள் கொண்ட மல்ரிபரல் ரொக்கெட் செலுத்திகள் உட்பட நவீன ஆயுதங்களைப் பயன்படுத்தியதனாலேயே படைத்தரப்புக்கு அதிக சேதங்கள் ஏற்பட்டன என்று அப்பேட்டியில் அவர் கூறி இருந்தார்.

புலிகள் வசம் 62 பரல்கள் கொண்ட ரொக்கெட் செலுத்திகள் இருப்பதாகத் தளபதி வெளியிட்ட அந்தத் தகவல் செய்தியூடகங்களில் பரபரப்பாக வெளியானது.

யாழ்ப்பாணப் பத்திரிகைகளும் அந்தச் செய்தியை முக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரித்திருந்தன.

40 பரல்களைக் கொண்ட செக் நாட்டு தயாரிப்பான மல்ரிபரல் ரொக்கெட் செலுத்திகளை குடாநாட்டுப் போர் முனையில் படையினர் பயன்படுத்தி வருவது பழைய செய்தி.

ஆனால் இந்த 62 பரல்கள் கொண்ட ரொக்கெட் செலுத்திகள் புலிகள் வசம் இருப்பதான செய்தி பொது மக்களுக்கு மட்டுமன்றி பாதுகாப்புத் தரப்பினருக்கும் கூடப் பெரும் ஆச்சரியத்தைக் கொடுத்தது.

ஆனால் யாழ். படைத்தளபதி கூறியதாக வெளியான அந்தச் செய்தி தவறு என்றும் புலிகள் ஆறு பரல்களைக் கொண்ட ரொக்கெட் செலுத்திகள் மூலம் தாக்குதல் நடத்தியதாகவே தளபதி மேஜர் ஜெனரல் விஜேந்திரா அப்பேட்டியில் கூறியிருந்தார் என்றும் பலாலியில் உள்ள படைத்தலைமையகம் தெரிவித்துள்ளது.

பலாலி பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகத்தில் இருந்து தலைமையகக் கட்டளை அதிகாரி சார்பில் பிரிகேடியர் ரி.யு. முனசிங்க ஒப்பமிட்ட மறுப்பு அறிக்கை யாழ்ப்பாணத்தில் பத்திரிகை அலுவலகங்களுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றது.

ஆனால் தமக்கு வழங்கிய பேட்டியில் 62 பரல்கள் கொண்ட ரொக்கெட் செலுத்திகளைப் புலிகள் பெற்றிருப்பதாகத் தளபதி கூறியது அப்படியே உண்மை என்று இராணுவ ஆய்வாளர் இக்பால் அத்தாஸ் தெளிவு படுத்தியிருக்கிறார்.

ஸ்ரீலங்கா இராணுவத்தின் பாதுகாப்பு நடவடிக்கைகளை விமர்சித்து நீண்ட காலமாகக் கட்டுரைகளை வரைந்து வருபவர் இக்பால் அத்தாஸ். இராணுவத்தின் உள் விவகாரங்களையும், ஆயுதக் கொள்வனவு மோசடிகள், ஊழல்கள் தொடர்பாகவும் பல விடயங்களை தணிக்கைக்கு இடையிலும் அவர் அம்பலப்படுத்தியதுண்டு. அதே வேளை— படைத் தளபதிகளும், பாதுகாப்புத் தரப்பினரும் தமக்குச் சாதகமான விடயங்களைப் பகிரங்கப்படுத்துவதற்கு சில தகவல்களை அவரது பத்தி மூலமாக வெளியிடுவது உண்டு.

'62 குழல்கள்' விவகாரத்தில் எவர் கூறுவது உண்மை? தரைப்படைகள் களத்தில் மிக மோசமாக பேரழிவுகளைச் சந்தித்துள்ள ஒரு சந்தர்ப்பத்தில் மூத்த படை அதிகாரி ஒருவர் புலிகளின் ஆயுத பலம் குறித்து வெளியிட்ட தகவலாக இதனைக் கொள்ளலாம்.

ஆனால் சண்டைகளில் மிக மோசமான சேதங்கள் தமது தரப்புக்கு ஏற்பட்ட சந்தர்ப்பங்களில் எல்லாம் புலிகள் மிக நவீன ஆயுதங்கள் மூலம் தாக்கினார்கள் என்று கூறுவது ஸ்ரீலங்கா படை அதிகாரிகளின் வழக்கமாகும்.

1999 இல் மன்னாரில் தள்ளாடி இராணுவ முகாம் மீது புலிகள் அகோர ஷெல் தாக்குதல் நடத்தினர். அதனால் அந்தப் படைத் தளத்தில் மிக மோசமான சேதங்கள் ஏற்பட்டன. புலிகள் வசம் 'பல்குழல் எறிகணை செலுத்திகள்' (எம்.பி.ஆர்.எல்) இருப்பதாக ஸ்ரீலங்கா படை அதிகாரிகள் அச் சமயம்தான் முதன் முறையாக ஒப்புக்கொண்டிருந்தனர். அது தொடர்பான விடயங்களை இராணுவ ஆய்வாளர் இக்பால் அத்தாஸே அச்சமயம் 'சண்டே டைம்ஸ்' பத்திரிகைகளில் வெளியிட்டிருந்தார்.

ஆனால் பல முனைகளில் இருந்து ஆட்டிலறி ஷெல்கள் மூலமே தாங்கள் தள்ளாடி முகாமைத் தாக்கியதாகப் புலிகள் அப்போது தெரிவித்திருந்தனர். இது பழைய கதை. இப்போது புலிகள் 62 குழல்கள் கொண்ட ரொக்கெட் செலுத்திகளைப் பெற்றிருப்பதாக படைத்தரப்பில் கூறப்படுகிறது.

மூத்த படை அதிகாரி ஒருவர்— களத்தில் சண்டையில் ஈடுபட்டிருக்கும் துருப்புகளை வழி நடததுகின்ற தளபதி ஒருவர்— இத் தகவலை வெளியிட்டிருப்பது படையினருக்கு ஏற்பட்ட சேதங்களுக்குக் காரணம் கூறும் வகையில் அமைந்திருந்தது. ஆயினும் அது எதிர்காலத்தில் களத்தில் புலிகளை எதிர்கொள்ளவுள்ள துருப்புக்களின் மனநிலையில் பெரிய தாக்கத்தை உண்டு பண்ணக் கூடியது என்பது கவனத்தில் கொள்ளப்படவேண்டியதாகும்.

'62 குழல்கள்' திடீரென 'ஆறு குழல்'களாகக் குறைக்கப்பட்டதற்கும் அதுவே காரணமோ என எண்ணத் தோன்றகிறது.

படையினரின் மனோ நிலையைப் படைத் தளபதியே குலைத்து விடக்கூடாது அல்லவா?

### வீதிகளில் அலையும் தாய்மார்

யாழ். மாநகர சுகாதாரப்பகுதிக்கும் மாநகரசபை நிர்வாகத்துக்கும் இடையே ஏற்பட்ட இழுபறி நிலை தொடர்பான விவகாரம் ஓய்ந்து போய்விட்டது.

சுகாதாரப் பகுதியில் கடமையாற்றி வேலையை இழந்துள்ள குடும்ப நல உதவியாளர்களை மீண்டும் கடமையில் இணைத்துக் கொள்வதற்கு யாழ். மாநகரசபை பல தடவைகள் அவகாசம் வழங்கி விட்டது.

ஆனால் அவர்கள் எவருமே மீண்டும் கடமைக்குத் திரும்பியதாகத் தெரியவில்லை.

கடைசியாக நடைபெற்ற மாநகர சபைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி வேலைக்குத் திரும்புவதற்கு அவர்களுக்கு மற்றொரு சந்தர்ப்பமும் வழங்கப்பட்டிருக்கிறது.

ஆரம்பத்தில் இந்தக் குடும்ப நல சேவையாளர்களின் கோரிக்கைகள் மீது நகர மக்களின் ஆதரவும், அனுதாபமும் இருந்தன.

ஆனால் பின்னர் இந்த விவகாரத்தில் சில அரசியல் சக்திகளின் தலையீட்டுக்கு இடமளிக்கப்பட்டதை அடுத்து இந்த விவகாரம் மீது பொதுமக்கள் கொண்டிருந்த மனிதாபிமானக் கண்ணோட்டம் மாறி விட்டது என்றே சொல்லலாம்.

இவர்கள் வேலைக்குத் திரும்பாவிட்டால் அந்த இடங்களுக்குப் புதிய தொண்டர்கள் நியமிக்கப்படுவர் என்று மாநகரசபை நிர்வாகம் கூறி இருக்கிறது.

சுகாதாரப் பகுதி விவகாரம் தொடர்பாக விசாரணை நடத்த வந்த வடக்கு— கிழக்கு மாகாண ஆளுநரின் பிரதிநிதி விசாரணைகளை முடித்துக் கொண்டு திரும்பிவிட்டார்.

விசாரணையின் முடிவுகள் இன்னமும் பகிரங்கப்படுத்தப் படவில்லை.




இந்த விவகாரம் ஓய்ந்து போய்விட்டாலும் யாழ். மாநகர குழந்தைகளின், தாய்மார்களின் சுகநலன் சிகிச்சைகள் இன்னமும் ஸ்தம்பித்துப் போயே இருக்கின்றன.

புதிய சுகாதார வைத்திய அதிகாரிகளின்கீழ் சிசிச்சைகள் அதற்கான நிலையங்களில் சீராக நடைபெறுவதாகக் கூறப்பட்டாலும் உண்மையில் நிலைமை வேறு விதமாகவே இருக்கிறது.

தாய்,சேய் நல சிகிச்சை என்பது தொடர்ச்சியான கவனிப்புடன் குறிக்கப்பட்ட கால ஒழுங்கின் பிரகாரம் வழங்கப்படவேண்டியது. அவ்வாறே முன்பு வழங்கப்பட்டும் வந்தது.

தற்போது இந்தச் சிசிச்சைகள் நடைபெறும் கால ஒழுங்கு பற்றி எதுவும் தெரியாத நிலையில் கைக்குழந்தைகளைச் சுமந்தவாறு பல தாய்மார்கள் தினமும் நகர வீதிகளில் அலைந்து திரிவதைக் காண முடிகிறது.

வார ஒழுங்கில், மாத ஒழுங்கில் குழந்தைகளுக்கு தடுப்பூசிகள் ஏற்றப்பட வேண்டும். மாநகரசபை நிர்வாக மட்டத்தில் ஏற்பட்ட சிக்கல்கள், எதுவும் அறியாத பிஞ்சுக் குழந்தைகளின் சீரான சிகிச்சை ஒழுங்குகளைப் பெரிதும் குழப்பிவிட்டிருக்கின்றன.

குடும்ப நல உதவியாளர்கள் வீடுகளுக்குச் சென்று கர்ப்பிணிகள், குழந்தைகளைப் பார்வையிட்டு ஆலோசனை வழங்குவதும் சிசிச்சைக்கான திகதிகள் மற்றும் கால ஒழுங்குகள் குறித்து அவர்களுக்கு அறிவிப்பதும் இப்போது நடைபெறுவதாகத் தெரியவில்லை.

சிசிச்சைகள் வழங்கப்படும் திகதிகள் மாற்றப்பட்டிருக்கின்றன. ஆனால் அது குறித்து தாய்மாருக்கு அறிவிக்கப்படவில்லை. சிகிச்சை நிலையங்களில் அது தொடர்பான அறிவிப்புப் பலகைகளையாவது வைக்கலாம். அப்படியும் செய்யப்படவில்லை.

எல்லாம் ஸ்தம்பித்துப் போய்விட்டதால் மாநகரத் தாய்மார்கள் பலரும் தாங்கள் குழந்தைகளுக்கான சிகிச்சைகளைப் பெற— தடுப்பூசி மருந்துகளை ஏற்ற— யாழ். ஆஸ்பத்திரி நோக்கிச் செல்வதைக் காணமுடிகிறது.

வீதிகளில் அலையும் இந்தத் தாய்மார்கள் குழந்தைகளின் அவலநிலை, தங்கள் கௌரவப் பிரச்சினைகளுக்காக முட்டிமோதி நிலைமையைக் குழப்பியடித்த அதிகாரிகளின் கண்களுக்குத் தெரியாமல் இருப்பதுதான் வியப்பு.

இதே வேளை கட்டாய லீவு வழங்கப்பட்ட மாநகர சபையின் முன்னாள் சுகாதார வைத்திய அதிகாரி யாழ். நகரில் தனியார் சிகிச்சை நிலையம் ஒன்றை ஆரம்பிக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருவதாகத் தெரிகிறது.

மாநகர சபையில் பணிபுரிந்து வேலை இழந்துள்ள குடும்பநல உதவியாளர்கள் பலருக்கும் அந்தச் சிகிச்சை நிலையம் இயங்கத் தொடங்கியதும் அங்கு வேலை வாய்ப்பு வழங்கப்பட இருப்பதாகவும் தகவல்.

யாழ். மாநகர மக்களின் மதிப்புப் பெற்ற சுகாதார வைத்திய அதிகாரியின் சேவை எந்த வகையிலாவது நகர மக்களுக்குத் தொடர்ந்து கிடைக்க இதன் மூலம் வாய்ப்பு ஏற்படலாம்.

கண்டிப்பான நிர்வாகி எனப் பெயர் பெற்ற மாநகர சபை ஆணையாளர் இராசா தணிகாசலத்துக்கு இடமாற்றம் வழங்கப்பட்டிருக்கிறது. அவருக்குப் பதிலாக மூத்த நிர்வாக அதிகாரி இ.இராமலிங்கம் யாழ்.மாநகரசபை ஆணையாளராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

கடந்த காலங்களில் மாநகர சபையில் இடம் பெற்று வந்த பல முறைகேடுகளைத் தனது கண்டிப்பான நிர்வாகத் திறமை மூலம் வெளிச்சத்துக்குக் கொண்டு வந்தவர் தணிகாசலம்.

இறுக்கமான நிர்வாக நடைமுறைகள் மூலம் அவர் வெளிக்கொணர்ந்த முறைகேடுகள் இனியும் தொடராமல்— தொடர இடமளிக்காமல்— பார்த்துக்கொள்ளும் பொறுப்பு புதிய ஆணையாளரையே சாரும்.

### தியேட்டர் ரிக்கெட் பிரச்சினை

எந்தப் பொருள்களுக்கும், சேவைகளுக்கும் உத்தரவாத விலையோ அல்லது கட்டுப்பாட்டு விலையோ குடாநாட்டில் காணமுடியாத ஒன்று.

தாம் நினைத்த விலைக்குப் பொருள்களை விற்பதில் வர்த்தகர்களும்—

கேட்கின்ற காசைக் கொடுப்பதில் பாவனையாளர்களும்—

பழக்கப்பட்டுப்போய் நீண்ட காலமாகி விட்டது.

பொருள்களின் விலைக்கட்டுப்பாட்டைக் கண்காணிக்க வேண்டிய அதிகாரிகள் ஏனோ தானோ என்று நடந்து கொள்கின்றனர்.

அத்தியாவசியப் பொருள்களின் விலைகளே இடத்துக்கிடம் வேறுபடும் நிலையில் ஏனைய ஆடம்பரப் பொருள்களின் விலைகள் பற்றிச் சொல்லவேண்டியதில்லை.

குடாநாட்டில் சிவில் நிர்வாகம் அமுலுக்கு வந்துவிட்டதாகக் கூறப்படுகிறது. ஒரு தசாப்தத்துக்கும் கூடிய காலம் செயற்படாமல் இருந்த திரை அரங்குகள் பலவும் இப்போது சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருக்கின்றன.

இந்தத் திரையரங்குகளில் காட்சிக்கான கட்டணங்கள், ஆசனங்களுக்கான கட்டணங்கள் இடத்துக்கிடம் வேறுபட்டே அறவிடப்படுகின்றன.

அண்மையில் சுன்னாகம் பகுதியில் உள்ள திரையரங்கு ஒன்றில் இந்தக் கட்டண விவகாரம் அடிதடியில் முடிந்திருக்கிறது.

அந்தத் திரையரங்கில் ரிக்கெட்டில் அச்சிடப்பட்ட கட்டணத்துக்கும் அறவிடப்படும் கட்டணத்துக்கும் இடையே அதிக வேறுபாடு இருந்ததைக் கண்டு அங்கு படம் பார்க்கச் சென்ற இளைஞர்குழு ஒன்று திரையரங்கின் நிர்வாகிகளிடம் விளக்கம் கேட்க முற்பட்டது.

அவ்வேளை அங்கு ஏற்பட்ட வாய்த் தர்க்கம் கைகலப்பாகியது.

அந்தத் தியேட்டரில் பின் ஆசனத்துக்கான ரிக்கெட்டுகள் வரிகள் உட்பட 29ரூபா என்று அச்சிடப்பட்டிருந்தபோதும் தம்மிடம் 35 ரூபா கட்டணம் அறவிடப்பட்டதாகக் கூறி சீறிப்பாய்ந்திருக்கின்றனர் அந்த இளைஞர்கள்.

முன் வரிசை ஆசனங்களுக்கும் இதுபோன்றே அதிகரித்த கட்டணம் அறவிடப்படுவதாக இளைஞர்கள் முறையிட்டிருக்கின்றனர்.

தியேட்டர் நிர்வாகிகளுக்கும், இளைஞர் குழுவுக்கும் இடையே வாய்த் தர்க்கம் ஏற்பட்டதை அறிந்து அங்கு விரைந்து வந்தனர் பொலீஸார்.

ஆனால் பல்கலைக்கழக மாணவர் உட்பட நியாயம் கேட்டு வாதாடிய அந்த இளைஞர் குழுவின் சீற்றத்தில் நியாயம் இருப்பதை உணர்ந்து கொண்ட பொலிஸார் ஒரு சிலரை விசாரித்துவிட்டு அங்கிருந்து அகன்று விட்டனர்.


சம்பந்தப்பட்ட திரையரங்கின் கட்டண வேறுபாடு தொடர்பாக குறித்த இளைஞர் குழுவினர் வலிகாமம் தெற்கு பிரதேச சபையிடம் விளக்கம் கேட்டிருக்கின்றனர்.

பிரதேச சபையால் திரையரங்கு மீது அறவிடப்படும் வரி விவரங்களைத் தெளிவுபடுத்துமாறும் இளைஞர்கள் கோரியுள்ளனர்.

தட்டிக் கேட்டால் மட்டுமே நியாயம் கிடைக்கும் என்ற நிலையிலேயே குடாநாட்டு நிர்வாகம் இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதற்கு இதுவே தக்க உதாரணம்.

— வலிகாமத்தான்

# வாக்கு வங்கிகள் சிதறியதால் தமிழக கட்சிகள் பரிதவிப்பு



கருணாநிதி

தமிழக சட்ட சபைக்கான தேர்தல் வியாழக் கிழமை நடைபெறுகிறது. மூன்று வாரகாலமாக தேர்தல் மேடைகளில் முழங்கியவர்கள் ஓய்வெடுத்துக் கொள்ளும் வேளை வந்துவிட்டது.

இந்த ஓய்வு அவர்களில் எத்தனை பேருக்கு நிரந்தரமான ஓய்வோ தெரியாது.

ஆட்சி நீடித்ததா? அல்லது ஆட்சி மாறியதா? இது பற்றியும் செய்திகள் வரும் நேரம் இது.

தேர்தலில் தி.மு.க அரசாங்கம் குதித்த போது வெற்றி அந்த அரசுக்கே என்ற நிலை இருந்தது. ஆயினும் அ.தி.மு.க தலைவி ஜெயலலிதாவின் தேர்தல் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டன. எனவே நிலைமையில் மாற்றம் ஏற்பட்டது என்று அரசியல் அவதானிகள் கருதினர்.

எதிர்பார்க்கப்பட்டபடி ஜெயலலிதா தனது வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்ட சம்பவத்தையே தனது வெற்றிக்கு உந்து சக்தியாக பயன்படுத்தினார்.

ஜெயலலிதா ஊழல்களின் ராணி. அதற்காகவே அவர் தண்டிக்கப்பட்டார். அவ்விதம் தண்டனை பெற்ற காரணத்தினால் அவர் தேர்தலில் போட்டியிட முடியவில்லை. ஆயினும் கருணாநிதி தன்னை வதைத்துவிட்டார் என்று கூக்குரலிட்டார். அதன் மூலம் மக்கள் மத்தியில் அனுதாப அலையை ஏற்படுத்தி தேர்தலில் வெல்ல முயன்றார். அது மட்டுமன்றி நானே அடுத்த முதலமைச்சர் என்றும் அறிவித்தார்.

இந்த அட்டகாச நாடக உத்தி மூலம் ஜெயலலிதா வெற்றி பெற்றால் அதன் தாக்கத்தை தமிழகமே அனுபவிக்க வேண்டிய கட்டம் வந்திருக்கிறது.

தேர்தல் பிரசாரங்கள் ஆரம்பித்த வேளையில் தி.மு.கவுக்கே வெற்றி வாய்ப்பு என்ற நிலை தென்பட்டது. ஆயினும் ஜெயலலிதாவின் ''ஒப்பாரி'' தமிழக மக்களின் மனோநிலையை மாற்றி விட்டது என்று பின்னர் வந்த ஆய்வுகள் தெரிவித்தன.

இதற்கிடையில் பல்வேறு பத்திரிகைகள் நடத்திய கணக்கெடுப்புகள் அ.தி.மு.க வுக்கு வெற்றி வாய்ப்பு இருக்கிறது என்று தெரிவித்தன. இத்தகைய கணக்கெடுப்புகள் அதிகமாகப் பலிப்பது கிடையாது. ஆயினும் ஜெயலலிதா ஆதரவாளர்களுக்கு குதூகலம் ஏற்பட்டிருக்கும்.

இதே வேளையில் தமிழக காவல்துறையினரின் புலன் ஆய்வுப் பிரிவினர் மொத்தமுள்ள 234 தொகுதிகளிலும் புள்ளி விவரம் கேகரித்திருக்கிறார்கள். அவர்களின் கணக்கெடுப்பின்படி ஆளும் தி.மு.க அரசாங்கமே மீண்டும் அமோக வெற்றி பெற்று ஆட்சிக்குவரும் என்று தெரியவந்திருக்கிறது. முதலமைச்சருக்கு தெரிவிக்கப்பட்ட ஆய்வறிக்கை அது.

இந்த ஆய்வுகள் எவ்வளவு தூரம் பலிக்கும் என்பது தேர்தல் வாக்களிப்பு நடைபெறும்போது இருக்கும் சூழ்நிலையைப் பொறுத்திருக்கிறது.

தி.மு.க தேர்தல் கூட்டங்கள் மிகவும் கலகலப்பாக நடந்திருக்கின்றன. கருணாநிதி அரசாங்கம் மேற்கொண்ட அபிவிருத்திப் பணிகள் மிகவும் விரிவான முறையில் வெளிப்படுத்தப்பட்டன.

ஆயினும் ஜெயலலிதாவோ மேடைகளில் ஏறிப்பிரசாரம் செய்யவில்லை. ஆடம்பர வாகனம் ஒன்றில் பவனி வந்து வீதியோரங்களில் நின்று உரை நிகழ்த்தினார். அவர் இவ்விதம் வீதியோரம் உரை நிகழ்த்த வரும்போது வெளியூர்களில் இருந்து ஆதரவாளர்கள் முன் கூட்டியே லொறிகளில் கொண்டுவரப்பட்டு கூட்டம் கூட்டமாக நிறுத்தப்பட்டார்கள் என்று எதிர்த்தரப்பினர் குற்றம் சாட்டினர்.

தி.மு.க கூட்டணி கட்சியினர் ஒரே மேடைகளில் ஏறிப் பிரசாரம் செய்தனர். ஆனால் அ.தி.மு.க கூட்டணி கட்சியினரோ ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்கவில்லை. ஜெயலலிதா மீதான அனுதாப அலையையே அவர்களும் நம்பியிருந்தனர். மூப்பனாரும் முடங்கிக்கிடந்தார் சோனியாவோ வரவில்லை.

ஆயினும் அவ்விதம் ஒரு அனுதாப அலை தமிழகத்தில் வீசவில்லை என்று தகவல் கணிப்புகள் தெரிவித்தன.

தமிழக அரசியல் கட்சிகள் ஜாதி அடிப்படையில் பிரிந்து இருந்தன. அந்தந்த ஜாதியினர் வாழும் பிரதேசங்களை மையமாகக் கொண்டு ஒவ்வொரு கட்சியும் வாக்கு வங்கிகளை வகுத்திருந்தன.

தமிழகத்தில் ஒரு வலுவான வாக்கு வங்கியைக் கொண்ட கட்சி பாட்டாளி மக்கள் கட்சி என்று கூறுவார்கள். அதன் தலைவர் டாக்டர் ராமதாஸ், தமது வன்னியர் ஜாதியினரின் வாக்கு வங்கியின் துணையுடன் 80 தொகுதிகளில் தமது அணிக்கு வெற்றி வாய்ப்புகளைத் தேடித்தர முடியும் என்று கூறியவர்.

ஆனால் அவருக்கு ஜெயலலிதா தந்த 27 தொகுதிகளைக் கட்டிக்காக்கவே அவர் பெரும் பாடு படவேண்டியதாகி விட்டது.

பாண்டிச் சேரியில் பாட்டாளி மக்கள் கட்சியே ஆட்சி அமைக்கும் என்ற வீராப்புடன் களத்தில் குதித்தார் டாக்டர் ராமதாஸ்.

ஜெயலலிதாவும் ஒரு தேர்தல் கூட்டு ஒப்பந்தத்தின் மூலம் பாண்டிச் சேரியை ராமதாஸுக்குச் சீதனமாகத் தருவதற்கு இணங்கினார். அதுவும் பாண்டிச் சேரி ஆட்சியைப் பிடித்து முதல் இரண்டரை வருடகாலம் பாட்டாளி மக்கள் கட்சியைச் சேர்ந்தவர் முதலமைச்சராக இருப்பார். எஞ்சிய இரண்டரை வருட காலம் அ.தி.மு.கவைச் சேர்ந்தவர் முதல்வராக இருப்பார். இதுவே அவர்களுடைய ஒப்பந்தம் ஆகும்.

ஆனால் இந்த ஒப்பந்தம் பாண்டிச் சேரி மக்களைக் கலக்கியெடுத்து விட்டது. எனவே பாண்டிச்சேரியைப் பிடிக்கும் ராமதாஸின் பேராசை வீணாகிவிட்டது என்று தேர்தல் புள்ளி விவரக் கணக்கெடுப்புகள் தெரிவிக்கின்றன. பாண்டிச் சேரியில் வழக்கம் போல ஒரு தொங்கு அரசாட்சியே ஏற்படப் போகிறது என்பது முடிவாகிவிட்டது.

தமிழகத்தில் கருணாநிதியின் ஐந்து வருடகால சீரான ஆட்சி அவருக்குக் கை கொடுக்கும் என்று ஆளும் கட்சியினர் நம்பியிருக்கிறார்கள்.

வாக்கு வங்கி சிதறியதால் ராமதாஸ் மாத்திரமல்லர் ஏனைய ஜாதிக்கட்சிகளின் தலைவர்களும் படாத பாடு பட்டனர்.

மூப்பனாரின் வாக்கு வங்கியை ஜெயலலிதா சூறையாடி விட்டது தனியான கதை.

வாக்கு வங்கிகள் சிதறியதற்கு அந்தந்த ஜாதிகள் மத்தியில் ஏற்பட்ட ஒற்றுமை இன்மையே காரணம் எனலாம். இந்த ஒற்றுமை இன்மையினால் தமிழகத்தில் எதிர்காலத்தில் நிலையான ஆட்சி நிர்வாகங்கள் ஏற்படாமல் போகக்கூடும் என்று அரசியல் விமர்சகர்கள் கூறுகிறார்கள்.



ஜெயலலிதா

தமிழகத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரங்களை அவதானித்து, தேர்தல் முடிவு எப்படி இருக்கும் என்று சகலரும் கணித்திருப்பார்கள். தேர்தலுக்கு முந்திய இரு தினங்களும் தேர்தல் கூட்டங்களை எவரும் நடத்த முடியாது.

ஆயினும் அந்த நாட்களில் வசதியுள்ள வேட்பாளர்கள் தமது வாக்காளர்களுடன் எப்படியாவது ''ரகசியம்'' பேசிவிடுவார்கள். தேர்தலுக்கு முதல் நாள் இரவு எத்தனையோ தொகுதிகளின் வெற்றி தோல்வியை நிர்ணயித்து விடுவதுண்டு.

எப்படியோ தமிழகத்தில் ஒரு நிலையான ஆட்சி ஏற்பட வேண்டும். அதுதான் முக்கியம்.

— கதாசி


வாசக நெஞ்சங்களுக்கு மகிழ்ச்சியான செய்தி!


அடுத்த வாரம் முதல் உங்கள் அபிமான சுடர் ஒளியில்

சூடு, சுவை, சுவாரஸ்யம், விறுவிறுப்பு, திடீர்த் திருப்பங்களுடன்

மு.சிவநேசன் எழுதும்

'முத்தமிடும் ரோஜா இதழ்கள்'

நெஞ்சம் நிறைந்த தொடர்கதை வாசிக்கத் தவறாதீர்கள்.





தலைநகரில்

Maths / Science & Technology
O/L 2001, O/L 2002


| Subject | O/L 2001 | Grade 10 |
|---|---|---|
| Maths | Fri 5.00-7.00 | Fri 3.00-5.00 |
| Science | Thu 5.00-7.00 | Thu 3.00-5.00 |

விரிவுரை W.L.Rajaratnam

EPI

316, காலி வீதி, கொழும்பு - 04.
தொலைபேசி:075-516790
(St. Peters கல்லூரிப்பு முன்னால்)


## உதயன் பத்திரிகை நிறுவன முகாமையாளர் மரணம்



க.நந்தகுமார்

''உதயன்'' வெளியீட்டு நிறுவனத்தின் சிரேஷ்ட நிர்வாக அதிகாரிகளில் ஒருவரும் முகாமையாளருமான கனகையா நந்தகுமார் கடந்த 6ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்த இராணுவ வாகன விபத்தில் அகால மரணமானார்.

யாழ் சென்.ஜோன்ஸ் கல்லூரி யின் பழைய மாணவரான 56 வயதான க.நந்தகுமார் தனது கல்லூரிக் கல்வியை முடித்துக் கொண்ட பின்னர் ஒரு பத்திரிகையாளராக வீரகேசரிப் பத்திரிகையில் இணைந்து 8 வருடகாலம் அலுவலகச் செய்தியாளராக சேவையாற்றினார். இதே காலப் பகுதியில் லண்டன் சர்வ தேசக் கணக்காளர் நிறுவனத்தில் (ஏ.ஐ.ஏ) மாணவராகச் சேர்ந்து மூன்றாம் பகுதியில் சித்தியடைந்து ஒரு கணக்காளரானார்.

முன்னாள் படைவீரர் நிறுவனம், வொலங்கா லிமிடட் ஆகியவற்றில் பொறுப்பான பதவிகளை வகித்த பின்னர் வெனிசுலா குறூப் நிறுவனத்தில் 10 வருடங்கள் முகாமையாளராகப் பதவி வகித்தார்.

உதயன் வெளியீட்டகத்தில் நிர்வாக உத்தியோகத்தராக சேர்ந்த இவர் கடந்த ஆறு வருடங்களாக நிர்வாகம் மற்றும் ஆளணிக்குப் பொறுப்பான முகாமையாளராகப் பதவி வகித்தார்.

சிறந்த விளையாட்டு வீரரான இவர். குடாநாட்டில் சிறந்த கிரிக்கெட் மத்தியஸ்தராக மதிக்கப்பட்டார். யாழ் கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்கத் தலைவராகவும், யாழ் ரொட்டறிக் கழகத்தில் கழகச் சேவை இயக்குநராகவும் சேவை புரிந்தவர்.

இவரின் இறுதிச் சடங்குகள் 8ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றன.


மலைநாட்டில்

Maths / Science & Technology
O/L 2001, O/L 2002, Grade 9

| Subject | O/L 2001 | O/L 2002 | Grade 9 |
|---|---|---|---|
| Maths | Sat 1.30-3.30 | Sun 10.30-12.30 | Mon / Tue 4.45-5.30 |
| Science | Sat 11.30-130 | Sun 8.30-10.30 | Mon / Tue 4.45-5.30 |

விரிவுரை W.L.Rajaratnam

EPI

87/1A, கட்டுகஸ்தோட்ட வீதி, கண்டி. தொலைபேசி:072-500475
(வித்தியார்த்த கல்லூரி முன்னால்)



என்டெனா பொருத்துதல்




Get it Installed by professionals

TELECAVE (PVT) LTD.
PETTAH : 445377, 439467 (TEL/FAX)
KOTAHENA : 478742, 075-352656 (TEL/FAX)
E-mail : telecave@eureka.lk



அவசர திருத்தங்கள்




Guaranteed repair & service by trained technicians

TELECAVE (PVT) LTD.
PETTAH : 445377, 439467 (TEL/FAX)
KOTAHENA : 478742, 075-352656 (TEL/FAX)
E-mail : telecave@eureka.lk

சுடர் ஒளி

13 மே, 2001

36/2, பிரெட்றிக்கா வீதி, கொழும்பு-06
டெலிபோன் - பாக்ஸ் : 501409/ 599834
E-mail: sudar@uthayan.com

# அன்று தமிழர்களுக்கு இன்று முஸ்லிம்களுக்கு

சிறுபான்மை மக்கள் மனதில் மாறாத வடுவையும், நாட்டு வரலாற்றில் நீக்க முடியாத கறையையும் ஏற்படுத்திய இரண்டாவது சம்பவம் கடந்த முதலாம் திகதி நடந்துவிட்டது.

மாவனல்லையில் முஸ்லிம்களுக்கு எதிராகச் சிங்களவர்கள் நடத்திய இனக் கலவரத்தையே இங்கு குறிப்பிடுகிறோம்.

சமீப காலத்தில் இப்படியான முதலாவது சம்பவம் 18 வருடங்களுக்கு முன்னர் 1983 இல் நடந்தது. தமிழ் மக்களுக்கு எதிராக சிங்களவர்கள் நடத்திய கலவரம் அது. கொழும்பில் உச்சக் கட்டத்தை அடைந்தது.

இந்த நாட்டின் இரண்டு சிறுபான்மைச் சமூகங்களான தமிழ், முஸ்லிம் மக்கள் மீது பெரும்பான்மையின சிங்களவர்கள் தங்கள் கைவரிசையைக் காட்டிவிட்டார்கள்.

அதன் மூலம் அவர்கள் தங்களுடைய சூப்பர் அந்தஸ்தையும், மேலாண்மையையும் நிலை நிறுத்த முயன்றிருக்கிறார்கள்.

மாவனல்லை முஸ்லிம்கள் தாக்கப் பட்டார்கள். முஸ்லிம் வீடுகளும் கடைகளும் சொத்துகளும் சூறையாடப்பட்டன.

இறை இல்லங்களும் பல வாகனங் களும் சேதமாக்கப்பட்டன.

கலவரத்தில் இரண்டு முஸ்லிம்கள் உயிர் இழக்கவும் நேர்ந்தது. அது மிகப் பெரிய சோகம்.

சம்பவங்கள் நடந்த போது பொலிஸாரும் பாதுகாப்புப் படையினரும் தடுப்பு நடவடிக்கை எடுக்காமல் சும்மா பார்த்துக் கொண்டு இருந் தனர் என்று குற்றம் சாட்டப்படுகிறது.

பாதிக்கப்படுபவர்கள் முஸ்லிம்கள் தானே நமக்கென்ன என்ற திமிரா?

மாவனல்லையில் இனக்கலவரம் நடந்த தற்குப் பல காரணங்கள் கூறப்படுகின்றன.

மாவனல்லையில் முஸ்லிம்கள் வர்த்தகத் துறையில் வெகுவாக மேலோங்கி இருக்கிறார்கள். இவர்களின் வர்த்தக பொருளாதார பலத்தை முறியடிக்க செல்வாக்குள்ள அரசியல்வாதி ஒருவரின் ஆசீர்வாதத்துடன் பொறாமைக்காரர்கள் நீண்ட காலமாகவே திட்டம் தயாரித்து வந்தார்கள். அந்தத் திட்டத்தை இப்போது நிறைவேற்றிவிட்டார்கள். அவ்வளவு தான்!

கலவரத்துக்கு இப்படி ஒரு வலுவான காரணமும் கூறப்படுகிறது.

1983இல் கொழும்பில் தமிழர்களுக்கு எதிராக நடந்த கலவரத்தின் போது புறக் கோட்டையில் தமிழர்கள் கொண்டிருந்த வர்த்தக ஆதிக்கத்தை முறியடிக்கவே பெரும்பாலான தமிழ்க் கடைகள் கொள்ளையடிக்கப்பட்டுப் பின்னர் அவை எரிக்கப்பட்டன.

மாவனல்லையில் முஸ்லிம்கள் தமது சொத்து சுகங்களை எல்லாம் இழந்து இன்றும் பயப் பிராந்தியுடனேயே இருக்கிறார்கள்.

அவர்களுக்கு ஆதரவு தெரிவித்தும் இனக் கலவரத்தைக் கண்டித்தும் கொழும்பு மருதானையிலும் மற்றும் பல இடங்களிலும் முஸ்லிம்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள். அதை அரசு கடும் நடவடிக்கை எடுத்து உடனுக் குடன் அடக்கிவிட்டது. ஆனால் மாவனல்லை யில் அப்படிச் செய்யவில்லையே ஏன்?

அங்கே பாதிக்கப்பட்டவர்கள் முஸ்லிம்கள் என்பதாலா?

அழிவு நடந்த பின்னர் அரசு வருத்தம் தெரிவிப்பதும், பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்ட ஈடு வழங்கப்படும் என்று உறுதி கூறுவதும் போதுமா? உயிர் இழப்பை எப்படி ஈடுசெய்வது?

மாவனல்லை இனக் கலவரத்துக்குக் காரணமாக இருந்தவர்களையும், அடாவடித்தனங் களில் ஈடுபட்டவர்களையும் கண்டுபிடித்து அவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும். குற்றவாளிகளுக்குக் கடும் தண்டனை வழங்கப்பட வேண்டும். வருங்காலத்தில் நாட்டின் ஏனைய பகுதி களிலும் இப்படியான சம்பவங்கள் நடவா திருக்க ஆவன புரிய வேண்டும்.

தமிழர்களும் முஸ்லிம்களும் எண்ணிக் கையில் சிறுபான்மையினராக இருந்தாலும் அவர்களும் இந்த நாட்டு மக்கள் தான். அவர்கள் அச்சம் இன்றி சுதந்திரமாகவும் சிங்களவர் களோடு சமத்துவமாகவும் வாழ உரிமையுடை யவர்கள். அதை உறுதிப்படுத்த வேண்டியது அரசின் கடமையேயாகும்.

# அரசின் சமாதான வேஷம் முழு உலகும் கண்டு கோபம்

இனப்பிரச்சினைக்கு எப்படி அரசாங்கம் தீர்வுகாண விழைகிறது என்ற உண்மை உலகிற்கு இப்போது நன்றாகவே தெரியவந்து விட்டது.

சமாதானப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு என்று சொல்லிக்கொண்டு இராணுவ ரீதியா கத் தீர்வு காண்பதற்கு வேண்டிய எல்லா முயற்சிகளையும் அரசாங்கம் மேற்கொண்டு வருகிறது. இலங்கையில் உள்ளவர்களும் வெளியுலகில் உள்ள ஒரு சிலரும் மட்டுமே தெரிந்திருந்த இந்த விஷயம் இப்போது சர்வதேச சமூகம் முழுவதற்கும் தெளிவாகத் தெரியவந்துவிட்டது.

அரசாங்கத்தின் சமாதான வேஷம் தம்மை ஏமாற்றுவதற்குத்தான் என்பதைச் சர்வதேச சமூகம் புரிந்துகொண்டுள்ளது. அதனால் அரசாங்கத்தின் மீது சர்வதேச சமூகம் கடும் போக்கைக் காட்டி வருகிறது.

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கடந்த வாரம் அமெரிக்காவில் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் கொலின் பவலைச் சந்தித்துப் பேசினார்.

வழமையான தனது பல்லவியை அவர் பாடினார். புலிகளுடன் பேசி பிரச்சினைக்குத் தீர்வுகாண அரசாங்கம் தயாராக இருக்கிறது. பேச்சுவார்த்தைக்காக அரசாங்கத்தின் கதவுகள் எப்போதும் திறந்து இருக்கின்றன. இந்தப் புலிகள்தான் பேச்சுவார்த்தைக்கு வர மறுக்கிறார்கள் என்று அமைச்சர் கதிர்காமர் கொலின் பவலிடம் எடுத்துக்கூறினார்.

கொலின் பவல் எல்லாவற்றையும் பொறு மையாகக் கேட்டுக்கொண்டு இருந்துவிட்டு அமைச்சர் கதிர்காமர் முன் ஒரு குண்டைத் தூக்கிப்போட்டார்.

இலங்கையின் இனப்பிரச்சினைக்குப் போர் மூலம் தீர்வுகாண முடியாது. போரை நிறுத்திப் பேச்சுவார்த்தை நடத்தி சமாதானத் தீர்வுகாண வேண்டும் என்பதையே அமெ ரிக்கா விரும்புகிறது என்றார் கொலின் பவல்.

தமிழீழ விடுதலைப்புலிகள் தமது நான்கு மாத ஒருதலைப்பட்ச யுத்தநிறுத்தத்தை நீடிப்ப தில்லை என்று அறிவித்த கையோடு அரசாங்கம் ஆனையிறவைக் குறிவைத்து பளை நோக்கி அக்கினிச் சுவாலை தாக்குதல் நடவடிக்கையை ஆரம்பித்தது அல்லவா?

அந்த விடயத்தில் அரசாங்கம் புலிகளின் பலத்தைக் குறைத்து மதிப்பிட்டு விட்டு ஆழமறியாமல் காலை வைத்துப் பெரும் இழப்புகளையும் மோசமான பின்னடை வையும் சந்தித்தது. அவற்றால் அவதிப்பட்டது.

அவை வேறு கதைகள். அக்கினிச் சுவாலைத் தாக்குதல் நடவடிக்கை தோல்வியில் முடிந்த பின்னரே அமைச்சர் கதிர்காமர் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் கொலின் பவலைச் சந்தித்துப் பேசினார்.

பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வு என்று சதா சமாதான உச்சாடனத்தைச் செய்து கொண்டு இருக்கும் அரசு, நன்கு திட்டமிட்டு அக்கினிச் சுவாலைத் தாக்குதல் நடவடிக்கையை ஆரம்பித்தது ஏன்?

இந்தக் கேள்வியை அமைச்சர் கதிர்காமரிடம் கேட்டுத் தம்மைத் தேடி வந்த விருந்தாளியைச் சங்கடப்படுத்த கொலின் பவல் விரும்பவில்லை.

என்றாலும் கதிர்காமரின் உள்ளத்தில் ஓங்கி அடித்து "இதுதான் உங்கள் அரசின் சமாதான நாட்டமா?" என்று இடித்துக் கேட்கும் தோரணையில் கருத்து வெளியிட்டார்.

இதுவரை காலமும் அரசாங்கமும் கதிர்காம ரும் உலகிற்குப் பறைசாற்றி வந்த வாதங்களையே கதிர்காமரின் காதில் போட்டுவைத்தார் கொலின் பவல்.


சந்திரிகா

இராணுவ ரீதியில் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாது. பேச்சுவார்த்தை மூலமே தீர்வுகாண வேண்டும் என்று அவர் கூறினார். கதிர்காமர் அதன் உட்பொரு ளைப் புரிந்துகொண்டார். உடனே பேச்சு சர்வதேச விவ காரங்களுக்குத் தடம் மாறியது.

ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம். அமெரிக்கா வைப் போலவே உலக நாடுகள் அனைத்தும் இப்போது இலங்கை அரசின் மீது அனுதாபத் துக்குப் பதிலாக ஆக்ரோஷம் கொண்டுள்ளன. அதை அந்த நாடுகள் இன்னும் வலுவாக வெளிக்காட்டத் தொடங்கவில்லை.

குறிப்பாக எமது அண்டை நாடான இந்தியாவை எடுத்துக் கொண்டால் அந்த நாடுகூட அக்கினிச் சுவாலை 1 தாக்குதல் மேற்கொண்டதை வரவேற்கவில்லை.

இத்தனைக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை அமெரிக்காவைப் போல தானும் தடை செய்த நாடு இந்தியா.

ஜனாதிபதி ஜே.ஆர் ஜயவர்த்தனாவின் ஆட்சிக்காலத்தில் இந்திய அமைதிகாக்கும் படையை இலங்கைக்கு அனுப்பி புலிகளுடன் மோத வைத்து தனது கையைத் தானே சுட்டுக் கொண்ட நாடு அது.

அந்த நாடு கூட புலிகளுக்கு எதிராக அரசாங்கம் அந்தச் சமயத்தில் (புலிகளின் ஒரு தலைப்பட்ச யுத்த நிறுத்த முடிவு காலத்தில்) அக்கினிச் சுவாலை தாக்குதல் நடவடிக்கையை ஆரம்பித்ததை முறையற்றது என்றே கருதியது.

ஒருவருடத்துக்கு முன்னர் தமிழீழ விடுதலைப் புலிகளின் அகோரத்தாக்குதலுக்கு நின்று பிடிக்க முடியாமல் அரசாங்கப்படை ஆனையிறவை புலிகளிடம் பறிகொடுத்துவிட்டு யாழ்ப்பாணத் துக்கு பின் வாங்கிச் சென்றது அல்லவா?

புலிகள் யாழ்ப்பாணத்தையும் சுற்றி வளைத்தபோது படைகள் பொறிக்குள் சிக்கிய மாதிரி ஆகிவிட்டது.

அங்கிருந்து படைகளை மீட்டு எடுக்க எண்ணிய அரசு அதற்கு உலக நாடுகளின் உதவியை நாடியது.

அப்போது உதவ முன்வந்த உலக நாடுகளில் இந்தியாவும் ஒன்று.

பின்னர் இந்தியா கணிசமான இராணுவ உபகரண உதவியையும் இலங்கைக்கு வழங்கியது. சில படைப்பிரிவுகளுக்கு பயிற்சியும் வழங்கியது.

அப்படியிருந்தும் இலங்கையில் இனப் பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வுதான் காண வேண்டும் என்று வற்புறுத்தி வந்தது.

நோர்வே அரசு மேற்கொண் டுள்ள சமாதான முயற்சிக்கு இந்தியா சில சமயங்களில் சில சந்தேகங்களை வெளியிட்டுள்ள போதிலும் தொடர்ந்து ஆதரவு அளித்து வருகிறது.

அப்படிப்பட்ட இந்தியாவே அர சாங்கத்தின் அக்கினிச் சுவாலைத் தாக்குதலுக்குப் பின்னர் மனம் உடைந்து போய் இருக்கிறது.

ஆயின் இலங்கைக்கு நவீன போர் விமானங்கள், ஹெலிகொப்டர்கள், கப்பல்கள், தாங்கிகள், பல் குழல் ரொக்கெட் லோஞ்சர்கள் முதலானவற்றைத் தேவை அறிந்து முன்னர் தாராளமாக வழங்கிய உலக நாடுகள் சும்மா இருக்குமா?

புலிகள் சமாதானத்துக்காக ஒரு தலைப்பட்ச யுத்த நிறுத்தத்தை அறிவித்து அதை நான்கு மாதங்களாக அனுஷ்டித்து வந்தார்கள். அரசும் அதைச் செய்து சமாதானப்பேச்சுக்கு ஏற்ற சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும் என்று திரும்பத் திரும்பக் கேட்டார்கள்.

அது அரசின் காதில் விழவில்லை. புலிகளின் யுத்தநிறுத்த காலத்தில் அரச படைகள் புலிகள் மீது பல தாக்குதல்களை நடத்தின.

அவர்கள் தங்களது யுத்த நிறுத்தம் அரசின் மனதை மாற்றிச் சமாதான வழிக்கு அதை திருப்பவில்லை என்பதைக் கண்டதும் அலுத்துப் போய் இனிப்போர் நிறுத்த நீடிப்பு இல்லை என்று அறிவித்தார்கள். உடனே அரசாங்கம் அக்கினிச் சுவாலை1 தாக்குதலை ஆரம்பித்தது.

அதுவும் தாம் முந்திய தேவைக்கு வழங்கிய நவீன ஆயுதங்கள் கொண்டே தாக்குதலை அரசு முடுக்கி விட்டது என்றால் அந்த உலக நாடுகள் கொதிப்படையாமல் இருக்குமா?

அரசின் சமாதான வேஷத்தால் தாம் ஏமாற்றப்பட்டு விட்டோமே என்று உலக நாடுகள் வேதனை அடைய மாட்டாவா?

புலிகள் இயக்கம் ஒரு தலைப்பட்ச யுத்த நிறுத்தம் மூலம் சமாதான வேஷம் போடுகிறது என்று உலகை நம்ப வைத்து வந்த அரசு இன்று தன்னைத் தானே ஓர் இக்கட்டான நிலைக்குள் தள்ளி விட்டுவிட்டு மீள முடியாமல் தவிக்கிறது.

வினை விதைத்தால் தினை கிடைக்குமா? வினையைத் தானே அறுவடை செய்ய வேண்டும்!

காண்டீபம்

# பாலாவின் தகவலோடு வருகிறார் சொல்ஹெய்ம்


அன்டன் பாலசிங்கம்

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்டன் பாலசிங்கத்தின் தகவலுடன் மீண்டும் கொழும்பு வருகிறார் நோர்வேயின் விசேஷ சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம்.

பாலசிங்கத்தின் தகவலை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்குத் தெரிவித்து அவரின் கருத்தை அறிவதே சொல்ஹெய்மின் கொழும்பு விஜயத்தின் முக்கிய நோக்கம்.

அவர் எந்த நேரத்திலும் திடீரென்று வந்து இறங்கலாம்.

கடந்த மாத இறுதியிலும் எரிக் சொல்ஹெய்ம் கொழும்பு வந்திருந்தார்.

ஜனாதிபதி எதிர்க்கட்சித் தலைவர், இந்திய, அமெரிக்க, கனடா தூதுவர்கள் ஆகியோருடன் சொல்ஹெய்ம் கலந்துரையாடினார்.

அது அவர் எதிர்பார்த்த பலனை அளிக்க வில்லை. குறிப்பாக ஜனாதிபதியுடனான பேச்சு சொல்ஹெய்முக்குப் படு ஏமாற்றத் தையே அளித்தது.

அக்கினிச் சுவாலை தாக்குதல் நடவடிக் கையில் அரசு தோல்வி கண்டு இருந்த சமயத்திலேயே ஜனாதிபதியை சொல்ஹெய்ம் சந்தித் துப் பேசினார்.

அப்போது ஜனாதிபதிக்கு, உலக நாடுகள் இலங்கை அரசு மீது கோபமடைந்திருந்த சமாச்சாரம் சரிவரத் தெரியவரவில்லை.

தாக்குதல் தோல்வியால் அவருக்கு விரக்தி வேறு.

ஒருமுறை தோல்வி என்றால் இப்படி இறங்கிவிடுவதா? முந்திய நிலையிலிருந்து மாற ஜனாதிபதி தயாராக இருக்கவில்லை.

யுத்தநிறுத்தம், பொருளாதாரத் தடை, புரிந் துணர்வு உடன்படிக்கை, புலிகள் இயக்கம் மீதான தடை இவைபற்றி எல்லாம் சில விட்டுக்கொடுப்பு களையும் சரிக்கட்டல் உபாயங்களையும் முன்வைத் துப் பார்த்தார் சொல்ஹெய்ம். பலன் இல்லை. திரும்பிப் போய்விட்டார். லண்டன் ஊடாகவே நோர்வே சென்றார். என்றாலும் அன்டன் பால சிங்கத்தைச் சந்தித்துப் பேசவில்லை. கொழும்புப் பேச்சுவார்த்தை பற்றி சொல்வதற்கு புதிதாக எதுவும் இல்லை என்றதால் பேசாமல் போய்விட்டார்.

என்றாலும் பின்னர் அன்டன் பாலசிங்கமும் சொல்ஹெய்மும் தகவல் பரிமாறிக் கொண்டார்கள்.

அரசின் நிலை எதுவாக இருந்தாலும் புலிகள் இயக்கம் போரை நிறுத்திப் பேச்சு வார்த்தை மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காணவே இன்னும் விரும்புகிறது.

போர் தொடருமானால் தமிழ் மக்கள் இனியும் கஷ்டங்களைத் தாங்கமாட்டார்கள். போர் செய்யும் உறுதியும் பலமும் தகுதியும் இருந்தாலும் மக்கள் நலனுக்காகப் புலிகள் இயக்கம் சமாதானத் தீர்வையே நாடுகிறது.

புலிகள் மக்களுக்காக அவர்களின் பிரதிநிதிகளாகப் பேசுவதற்கு புலிகள் இயக்கம் மீதுள்ள தடை நீக்கப்படவேண்டும்.


சொல்ஹெய்ம்

சண்டை பிடித்துக்கொண்டு பயனுள்ள பேச்சுக்களில் ஈடுபடமுடியாது. அதனால் பேச்சு வார்த்தைக்கு யுத்த நிறுத்தம் வேண்டும்.

மக்களின் கஷ்டங்களைப் போக்குவதற்கு பொருளாதாரத் தடை முற்றாக நீக்கப்பட வேண்டும்.

இவற்றை உறுதி செய்யும் வகையிலான புரிந்துணர்வு உடன்படிக்கையை இலங்கை அரசு (நோர்வே ஆரம்பத்தில் தயாரித்த மாதிரியே) ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இந்த முன் தேவைகளை நிறைவேற்றினால் எந்த நேரத்திலும் புலிகள் பேச்சுக்குத் தயார்.

இதுதான் எரிக் சொல்ஹெய்மிடம் அன்டன் பாலசிங்கம் தெரிவித்த தகவல்.

முதலில் போர் நிறுத்தம் அப்புறம் பேச்சுவார்த்தை என்கிறார்கள் புலிகள்.

முதலில் பேச்சு; பேச்சின்போது போர் நிறுத்தம் என்கிறது அரசு. இருதரப்பினரும் பேச்சுவார்த்தை மேசைக்குச் செல்வது, அங்கே பேச்சு தொடங்குவதற்கு முன்னர் போர் நிறுத்தத்தை அறிவித்தால் எப்படி?

மக்களுக்காக, மக்கள் பிரதிநிதிகளாக சுதந்திரமாக பேசுவதற்குத்தானே புலிகள் தமது இயக்கம் மீதான தடையை நீக்கக்கோருகிறார்கள்.

பேச்சுவார்த்தை ஆரம்பமாகி, முடியும்வரை இயக்கத்தடையை நிறுத்தி வைத்திருந்தால் எப்படி?

(21 ஆம் பார்க்க)

# ஈ.பி.டி.பியின் கூட்டத்துக்கு ஏன் இந்தப் பாதுகாப்பு?

யாழ். குடாநாடு அரசுப்படைகளின் கட்டுப்பாட்டுக்குள் வந்த பிறகு இந்தத் தடவை தான் மே தினம் சூடுபிடித்தது.

தமிழ் அரசியல் கட்சிகள் பலவும் தமக்கு ஆதரவான தொழிற்சங்கங்களுடன் இணைந்து மே தினக் கூட்டங் களை நடத்தி முடித்துள்ளன.

மிகப் பெரும் ஏற்பாட்டிலான மேதினக் கூட்டத்தையும் பேரணியையும் ஈ.பி.டி.பி அமைப்பு நடத்தியது. மிகப் பிரமாண்டமான முறையில் தனது மேதினக் கூட்டத்தை நடத்துவதற்கான அறிவிப்பை மே தினத்துக்கு ஒரு சில தினங்களுக்கு முன்னரே ஈ.பி.டி.பி பகிரங்கப்படுத்தியது.

ஈ.பி.டி.பியின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேச சபைகளுடன் இணைந்து மேதினப் பேரணிக்கும், பொதுக்கூட்டத்துக்கும்பெரிய அளவில் ஏற்பாடுகள் நடந்தன.

வழமையாக ஈ.பி.டி.பி அமைப்பு ஏற்பாடு செய்யும் பொது வைபவங்கள் பெரும்பாலும் யாழ். மத்திய கல்லூரிப் பகுதியிலேயே இடம்பெறுவது வழக்கம்.

பாதுகாப்பு ஏற்பாடுகளை இலகுவாக நடைமுறைப் படுத்தக்கூடிய வசதிகளைக்கருத்திற்கொண்டுவைபவங்கள் அங்கு நடத்தப்பட்டு வந்தன.

ஆனால் இந்தத் தடவை மே தினப் பொதுக் கூட்டத்தையும், கலைநிகழ்ச்சிகளையும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் ஈ.பி.டி.பி நடத்தியது.

மேதினத்தன்று காலை முதலே யாழ். இந்துக் கல்லூரி அமைந்துள்ள நகரப் பகுதி பாதுகாப்புக் கெடுபிடிகளால் கலவரப்படத் தொடங்கியது. நகரின் சில பகுதிகளில் வீதித் தடைகளும் ஏற்படுத்தப்பட்டன.



ஈ.பி.டி.பி.யின் அனுசரணையுடன் வடக்கு– கிழக்கு மாகாண அரசாங்க பொது சிற்றூழியர் சங்கம் திருமலையில் நடத்திய மே தினப் பேரணி

ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமும் வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு–கிழக்குத் தமிழ் விவகார அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா மேதினத்துக்கு ஓரிரு தினங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்துக்கு வந்து அங்கு தங்கியிருந்ததும்– மே தினத்தை ஒட்டிய பாதுகாப்புக் கெடுபிடிகள் நகரப் பகுதியில் அதிகரித்துக்காணப்பட்டதும்– இந்துக்கல்லூரியில் நடந்த பொதுக் கூட்டத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் கலந்து கொள்ளக் கூடும் என்ற ஊகத்தை மக்கள் மத்தியில் ஏற்படுத்தி இருந்தது.

ஈ.பி.டி.பி யின் ஊர்திப்பவனியும் பேரணியும் நல்லூர் கந்தசுவாமி கோயிலடியில் இருந்து யாழ். இந்துக் கல்லூரி மைதானம் வரை நடைபெற்றது.

அலங்கார ஊர்தியில் நூற்றுக்கும் மேற்பட்ட வாகனங்களில் பொதுமக்களின் அன்றாடப் பிரச்சினைகள் சித்திரிக்கப்பட்டிருந்தன.

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த பல்வேறு சங்கங்கள், அமைப்புகளின் சார்பில் ஊர்திகள் பவனியில் இடம்பெற்றன.

வெளி இடங்களில்இருந்துவந்த ஊர்திகள் பவனியில் இணைந்து கொள்வதற்கு முன்னர் நல்லூர்ப் பகுதியில் வைத்து விசேட பொலிஸ் குழு ஒன்று அவற்றைப் பரிசோதித்தது. அலங்கரிக்கப்பட்ட ஊர்திகளில் வெடிகுண்டுகள் எடுத்துவரப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகித்த பொலிஸார் அவற்றைத் துருவித் துருவிச் சோதனையிட்டனர்.

பேரணி நடந்த வீதிகளிலும் இந்துக் கல்லூரி சூழலிலும் பொலிஸாரும் படையினரும் குவிக்கப்பட்டிருந்தனர்.

கூட்டத்தில் ஈ.பி.டி.பி பிரமுகர்களும் மற்றும் தொழிற்சங்கப்பிரதிநிதிகளும் உரையாற்றிய பின்னர் நள்ளிரவு தாண்டி கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. கலை நிகழ்ச்சிகள் நடந்தவேளை மக்கள் கூட்டம் அங்கு அதிகரித்துக்காணப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் அரசியல் கட்சிகள் நடத்தும் வைபவங்களுக்கு – குறிப்பாக ஈ.பி.டி.பி அமைப்பு ஏறபாடு செய்யும் நிகழ்ச்சிகளுக்கு கூடுதல் பாதுகாப்பு வழங்க வேண்டிய பெரும் பொறுப்பு யாழ். பொலிஸாருக்கு ஏற்பட்டுவிடுகிறது.

ஈ.பி.டி.பியின மேதினக் கூட்டத்துக்கு ஏன் இத்தனை பாதுகாப்பு என்று பொலிஸ் வட்டாரங்களில் வினவிய போது தாக்குதல்களை நடத்தும் திட்டங்களுடன் கரும்புலிகள் நால்வர் யாழ். நகரப் பகுதிக்குள் ஊடுருவி இருக்கிறார்கள் என்ற தகவல் தெரியவந்தது.

இந்தத் தகவலில் உண்மை உண்டா? அல்லது பொது மக்கள் மீது மேற் கொள்ளப்படும் கெடுபிடிகளுக்கு நியாயம் கற்பிக்க இது போன்ற காரணங்கள் தெரிவிக்கப் படுகின்றனவா?

இது புரியாத புதிர்தான்.

ஈ.பி.டி.பியின் மேதினக் கூட்டத்துக்குத் தான் இத்தனை பாதுகாப்பு ஏற்பாடுகள். ஏனைய கட்சிகள் மற்றும் அமைப்புக்கள் நடத்திய மேதினப் பொதுக் கூட்டங்களில் பாதுகாப்பு ஏற்பாடுகள் ஒரு பிரச்சினையாகவே தெரியவில்லை.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஏற்பாட்டிலான கூட்டம் இணுவிலில் நடைபெற்றது. கூட்டணி எம்.பிக்கள் உட்படப் பலர் அங்கு உரையாற்றினர்.

புதிய ஜனநாயகக் கட்சி நடத்திய கூட்டம் யாழ் நகரில் ப.நோ.கூ சங்கத் தலைமையகத்திலும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கூட்டம் நகரில் உள்ள கட்சி அலுவலகத்துக்கு அருகிலும் இடம் பெற்றன.



ஈ.பி.டி.பி.யின் மே தினப் பேரணியில் கலந்து கொண்ட ஊர்திகளில் ஒன்றை நல்லூரில் பொலிஸார் துருவித்துருவி சோதனையிடும் காட்சி

புளொட் மற்றும் ஈ.பி.ஆர்.எல். எவ்வின் இரு அணிகளும் மற்றும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸும் ஏனோ இம்முறை மேதினத்தைக் கொண்டாடவில்லை. பத்திரிகைகளுக்கு அறிக்கை அனுப்பிவிட்டு அந்த அணியினர் ஒதுங்கிக் கொண்டனர்.

'தமிழின விடுதலைக்காக தம்முயிர் நீத்த விடுதலை மாவீரர் களின் ஆத்ம சாந்திக்காக மேதினத்தைத் துக்கதினமாக அனுஷ்டி யுங்கள்" என்று கேட்டு பரபரப்பான அறிக்கை ஒன்றைவிடுத்த ஐ.தே.கவின் யாழ் மாவட்ட எம்.பியான தி. மகேஸ்வரன், மேதின வைபவங்கள் எதிலும கலந்து கொள்ள வில்லை.

ஈ.பி.டி.பியின் அனுசரணையுடன் திருகோணமலையில் நடத்தப்பட்ட மேதினப் பேரணியிலும் கூட்டத்திலும் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டிருந்தன.

ஈ.பி.டி.பியின் அனுசரணையுடன் வடக்கு–கிழக்கு மாகாண அரசாங்க பொது சிற்றூழியர் சங்கம பேரணியையும், பொதுக் கூட்டத்தையும் ஏற்பாடு செய்திருந்தது.

பேரணி திருமலை மூன்றாம் கட்டையில் உள்ள வி.ரி.சியில் இருந்து ஆரம்பிக்கப்பட்டு பெருந்தெரு, விக்னேஸ்வரா மகா வித்தியாலயத்தில் முடிவடைந்தது.

பேரணியின் இறுதியில் நடைபெற்ற கூட்டத்தில் திருகோண மலை மாவட்ட ஈ.பி.டி.பி அமைப்பாளர் த. புஷ்பராஜா கௌரவ விருந்தினராகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்தினார். சிற்றூழியர் சங்கத் தலைவர் சுரேந்திரன், செயலாளர் ஏ.சதீஸ்குமார், நந்தினி சேவியர் ஆறுமுகம் உட்படப் பலர் உரை நிகழ்த்தினர்.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சிவதாசன் கூட்டத்தில் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ள இருந்த போதிலும், தவிர்க்க முடியாத காரணத்தால் அவரால் கலந்து கொள்ள முடியவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

–ஆதர்ஷாதாஸ்


LINK-Salt to taste LINK-Salt to taste LINK-Salt to taste

சிறந்த தரத்திற்கான சர்வதேச விருதுபெற்ற லிங்க் அயடீன் கலந்த உப்பு

Link Imports & Exports (Pvt)Ltd.

86/1, Chatham Street, Colombo - 01.

Tel : 321085 TeleFax : 435959E-Mail :link@scienceland.lk


## சக்தி டி.வி. நிகழ்ச்சி நிரல்

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு |
|---|---|---|---|---|---|---|---|
| 11.00-11.30 | | | | | | குட்டிச் சுட்டி | காலைக்கதிர் (நேரடி ஒளிபரப்பு) குட்டிச் சுட்டி |
| 11.30-12.00 | | | | | | | |
| 12.00-12.30 | | | | | | பொலிஸ் டயரி | |
| 12.30-13.00 | | | | | | ஸ்டார் சமையல் | இசைக்கோலம் |
| 13.00-13.30 | சன் செய்திகள் | சன் செய்திகள் | சன் செய்திகள் | சன் செய்திகள் | சன் செய்திகள் | சக்தி வீக்கெண்ட் மெட்னி | சக்தி வீக்கெண்ட் மெட்னி |
| 13.30-14.00 | குலவிளக்கு | குலவிளக்கு | குலவிளக்கு | வணக்கம் தமிழகம் | வணக்கம் தமிழகம் | | |
| 14.00-14.30 | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | | |
| 14.30-15.00 | | | | | | | |
| 15.30-16.00 | | | | | | நலந்தானா | வசந்த நிலா |
| 16.00-16.30 | | | | | | டொப் 10 மூவிஸ் | கோபி |
| 16.30-17.00 | கப்டர் 10 | கலைச்சோலை | நம்மநேரம் | மீண்டும் மீண்டும் சிரிப்பு | திரை விமர்சனம் | அரட்டை அரங்கம் | ஸ்டார் ஷோ |
| 17.00-17.30 | தமிழ் கார்ட்டூன் | தில்லானா தில்லானா | தமிழ் கார்ட்டூன் | மலரும் மொட்டும் | தமிழ் கார்ட்டூன் | பூஞ்சோலை | சன் டிவி நிகழ்ச்சிகள் |
| 17.30-18.00 | கிருஷ்ண தாசி | கிருஷ்ண தாசி | கிருஷ்ண தாசி | கிருஷ்ண தாசி | கிருஷ்ண தாசி | இளமை புதுமை | சன் டிவி நிகழ்ச்சிகள் |
| 18.00-18.30 | கங்கா ஜமுனா.. | கங்கா ஜமுனா.. | கங்கா ஜமுனா.. | பெப்ஸி உங்கள் சாய்ஸ் | காற்றாய் வருவேன் | கேள்வியின் நாயகனே | இப்படிக்கு நீங்கள் |
| 18.30-19.00 | அம்மா | அம்மா | அம்மா | அம்மா | அம்மா | புதுப்பாடல் | ஆனந்தபவன் |
| 19.00-19.30 | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | சாவித்திரி | சப்தஸ்வரம் |
| 19.30-20.00 | கதைநேரம் | தித்திக்கும் ஓசை | சத்யா | சீமான்களே சீமாட்டிகளே | பணம், பெண் பாசம் | இளையகானம் | பஞ்சவர்ணம் |
| 20.00-20.30 | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் |
| 20.30-21.00 | வாழ்க்கை | வாழ்க்கை | வாழ்க்கை | வாழ்க்கை | வாழ்க்கை | நிம்மதி உங்கள் | ஜன்னல் |

## ஊழல்களுக்கு வெளிச்சம் காட்டிடும் கருவிகள்

அரசியல் வாதிகள் என்றால் அவர்கள் ஊழலின் நாயகர்களாகவே இருப்பார்கள் என்பது இந்தியாவின் அரசியல் சித்தாந்தம் ஆகும். அண்மையில் தெஹல்கா தகவல் தொடர்பு நிறுவனம் இந்திய அரசாங்கத்தின் முக்கிய புள்ளிகளை ஊழல் பேர்வழிகள் என்று குற்றம் சாட்டியது. சம்பந்தப்பட்டவர்கள் லஞ்சமாகப் பணம் பெற்றதை வீடியோ காட்சிகளாகக் காட்டி அசத்தியது. அந்த வேட்டையின் போது அவர்கள் பயன்படுத்திய மிகவும் நுட்பமான வீடியோ கமெரா இது தான் என்று தெரிய வந்திருக்கிறது. மிக நுண்ணிய கணினிக் கருவிகள் பொருத்தப்பட்டு விசேஷமான முறையில் தயாரிக்கப்பட்ட இந்த "உளவு கமெரா"வை ஒரு பேனா போல் சட்டையில் சொருகி வைக்கலாம்.



## மலைக் குன்றின் மீது கோமாளி உருவம்



சர்க்கஸ் விளை யாட்டுகள் காண்பிக்கப்படும் போது அங்கு கோமாளிக்கு முக்கிய இடம் இருக்கும். சர்க்கஸ் கோமாளியாக வேடமிட்டு வருபவருக்கு சர்க்கஸ் வித்தைகள் அளவு கடந்த விதத்தில் தெரிந்திருக்கும். இங்கே இந்த மலைக்குன்றின் மீது ஒரு கோமாளி தனது குதிரை மீது சவாரி செய்வது போன்ற தோற்றம் தெரிகிறது. கருங்கற்பாறைகள் இவ்வாறு தோற்றம் பெறுவதற்கு விண்ணில் மறையும் சூரியக் கதிர்கள் பக்கத் துணையாக இருக்கின்றன.

## பாலைக் கறந்து ருசிப்பதில் ஆவல்



மகாத்மாகாந்தி ஆட்டுப்பால் அருந்தியே தமது ஆயுளை நீடித்தார் என்று கூறுவார்கள். இந்த வெள்ளையர் குடும்பத்தினருக்கும் ஆட்டுப்பால் மீது அளவு கடந்த மோகம் இருப்பது புரிகிறது. சின்னக் குழந்தைகளும் ஆட்டின் மடியிலிருந்து பாலைக் கறந்து குடிப்பதில் ஆசை கொண்டவர்களாக இருக்கிறார்கள். இயற்கையோடு ஒன்றிவிட்ட இந்த அதிசய குடும்பம் அனைவரையும் கவர்ந்து விட்டதில் ஆச்சரியம் இல்லை.

## கூர்மையான கண்கள் தேடித்தரும் வெற்றி



அமெரிக்க அழகி கரென் ஸ்கவொட்டோவின் கண்கள் கூர்மையானவை. பல தடவைகள் இது நிரூபிக்கப்பட்டிருக்கிறது. காரணம் உலகிலேயே அணு அளவும் இலக்குத் தவறாமல் அம்பு எய்யும் வல்லமை பெற்ற பெண்ணாக இவர் இருப்பதனால் தான். சாதாரண அழகிகள் தமது விழிகளால் எத்தனையோ கதைகளைப் பேசக்கூடும். ஆனால் அழகி கரெனின் கூர்மையான விழிகள் அவருக்கு வெற்றிகளைத் தேடித் தருகின்றன. வில்வித்தையில் வல்லமை படைத்த இந்த அழகிக்கு வயது 20.

## ஒளிந்திருக்கும் முகம் எது?



ஏப்ரல்—29, சுடர்ஒளி மசாலா மிக்ஸ் பகுதியில் ஒளிந்திருந்த முகம் நடிகை தேவயாணியினுடையது. சரியான விடையைக் கண்டு பிடித்து எழுதி அனுப்பிய வாசகர்களில் மூன்று அதிஷ்டசாலிகளின் பெயர் விவரம் வருமாறு:—

1. ம. அபராஜிதன், பண்டத்தரிப்பு.
2. ஆர். றீகன், கொழும்பு—06.
3. ஜே. மோகன்ராஜ், ஹால்கிரண்ஓயா.

சரியான விடையைக் கண்டு பிடித்து எழுதி அனுப்பிய வாசகர்கள் அனைவருக்கும் பாராட்டுகள். அதிஷ்டசாலிகளுக்கு எமது வாழ்த்துக்கள்.

கடந்த வாரம் (06.05.2001) மசாலாமிக்ஸ் பகுதியில் ஒளிந்திருந்த முகத்திற்குரிய நடிகர் யார்? சரியான விடையைத் தபால் அட்டையில் எழுதி அனுப்பும் வாசகர்களில் மூன்று அதிஷ்டசாலிகள் பெயர், விவரம் இப்பகுதியில் வெளியிடப்படும்.

இந்த வாரம் பிரசுரமாகியிருக்கும் இந்த உருவம் யாருடையது? மிகக் குறுகிய காலத்தில் இசைச் சக்கரவர்த்தியானவர். வந்தேமாதரம் தேடித் தந்த பெருமை.

இந்த முகத்திற்குரிய வரைக் கண்டுபிடித்து அவர் பெயரைத் தபால் அட்டையில் எழுதிப் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

'சுடர் ஒளி'
36/2, பிரெட்ரிக்கா வீதி,
கொழும்பு — 06.



## வீதிக்கு வந்து விட்ட மண்ணின் மைந்தர்கள்

ஆஸ்திரேலியா இன்று பல விதத்திலும் முன்னேற்றம் கண்டு வருகிறது. வெள்ளையர் ஆட்சியின் கீழ் நாடு துரித முன்னேற்றம் கண்டாலும் அங்கு வாழும் ஆதிவாசிகள் தங்களுடைய குறைகள் தீர்க்கப்படவில்லை என்று சாதிக்கிறார்கள். ஆஸ்திரேலிய பூர்வ குடியினர் தம்மை மண்ணின் மைந்தர்கள் என்று கூறுகிறார்கள். பிரிட்டனிலிருந்து வந்து குடியேறிய வெள்ளையர்கள் நாட்டை சூறையாடி விட்டார்கள் என்பது இவர்களின் வாதம் ஆகும். இதன் காரணமாக வீதிக்கு வந்து உரிமைக் குரல் எழுப்புகிறார்கள் மண்ணின் மைந்தர்கள்.



# அழகும் ஆரோக்கியமும்



''உடலின் அழகை தமிழர்கள் ஒரு போதும் நிராகரித்தவர்கள் அல்லர். அழகுணர்ச்சி குறித்து தமிழர்கள் ஒரு கட்டத்தில் மிகவும் அக்கறை உடையவர்களாக இருந்தார்கள். அழகுணர்ச்சியில் அவர்கள் காட்டிய ஈடுபாடு இடையில் விடுபட்டிருந்தது. இப்பொழுது அத்தொடர்பு மீண்டும் வளரத் தொடங்கியுள்ளது'' என்று அழகும் ஆரோக்கியமும் என்ற நூல் வெளியீட்டில் கலந்து கொண்டு பேசும் போது, கம்பவாரிதி இ. ஜெயராஜ் கூறினார்.

''அனுஷா ஹேபல் பியூட்டி கெயர்'' நிறுவனம் தனது இரண்டாம் ஆண்டு நிறைவையொட்டி சூரியன் எப்.எம் உடன் இணைந்து வழங்கிய ''அழகும் ஆரோக் கியமும்'' என்ற நூல் வெளியீடும் ஆனந்த விழாவும் அண்மையில் வெள்ளவத்தை இராம கிருஷ்ணமிஷன் மண்டபத்தில் நடை பெற்றன.

கம்பவாரிதி இ. ஜெயராஜ் தனது உரையில் மேலும் தெரிவிக்கையில்,

''தமிழர்கள் தம் தோற்றத்தில் சிறப்புப் பெறவேண்டும் என்ற விருப்பத்தில் அனுஷியா இந் நூலை வெளியிட்டிருக்கிறார். ஆற்றலும், ஆர்வமும் உள்ள அனுஷியாவிடமிருந்து இதுபோன்ற மேலும் பல நூல்கள் வெளிவர வேண்டும்'' என்று வாழ்த்தினார்.

இவ்விழாவில் 'ஸ்ரீலங்கா அசோசியேஷன் ஒப் ஹெயார் அன்ட் பியூட்டி' (SLHB) நிறுவனத்தின் தலைவர் ரம்சி ரஹ்மான் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

ரம்ஸி ரஹ்மான், புரவலர் ஹாசிம் உமர், கொழும்பு பல்கலைக் கழக புவியியல் துறை பேராசிரியை யோகா இராசநாயகம், இலங்கை ஒலிப்பரப்புக் கூட்டுத்தாபன தமிழ்ச் சேவைப் பணிப் பாளர் அருந்ததி ஸ்ரீரங்க நாதன் ஆகியோர் மங்கள விளக் கேற்றி நிகழ்ச்சியை ஆரம்பித்து வைத்தனர்.



தமிழ் மக்களிடையே அழகுக்கலை பற்றிய ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தவே ''அழகும் ஆரோக்கியமும்'' என்ற நூலைத் தாம் வெளியிட்டுள்ளதாக வரவேற்புரையை நிகழ்த்திய திருமதி அனுஷியாதேவி சுந்தரேசன் தெரிவித்தார்.

பிரதம அதிதி ரம்ஸிரஹ்மான் தனது உரையின் போது, ''ஸ்ரீலங்கா அசோசியேஷன் ஒப் ஹெயார் அன்ட் பியூட்டி'' நிறுவனம் அழகுக்கலை, சிகையலங்காரம் ஆகியவை சாதாரண மக்களிடையே சென்றடைவதற்குப் பெரும் துணை புரிகிறது. எமது சங்கத்தின் உறுப்பினரான அனுஷியாவின் ''அனுஷா ஹேபல் பியூட்டி கெயர்'' நிறுவனத்தின் இரண்டாம் ஆண்டு நிறைவு விழாவில் கலந்து கொள்வதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன்'' என்று தெரிவித்தார்.

கம்பவாரிதியிடமிருந்து முதற்பிரதியை ரம்ஸி ரஹ்மான் பெற்றுக் கொண்டார்.

இந்த ஆனந்த விழாவில் ''பாஷன் ஷோ'' உட்பட நாட்டிய சேஷ்த்ரா மாணவிகளின் நடன நிகழ்ச்சியும் இடம் பெற்றது.

நிகழ்ச்சிகளை அழகு தமிழில் அறிவிப்பாளர் பி.எச். அப்துல் ஹமீட் தொகுத்து வழங்கினார்.

தனது கன்னி முயற்சியான இவ் விழாவினை சிறப்புற ஒழுங்கமைத்திருந்த அனுஷியாவின் முயற்சி பாராட்டுக்குரியது.

— ச. பிரதீபா

# இலக்கியச் சந்திப்பு

'உலக வரலாற்றில் 1980க்குப் பின் நமது வாழ்வு மிகப் பெரும் நெருக்கடிகளைச் சந்தித்திருக்கிறது. நம் வாழ்வின் பெருமாயுளை யுத்தமும் கண்ணீரும் இழப்பும் நிச்சயமற்ற தன்மையும் ஆக்கரமித்திருக்கின்றன.

இந்த நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்து நாம் நிலைத்திருக்கிறோம்!

படைத்திருக்கிறோம்!! வாசித்திருக்கிறோம்!!

இன்னுமின்னும் தேடலும் அணையா ஆர்வத்திலும் நமதுள்ளம்

திளைத்து நிற்கிறது. இச் சூழலில் விளைந்த நமது விளைச்சல்களும்

நமதனுபவங்களும் பகிர்ந்துகொள்ளப்பட வேண்டும்! எமதுள்ளங்கள்

ஒப்பனைகளை களைந்தெறிந்துவிட்டு உரையாட வேண்டும்.

விவாதங்களும் கருத்துக்களும் நம்மை செம்மைப்படுத்தட்டும்!

நாம் எங்கே நிற்கிறோம் என்பது நமக்கு முக்கியமாகிறது.

அதற்கானவொரு தொடக்கப் புள்ளியாக நாம் சந்திப்போம்!'

என்ற அறைகூவலுடன் மூன்றாவது மனிதன் சஞ்சிகை இலக்கியச் சந்திப்பொன்றினை ஒழுங்கு செய்துள்ளது. இம்மாதத்தின் இரு தினங்களில் இச்சந்திப்பு இடம் பெறும்.

இன்றைய சூழலில் இத்தகைய தொரு சந்திப்பு நிகழ்வு இடம் பெறுவது ஆரோக்கியமான விடயம். படைப்பாளர்களும் எழுத்தாளர்களும் மனந்திறந்து பேச வாய்ப்பொன்றினை வழங்க முன்வந்த மூன்றாவது மனிதன் குழுவினர் பாராட்டப்படவேண்டியவர்கள்.

# கலையமுதம்

கே.விஜயன்

## கற்களில் கசியும் உண்மைகள்

''இலங்கைத் தமிழர் வாழ்வும் வகிபாகமும்'' எனும் தலைப்பில் பேருரை தொடர் நிகழ்ச்சியொன்று கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நடைபெற்று வருகிறது. கடைசியாக இடம்பெற்ற நிகழ்ச்சியில் ''பண்டைய இலங்கையில் தமிழும் தமிழரும்'' என்ற தலைப்பில் உரையொன்று நிகழ்த்தப்பட்டது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத் துறை முதுநிலை விரிவுரையாளரான கலாநிதி பரமு புஷ்பரட்ணம் உரை நிகழ்த்தினார். இவர் தமதுரையில் சிறந்த வரலாற்றுக் குறிப்புக்கள் பலவற்றை முன்வைத்தார்.


''பிராமிக் கல்வெட்டுகளிலிருந்து கண்டெடுக்கப்பட்ட பல ஆதாரங்களின் மூலம் திராவிட மக்கள் இலங்கையின் பல மாவட்டங்களிலும் வாழ்ந்திருக்கின்றனர் என்றும் இவர்களுடைய வாழ்க்கை கி.மு.800 ஆம் ஆண்டிற்கு முன்னிருந்தே ஆரம்பமாவதாகவும்'' குறிப்பிட்ட அவர் மேலும்;

''இந்தியாவின் தெற்குப் பகுதியில் வாழும் தமிழரைப் போல இலங்கைத் தமிழருக்கும் மிகவும் தொன்மை வாய்ந்ததொரு வரலாறு உண்டு'' என்ற போதும் இலங்கைத் தமிழரின் பண்டையகால எழுத்து, மொழி, பண்பாடு என்பன குறித்து தெளிவற்றதொரு தன்மையே காணப்படுகிறது.''

''பரண விதாரன பல கல்வெட்டுக்களை ஆராய்ந்துள்ளார். பல மொழிகளில் புலமை பெற்றிருந்த இவர் பிராகிருதம், சிங்களம், தமிழ் முதலிய கல்வெட்டுக்களையும் ஆராய்ந்துள்ளார். இலங்கை முழுவதிலும் சிங்கள மக்களே வாழ்ந்துள்ளனர் என்பதை நிலைநாட்டு வதிலேயே இவருடைய கவனம் சென்றுள்ளது.

இன்று அவருடைய பதிப்பாக வெளியாகியுள்ள தொகுதிகளே பிராமிக் கல்வெட்டுக்கள் பற்றிய ஆய்விற்கு அடிப்படையாக அமைந்துள்ளது. இவருடைய ஆய்வுகள் சிங்கள இனத்தின் சார்பாக அமைந்ததற்கு அடிப்படையாக பௌத்த மத பண்பாட்டை, அதே ரீதியில் கவனிக்காமல் இன ரீதியாக ஆய்வு செய்ததே காரணமாகும்'' என்றும் கூறினார்.

## புதுமைப் பித்தன் விவாத அரங்கு



புதுமைப்பித்தனின் நினைவாக விவாத அரங்கொன்றினை கொழும்பு பாரதி கலா மன்றம் ஒழுங்கு செய்திருந்தது. விவேகானந்தா உள்சபை மண்டபத்தில் நிகழ்ச்சி நடைபெற்றது.

நாடாளுமன்ற உறுப்பினர் பி.பி.தேவராஜ் 'புதுமைப் பித்தனும் மணிக்கொடியும்' எனும் தலைப்பில் உரை நிகழ்த்த, புதுமைப் பித்தனின் படைப்புகளில் ஆண்—பெண் பாத்திரங்களில் எது முழுமையாகப் படைக்கப்பட்டுள்ளது என்பது தொடர்பாக இரு அணியினர் எதிரும் புதிருமாக 'உரை மோதல்' நிகழ்த்தினர்.

பெண் பாத்திரங்களின் சித்திரிப்பே முழுமையானதாகும் என்று அறிவிப்பாளர் சற்சொரூபவதி நாதன், எழுத்தாளர் கே.விஜயன், கவிஞர் இளைய தம்பி தயானந்தா ஆகியோர் ஓர் அணியிலும், ஆண்பாத்திரங்களின் சித்திரிப்பே முழுமையானது என தமிழருவி த.மணி, கவிஞர் ராதா மேத்தா, செல்வி குயின் மேரி யேசுதாசன் ஆகியோர் எதிரணியிலும் கலந்து கொண்டனர். விவாத அரங்கிற்கு நடுவராக எழுத்தாளர் செ.யோகநாதன் கலந்துகொண்டார்.

நாடாளுமன்ற உறுப்பினர் பி.பி.தேவராஜ், புதுமைப் பித்தன் கதைகள், மணிக்கொடி பத்திரிகை சம்பந்தமாக நிறைய தகவல்களை அறிந்தவர் என்பதை அவருடைய தெளிவான உரையில் உணர முடிந்தது.

'புதுமைப் பித்தனின் பாத்திரங்கள் பற்றி அறிவதற்கு நிறைய வாசிக்க வேண்டும், வாசித்ததை நெஞ்சார உணர வேண்டும், அப்போதுதான் அதன் மகத்துவம் புரியும்' என்று அவர் தனது உரையில் தெரிவித்தார்.

அவருடைய உரையில் இடம்பெற்ற இந்தப் பகுதி மனதில் பதிவு செய்யத்தக்கதாக இருந்தது.

ஒரு விவாத அரங்கிலே பேச்சாளர்கள் எவ்வாறு முன் ஆயத்தத்துடன் திகழ வேண்டும் என்பதற்கு அது முன்னுரையாக அமைந்தது.

புதுமைப் பித்தனின் பாத்திரங்கள் தொடர்பாக விவாதம் நடத்தி, அதன் சிறப்புகள் குறித்து வாசகர் மனதில் பதிய வைப்பதே நிகழ்ச்சியை ஒழுங்கு செய்தவரான தமிழருவி த.மணியின் விசாலமான நோக்கம். பாரதி கலா மன்றம் வருடந் தோறும் இதற்காகவே புதுமைப் பித்தன் நினைவு தினத்தைக் கொண்டாடி வருகிறது.

பட்டிமன்ற அரங்குகளிலே சினிமா உலகில் இவர் சிறந்தவரா, அவர் சிறந்தவரா என்ற பல்லவியிலே குலுக்கல் நடனமாடிக்கொண்டிருக்கும் இளைய தலைமுறையினரிடையே புதுமைப் பித்தன் பற்றி பேசி கைதட்டல் பெறமுடியுமா என்பதனை நன்றாக அறிந்தவர் தமிழருவி த.மணி. அதனால் ஒரு மாதத்திற்கு முன்னரே பேச்சாளர்களை ஒழுங்கு செய்துவிட்டார்.

ரசிகர்களால் மண்டபம் நிறைந்துவிட்டது. அனேகமாக எல்லோருமே குதூகலமான இளைய தலைமுறை பட்டிமன்ற ரசிகர்கள். மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா, நீர்கொழும்பு பஷீர் ஆகிய ஒரு சிலரைத் தவிர எழுத்தாளர்களின் முகதரிசனமே கிடைக்கவில்லை. அட, பேச்சாளராக குறிக்கப்பட்டிருந்த கவிஞர் ஜின்னாஹ் ஷெரிபுத்தீனின் தலைக் கறுப்பையும் காணவில்லை.

### ஸ்ரீமான் சஞ்சாரி



நிகழ்ச்சியை ஒழுங்குசெய்தவரான மணி கழுத்தில் சுளுக்கு விழுந்தவரைப் போல் தலையை தொங்கப் போட்டுக் கொண்டிருந்தார். கவிஞர் ஷெரிபுத்தீன் கலந்து கொள்ளமாட்டார் என்ற செய்தி அவர் காதில் விழுந்துவிட்டதே அதற்குக் காரணம்.

ஒரு கலாபூஷணம் மணியின் காதில் ஏதோ மந்திரம் ஓத, மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்த அவர் விவாதத்தை கண்டுகளிக்க அப்பொழுதுதான் உள்ளே நுழைந்து கொண்டிருந்த ஓர் எழுத்தாளரை கொண்டு போய் மேடையில் அமர்த்திவிட்டார்.

'இதென்னடா சங்கடம்' என கதிகலங்கிப் போன எழுத்தாளர் பரிதாபகரமாகக் கண்களை உருட்டினார்.

''என்னாங்க இது, புதுமைப் பித்தன் கதைகளைப் படித்து 20 — வருடங்களுக்கு மேலாயிற்று, எல்லாமே மறந்து போயிற்று, இப்ப எப்படிங்க பேசறது...!'' என விளக்கெண்ணெய் குடித்தவர் போல முகத்தை அஷ்டகோணலாக்கி, எழுத்தாளர் இழுத்த போது...

''அட, நீங்க ஒண்ணு எனக்கு படிச்ச காலமே நெனவு இல்ல, நான் பேசலியா, சும்மா எதையாவது பேசுங்க, மாறி, மாறி விளாசித் தள்ளுவோம்'' என்று பக்கத்திலிருந்த எதிரணிக்காரர் கொடுத்த ஐடியாவில் எழுத்தாளர் பிரமை பிடித்தவர் போலானார். நடுவர் முதுகில் தட்டியபோது தான் அவர் இந்த உலகத்திற்கு மீண்டார்.

எழுத்தாளர் நினைத்தது போல பட்டிமன்ற ரசிகர்கள் ஒன்றும் மோசமானவர்கள் அல்ல. நடுவர் செ.யோகநாதனின் தெளிவான பேச்சிற்கும், இரு சாராரின் தரமான கருத்திற்கும் மகிழ்ச்சிகரமான 'அப்ளாஸ்' கொடுத்தார்கள். பெண் பாத்திரங்களே முழுமையானவை என வாதிட்ட அணி வெற்றியடைந்தது.

# வேலை நிறுத்த தடையை நீக்க மறுத்து நிர்வாகங்கள் அழுங்குப் பிடி!

## வழக்கு வாபஸாகவில்லை; சங்கங்கள் தடுமாற்றம்

பெருந்தோட்டத் துறையிலுள்ள தொழிற் சங்கங்கள் விட்டுக் கொடுப்புடன் பிரச்சினையைத் தீர்க்க முனையும் போது முதலாளிமார் சம்மேளனம் இதனை உதாசீனம் செய்கிறது. விட்டுக் கொடுப்பதற்கும், இணங்கி வருவதற்கும் அவர்களின் கௌரவம் இடம் கொடுப்பதில்லை.

இது ஏன்? தொழிற் சங்கங்கள் மத்தியில் காணப்படும் ஒற்றுமை இன்மையா? அல்லது இவர்களின் பலவீனத்தை முதலாளிமார் தெரிந்து கொண்டதாலா?

தொழிற் சங்கங்கள் மீதான கட்டுப்பாடும், தடைகளும் இன்றும் அப்படியே இருக்கின்றன. கட்டுப்பாடுகள் தளர்த்தப்படுமா? தடைகள் வாபஸ் பெறப்படுமா? என்ற கேள்விகள் இப்பொழுது மலையக தொழிற்சங்க வட்டாரங்களில் எழுப்பப்பட்டுள்ளன.

தொழிற் சங்கங்களுக்கும், முதலாளிமார் சம்மேளனத்திற்கும் இடையிலான கயிறிழுப்பால் தொழிலாளர்களின் கழுத்தே மேலும் இறுக்கப்பட்டுள்ளது.

பெருந்தோட்டத்துறையில் ''வேலை நிறுத்தம் செய்ய முடியாது'' என்ற தடை நீக்கப்படவில்லை. இது தொடர்பான வாக்கு வாபஸ் பெறப்படவும் இல்லை. கூட்டு ஒப்பந்தத்தின்படி 2002 ஆம் ஆண்டு ஜுன் மாதம் வரை வேலை நிறுத்தம் செய்யவும் முடியாது.

இப்படிக் கூறுகின்றார்கள் பெருந்தோட்டக் கம்பெனி முதலாளிமார் சம்மேளனத்தினர். பிரதான மூன்று தொழிற் சங்கங்கள் செய்து கொண்ட கூட்டு ஒப்பந்தத்தால் இந்த நிலை ஏற்பட்டிருக்கின்றது.

கூட்டு ஒப்பந்தத்தை மீறி வேலை நிறுத்தம் செய்தனர் எனக் குற்றம் சுமத்தி தொழிலாளர் காங்கிரஸ், இலங்கைத் தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம், தொழிற்சங்கக் கூட்டுக் கமிட்டி ஆகிய மூன்று தொழிற்சங்கங்களுக்கும் எதிராக நீதி மன்ற தடை உத்தரவு பெறப்பட்டது நினை விருக்கலாம்.

இது தொடர்பான வழக்கு விசாரணை முடியவில்லை. எதிர் வரும் 15 ஆம் திகதி மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு மேலதிக விசாரணைக்கு எடுக்கப்படவுள்ளது.

அட்டனில் நடைபெற்ற சத்தியாக்கிரகத்தை முடிவுக்கு கொண்டு வருவதற்காக தொழில் அமைச்சர் அலவி மௌலானா தலைமையில் உச்சி மாநாடு நடைபெற்றது தெரிந்ததே.

இரா. புத்திரசிகாமணி

**மலையகக் கண்ணோட்டம்**

இம் மாநாட்டின் பின் தோட்ட முதலாளிமார் சம்மேளனத்திற்கும், தொழிற் சங்கங்களுக்கும் இடையிலான முரண்பாடுகள் தீர்க்கப்பட்டு விட்டன. தொழிற் சங்கங்களுக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கு வாபஸ் பெறப்படும் எனவும் அப்போது கூறப்பட்டது.

ஆனால் முதலாளிமார் சம்மேளனம் வழக்கு வாபஸ் பெறப்படும் என்பதை மறுக்கிறது. ''2–6–2000 ஆம் ஆண்டில் செய்து கொண்ட கூட்டு ஒப்பந்தத்தின் படி இவர்கள் 2002 ஆம் ஆண்டு வரை வேலை நிறுத்தம் செய்ய முடியாது. இதில் எந்த விதமான மாற்றமும் இல்லை'' எனக் கூறுகிறது.

சத்தியாக்கிரகத்தின் போது தொழில் அமைச்சர் முன்னிலையில் ஏற்கனவே செய்து கொண்ட ஒப்பந்தத்தில் சில மாற்றங்கள் மட்டுமே செய்யப்பட்டன. தவிர புதிய ஒப்பந்தம் ஏதும் செய்யப்படவில்லை.

மற்றும் வழக்கு தொடர்பாகவோ, தடை உத்தரவை வாபஸ் பெறுவது தொடர்பாகவோ அங்கு எந்த விதமான பேச்சுகளும் இடம் பெறவில்லை என முதலாளிமார் சம்மேளன உயர் அதிகாரி ஒருவர் கூறுகிறார்.

எது எப்படியோ, தொழிற் சங்கங்கள் பல விட்டுக் கொடுப்புகளுடன் சமரசமாகப் பிரச்சினைகளைத் தீர்க்க முனைகின்றன. ஆனால் தோட்ட முதலாளிமார் எதையும் விட்டுக் கொடுக்கத் தயாராக இல்லை என்பதையே இது புலப்படுத்துகிறது.

இதன் அடிப்படைக் காரணம் என்ன? தொழிற் சங்கங்கள் மத்தியில் ஒற்றுமை இல்லை. எவரை வைத்தாவது நிலைமையைச் சமாளித்து விட முடியும் என்று கம்பெனிகள் தைரியமாக இருக்கின்றன.

தோட்ட முதலாளிமார் சம்மேளனத்தின் இந்தப் பிடிவாதப் போக்கையும், அசட்டு தைரியத்தையும் இந்தத் தொழிற் சங்கங்கள் முறியடிக்குமா? இல்லை ஒன்றுக் கொன்று முட்டி மோதிப் பின் முடங்கி விடுமா? என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.

# ம.ம.முன்னணிக்கு புதிய தலையிடி நியமன எம்.பி. பதவி விலக மறுப்பு

இ.தொ.கா பொதுச்செயலாளர் ஆறுமுகம் தொண்டமானும் மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெ. சந்திரசேகரனும் மலையகக் கட்சிகளை ஒன்றுபடுத்துவதில் தீவிரமாகச் செயற்படுகின்றனர். கடந்த மேதினத்தின் போது இதில் ஓரளவு வெற்றியும் கண்டுள்ளனர்.

இந்த நிலையில் சந்திரசேகரனுக்கு ஒரு பெருந்தலையிடி ஏற்பட்டுள்ளது. போனஸ் எம்.பி. கே. கனகராஜினாலேயே இந்தத் தலையிடி உருவாகியுள்ளது.

இதனை எப்படித் தீர்ப்பது என தலைமை திக்கு முக்காடிக் கொண்டிருக்கிறது. மலையக மக்கள் முன்னணி எம்.பி. கே. கனகராஜ் அட்டனில் நடைபெற்ற மேதின விழாவில் ஓரம் கட்டப்பட்டார். இதனால் ஆத்திரம் அடைந்த அவர் இனிமேல் மலையக மக்கள் முன்னணி தலைமைப் பீடத்திற்கு கட்டுப்படப் போவதில்லை என்று அறிவித்து விட்டார். இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸும், மலையக மக்கள் முன்னணியும் இணைந்து இந்த மேதினத்தை நடத்தின.

மலையக மக்கள் முன்னணியின் சிபாரிசின் பேரில் தேசியப் பட்டியலில் இடம் பெற்ற கனகராஜ் தான் ஒரு ''டம்மி'' என்றும் கட்சியின் தலைமைப் பீடம் அறிவிக்கும் போது பதவியை இராஜினாமா செய்வதாகவும் ஏற்கனவே ஒப்புக் கொண்டிருந்தார். இதனால் இவர் இராஜினாமா செய்தவுடன் மத்திய மாகாண சபையில் இடம் வழங்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இதற்கு வசதியாக மாகாண சபை உறுப்பினரான இராசகுலேந்திரா (சட்டத்தரணி) தனது பதவியை இராஜினாமா செய்திருந்தார்.

இதையடுத்து 30–4–2001 அன்று இரவு மலையக மக்கள் முன்னணியின் உயர்பீடம் கூடி நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்து விட்டு மத்திய மாகாண சபை உறுப்பினர் பதவியை ஏற்கும்படி கனகராஜுக்கு கோரிக்கை விடுத்தது. ஆனால் அவரோ எம்.பி பதவியை இராஜினாமா செய்ய முடியாது எனக் கூறிவிட்டார். இது கட்சியின் கட்டுப்பாட்டையும் ஒப்பந்தத்தையும் உதாசீனப்படுத்தும் ஒரு விடயம் என மலையக மக்கள் முன்னணி கூறுகின்றது.

இது தொடர்பாக கனகராஜ் எம்.பியிடம் கேட்டபோது:— ''நான் கட்சியின் தீர்மானத்தின் படி எம்.பி பதவியை இராஜினாமா செய்யவே ஒப்புக் கொண்டிருந்தேன். ஆனால் இன்றைய சூழ்நிலையில் அது முடியாத ஒரு காரியம். மேதின மேடையில் எனக்கு உரிய கௌரவம் கொடுக்கப்படவில்லை. விழா ஆரம்பிக்கும் போது மங்கள விளக்கேற்றவும் எனக்கு சந்தர்ப்பம் அளிக்கவில்லை. எனக்கு ஒதுக்கப்பட்டிருந்த ஆசனம் மலையக மக்கள் முன்னணி கவுன்சில் உறுப்பினரான விஜயகுமாரால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்தது. இதன் மூலம் நான் அவமானப்படுத்தப்பட்டேன். இதனை விழா மேடையிலேயே காரசாரமாக கண்டித்து விட்டு வெளியேற முயன்றேன். என்னினும் இ.தொ.கா உறுப்பினர்கள் என்னை சமாதானப்படுத்தினர்.

''இதற்குப் பதிலடி கொடுக்கும் வகையிலேயே தான் கட்சி மேலிடத்தின் முடிவை ஏற்பதில்லை என்றும், எம்.பி பதவியை இராஜினாமா செய்யப் போவதில்லை என்றும் தீர்மானித்திருக்கிறேன்'' என்று கனகராஜ் எம்.பி கூறுகிறார்.

இதேவேளை கட்சிக் கட்டுப்பாட்டை மீறியதால் அவரைக் கட்சியின் சகல நடவடிக்கைகளில் இருந்தும் ஒதுக்கப்பட்டிருப்பதுடன் அங்கத்துவமும் இடைநிறுத்தப்பட்டிருக்கிறது. அமைப்பின் செயற்பாடுகளில் அவர் தலையிட முடியாது என்று சந்திரசேகரன் திட்டவட்டமாக அறிவித்துவிட்டார்.

# தமிழ்மொழி புறக்கணிப்பு அதிகாரிகள் மீது நடவடிக்கை

## அமைச்சர் சச்சிதானந்தன் எச்சரிக்கை



''ஊவா மாகாணத்தின் கல்வித் திணைக்களத்தில் தேவையான அளவு தமிழ் அதிகாரிகளும் உத்தியோகத்தர்களும் உள்ளனர். அப்படி இருந்தும் தமிழ்மொழி அமுலாக்கல் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை. இப்படியான உயர் அதிகாரிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்''.

மேற்கண்டவாறு ஊவா மாகாண தமிழ் கல்வி, தோட்ட உட்கட்டமைப்பு, சுற்றுலாத்துறைகள் அமைச்சர் எஸ். சச்சிதானந்தன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

''தமிழ் மொழி அமுலாக்கலுக்கு போதிய தமிழ் உத்தியோகத்தர்கள் இல்லை என்று இதுவரை காரணம் கூறப்பட்டு வந்தது''.

''ஆனால் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவுடன் அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் தலைமையில் பேச்சுவார்த்தை நடத்திய பின், ஊவா மாகாணக் கல்வித் திணைக்களத்துக்கு மேலதிக கல்விப் பணிப்பாளர், உதவிக் கல்வி அதிகாரிகள், தேவையான தமிழ் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றனர்''.

''ஆனால் தொடர்ந்தும் தமிழ்ப் பாடசாலைகளுக்கு அனுப்பப்படும் சுற்றறிக்கைகள் தனிச் சிங்களத்திலேயே இருக்கின்றன. இது தமிழ் மொழி உபயோகத்தைத் திட்டமிட்டு புறக்கணிக்கும் ஒரு செயல் என்றே தெரிகின்றது''.

''மத்திய அரசு ஏற்றுக் கொண்ட விடயங்களை மாகாண மட்டத்தில் இருக்கும் உயர் அதிகாரிகள் உதாசீனம் செய்வது கவலைக்குரியது. ஊவா மாகாணத்தில் ஏழு வலயக் கல்விப் பணிமனைகள் இருக்கின்றன. இவற்றுள் பல கல்விப் பணிமனைகள் தோட்டப்புறங்களில் உள்ள தமிழ்ப் பாடசாலைகளை நிர்வகிக்கின்றன''.

''இப்பாடசாலைகளுக்கு சிங்களத்தில் கடிதங்களை அனுப்பினால் ஆசிரியர்கள் தடுமாறுகின்றனர். சிங்களத்தில் கடிதங்கள் வருவது குறித்து அதிபர்களும், ஆசிரியர்களும் தொடர்ந்தும் முறைப்பாடு செய்கின்றனர். இது உயர் அதிகாரிகளின் பொறுப்பற்ற தன்மையை உணர்த்துகின்றது''.

இப்படி அவர் மேலும் கூறினார்.

தமது போக்கை அதிகாரிகள் மாற்றிக் கொள்ளாவிட்டால் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதைத் தவிர வேறு வழி இல்லை என்றும் அவர் சொன்னார்.

அமைச்சர் சச்சிதானந்தன் துணிச்சலுடன் நடவடிக்கை எடுப்பது வரவேற்கத்தக்கது தான். இதே வேகத்தில் அவர் செயற்பட்டு நடவடிக்கை எடுத்தால் அவர் பாராட்டப் படுவார் என்பது உறுதி.

# எமனாக வந்துள்ள எமரேஜன்

கள்ளச் சாராய கும்பல்களின் மற்றுமொரு கண்டு பிடிப்பாக மலையகத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது எமரேஜன்.

மலையகத்தில் பெருகிவரும் கசிப்பு வியாபாரிகளே இப்புதிய குடிவகையை விற்பனை செய்கின்றனர். குறைந்த செலவில் கூடுதலான சந்தோஷம் கிடைக்கிறது என்றே இதனை விற்பனை செய்கின்றனர்.

வருமானம் குறைந்தவர்களும், தோட்டத் தொழிலாளர்களும் இப்புதுக் குடிக்கு அடிமையாகி உள்ளனர். ''உடல் சோர்வைப் போக்கவே குடிக்கின்றோம்'' எனக் கூறும் இவர்கள் இறுதியில் உடல் உறுதியையே இழந்து விடுகின்றனர். இக்குடிவகையை அருந்திய 30 வயது இளைஞர்களும் நிமிர்ந்து நடக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

மொத்த வியாபாரக் கடைகளில் சேர்த்து வைக்கப்படும் சீனி, சர்க்கரை என்பவற்றுடன் ''ஈஸ்ட்'' எனப்படும் பவுடரையும் கலந்து இந்த எமரேஜனை தயாரிக்கின்றனர். இது உடல் நலத்திற்கு பெரும் கேடாக அமைந்துள்ளது.

இது தொடர்பாக பொலிசாருக்கு அறிவித்தால் அவர்களும் இந்தக் கசிப்பு வியாபாரிகளிடம் கப்பம் வாங்கிக் கொண்டு கண்டும் காணாதது போல் இருந்து விடுகின்றனர் என்று குறைபடுகிறார் ஒரு தொழிற்சங்கப் பிரதிநிதி.

# சாதுரியமாக வியூகம் அமைத்து காத்திருந்து தாக்கிய புலிகள்!

## அக்கினிச் சுவாலைக்கு நிகழ்ந்த கதி குறித்து மேலும் தகவல்கள்

அணையாமல் பற்றி எரியும் என்னும் எதிர்பார்ப்புடன் அக்கினிச் சுவாலை 1 என்ற பெயருடன் ஆரம்பிக்கப்பட்ட அதிரடித் தாக்குதல் நடவடிக்கையைத் தொடரவிடாது புலிகள் தடுத்து விட்டனர்.

ஆனையிறவைக் கைப்பற்றி கௌரவத்தைக் காப்பாற்றிக் கொண்டு — யுத்த நிறுத்தம், பேச்சு வார்த்தை என்று ஏதாவது செய்வதற்கு தமது தரப்பைப் பலம் மிக்க தாக்கலாம் — ரிப்பேராகியிருக்கும் தங்கள் பெயரை ஸ்திரப்படுத்திக் கொள்ளலாம் என்று அரசும் படைத்தரப்பும் கண்ட கனவு பகற்கனவாகிவிட்டது.

அரசு போட்ட திட்டத்தை புலிகள் தமது மதிநுட்பத்தால் தகர்த்தெறிந்து விட்டனர் என்றே அவதானிகள் கருதுகின்றனர்.

அதாவது ஆனையிறவை கைப்பற்றும் அரசின் திட்டமானது இன்று நேற்றுத் தீட்டப்பட்டது அல்ல. கடந்த ஆண்டு ஏப்ரல் மாதத்தில் ஆனையிறவுத் தளம் புலிகள் கையில் போய்விட்ட அன்றே தீட்டப்பட்ட திட்டம் அது.

ஆனையிறவுத் தளம் அப்படி ஒன்றும் பெரிய முக்கியமானது அல்ல என்று வெளியே சப்பைக் கட்டு கட்டிக் கொண்டாலும் உள்ளே அரசுக்கும் படைத்தரப்புக்கும் அது ஓர் அவமான வடுவாகவே இருந்து வந்தது.

அதற்காக திரும்பவும் எப்படியாவது ஆனையிறவைக் கைப்பற்றியே தீருவதென அன்று முதலே கங்கணம் கட்டி செயற்பட்டும் வந்திருக்கின்றனர்.

25ஆம் திகதி அதிகாலை 1.43 மணிக்கு படையினர் புலிகளின் நிலைகளை நோக்கி சரமாரியான ஷெல் வீச்சுக்களை ஆரம்பித்தனர்.

ஆட்டிலறிகள், பல்குழல் எறிகணைகள், டாங்கிகள் என்பன புலிகளின் பகுதிகளை நோக்கி குண்டுகளை மழையாகப் பொழிந்தன.

வடமராட்சி கிழக்குப் பகுதியிலும், தென்மராட்சிப் பகுதியிலும் நிறுத்தப்பட்டிருந்த 16 பல்குழல் எறிகணைகளும் 40 குண்டுகள் வீதம் ஒரே நேரத்தில் 640 குண்டுகளை அள்ளி வீசிக் கொண்டிருந்தன.

இவ்வாறாக காலை 5.30 மணி வரை ஷெல்களை மழையாகப் பொழிய புலிகள் தரப்பு இதற்கெல்லாம் எந்தப் பதிலுமில்லாமல் 'கம்' என்றிருந்தது.

ஏற்கனவே, புலிகள் பலமிழந்து விட்டனர் அவர்களின் பல்லுப்பிடுங்கப் பட்டு விட்டது என்றெல்லாம் அரச தரப்பினரின் வாய்சவடால்களை நம்பியிருந்த படைத்தரப்புக்கு புலிகளின் இந்த மௌனமும் உற்சாகத்தை தந்தது.

படையினர் அதிகாலை 5.30 மணியளவில் பொடிநடையாக ஆனையிறவுக்கு கிளம்பத் தயாராகினர்.

எதிர்பார்த்ததை விட அதிக வேகத்தில் சென்று 2 கிலோ மீற்றர் தூரத்தைக் கடந்து புலிகளின் நிலைகளை கைப்பற்றினர். வெகு உற்சாகத்துடன் முன்னேற முயற்சி நடந்து கொண்டிருந்தது. படையதிகாரிகள் மத்தியில் மகிழ்ச்சியான தொலைத் தொடர்பு உரையாடல்கள் நடந்தன.

இதே போக்கில் போய் ஆனையிறவை மட்டுமல்ல அதனைக் கடந்து இனி கிளிநொச்சியையும் பிடித்து விடலாமென படையினர் மனப்பால் குடித்தனர்.

சுமார் 2 கிலோ மீற்றர் முன்னேறி வந்த படையினரைப் புலிகள் வழிமறித்தனர். பலத்த எதிர்த் தாக்குதலை மேற்கொண்டனர்.

கிளாலியில் இருந்து நகர்ந்து முன்னேறிய கொமாண்டோ படையணியையும் கண்டல் — கடலேரி பகுதியூடாக நகர்ந்த 55ஆவது டிவிஷனின் ஒரு பகுதிப் படையணியையும் புலிகளின் சோதியா படையணி எதிர்கொண்டது. அதனை லெப்டினன்ட் கேர்ணல் சுதந்திரா தலைமை வகித்து நடத்தினார். நேரடியாக படையினருடன் பலத்த மோதலை எதிர் கொண்ட சோதியா படையணி படைத்தரப்புக்கு பலத்த இழப்பை ஏற்படுத்தியது. ஆயினும் சோதியா படையணி தனது தளபதியான சுதந்திரா உட்பட ஏராளமான போராளிகளை அந்த களத்தில் இழக்க வேண்டி ஏற்பட்டது.

இதேவேளை கண்டி வீதியுடன் மேற்குப் பகுதியில் நகர்ந்த 55ஆவது டிவிஷன் இராணுவத்தினர் மீது தற்காப்பு மற்றும் முறியடிப்பு சமரை புலிகளின் சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி மேற்கொண்டது. இதேபோல் கண்டி வீதிக்கருகில் நகர்ந்த படையினரை புலிகளின் மாலதி படையினர் வழிமறித்து தாக்கினர். அதன் தளபதியாக கேர்ணல் விதுஷா தாக்குதலை நெறிப்படுத்தினார். .

அடுத்து கிளாலியை அடுத்த கரையோரப்பகுதியால் நகர்ந்து முன்னேறிய 53ஆவது டிவிஷன் படையினருக்கெதிரான தாக்குதல்களை புலிகளின் எல்லைப்படை, சிறப்பு எல்லைப்படை வீரர்கள் மேற்கொண்டனர். இந்தப் படையணிகளை சுட்டா வழிநடத்தினார்.

இதேவேளை முன்னணியின் ஏனைய களப்பகுதிகள் லெப்டினல்ட் கேர்ணல்களான கோகுலன், துர்க்கா, வீரமணி, கோவிந்த், லோரன்ஸ், சுதந்திரா ஆகியோரால் வழிநடத்தப்பட்டன. படையினருக்கெதிரான தாக்குதல்கள் புலிகளால் வெகு மூர்க்கத்தனமாக மேற்கொள்ளப்பட்டன.

இவ்வாறு முன்னணி முனைகள் வழிநடத்தப்பட்டுக்கொண்டிருக்க அடுத்தகட்ட முனையை தளபதி கேர்ணல் பால்ராஜ் நெறிப்படுத்திக் கொண்டிருந்தார். இதே வேளை இராணுவத்தினருக்கு எதிரான பீரங்கித் தாக்குதல்களை கேர்ணல் கிட்டு பீரங்கிப் படையணி மேற்கொண்டது.

அதற்குச் சிறப்புத் தளபதி கேர்ணல் பானு தலைமை வகித்து துல்லியமான பீரங்கித் தாக்குதல்களை நடத்தினார்.

இதே வேளை முன்னேறும் படையினருக்கு ஆதரவாக கடற்பகுதியிலிருந்து தாக்குதல்களை மேற்கொண்ட கடற்படையினர் மீது தளபதி அறிவு தலைமையிலான கடற்புலிகள் எதிர்தாக்குதல் தொடுத்தனர். இந்தப் படையணிகளை எல்லாம் ஒருங்கிணைத்து அக்கினிச்சுவாலை நடவடிக்கைக்கு ஒருங்கிணைப்புத் தளபதியாக கேர்ணல் தீபன் கடமையாற்றினார்.

முன்னேறிய படைகள் மீது புலிப் போராளிகள் கடுமையாக எதிர்த் தாக்குதலை நடத்த நிலை தடுமாறிப்போனது படைத்தரப்பு.

படையினர் சுலபமாக முன்னேறக்கூடியளவுக்கு பாதைகளை விட்டு விட்டு ஏனைய பகுதிகளில் புலிகள் கண்ணி வெடிகளையும் மிதி வெடிகளையும் விதைத்து வைத்திருந்தனர்.



அக்கினிச் சுவாலை படையினர்

படையினர் தீவிர சோதனை நடத்தி கண்ணி வெடிகள், மிதிவெடிகள் இல்லை என்று உறுதிப்படுத்திக்கொண்டு முன்னேறினர். அந்தப் பாதையின் பின்புறத்தை கடுமையான ஷெல் வீச்சினால் புலிகள் தாக்கினர்.

அகப்பட்டுக் கொண்ட படையினர் மீது புலிகள் நேரடித் தாக்குதலை மேற்கொண்டனர். படையினரும் புலிகளும் நெருக்கமாக நின்று சண்டையிட்டதால் படையினர் ஆட்டிலறி, பீரங்கிகள், விமானத் தாக்குதல் எதனையும் மேற்கொள்ள முடியாது தடுமாறினர். இதனால் நாலாபுறமும் சிதறி ஓடிய படையினர் வேறு பகுதிகளில் புதைத்து வைக்கப்பட்டிருந்த கண்ணி வெடி, மிதி வெடிகளில் சிக்கினர். உயிர், உடல் பாதிப்புகளுக்கு உள்ளாகினர்.

படைத்தரப்பு பாரிய இழப்புகளைச் சந்திக்க வேண்டி ஏற்பட்டது இதனால்தான் என்று தெரிகிறது.

படைத்தரப்பைப் பொறுத்தவரையில் தம்மிடமிருந்த நவீன படைக்கலங்கள் உட்பட சகல வளங்களையும் உச்சக்கட்டமாகப் பயன்படுத்தியே இந்தத் தாக்குதல்களை மேற்கொண்டிருக்கிறது.

மிக் 27, கிபீர் சீ3, எம்.ஐ.24, எம்.ஐ35, கே8, பெல் 212, பெல் 412, கேச்சர், ஹேர்குலிஸ் போன்ற 50க்கு மேற்பட்ட வானூர்திகள் மற்றும் ஸ்ரார்2, சுகன்யா கிளாஸ் சுப்பர் டோரா உட்பட பல நவீன கடல் கலங்கள் ரீ55, 40 எம்.பி.எல்.ரி கவசவாகனங்கள் என்பன தாக்குதலுக்குப் பயன்படுத்தப் பட்டன.

படையினர் செக் நாட்டில் இருந்து தருவிக்கப்பட்ட கவசவாகனமாகிய ரீ.எஸ்.எஸ்.ஏ. எம்2 கவச வாகனத்தையும் பயன்படுத்தினர் என்று சொல்லப்படுகிறது.

இந்தக் கவசவாகனம் கணினிக்கட்டுப்பாடு கொண்டது.

இரவு மோதல்களின் போது தாக்குதல் வருமிடத்தை அவதானிக்கக்கூடிய இரவுப் பார்வை சாதனங்கள் பொருத்தப்பட்டது.

இவ்வாறான நவீன ஆயுதங்களுடன் களத்தில் நின்ற படையினருக்கு விமானப் படையினரும் போதிய வான்வழி குண்டு தாக்குதல் உதவியை வழங்கினர். விமானப்படையின் விமானங்கள் 10 நிமிடத்துக்கொருதடவை வந்து குண்டு வீசின என்றும் இவ்வாறு 80தடவைகளுக்கு மேல் குண்டு வீச்சு மேற்கொள்ளப்பட்டதாகவும் களமுனை தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடலிலே இருந்து கடற்படையினரும் தமது பங்குக்கு ஷெல்களையும், பீரங்கிகளையும் வெடிக்கவைத்துக் கொண்டே இருந்தனர்.

தரை, கடல், ஆகாய வழிகள் மூன்றிலும் தமக்குள்ள அதி நவீன, உச்சக் கட்ட சக்திகளைப் பயன்படுத்தி படைத் தரப்பு முன்னேற முயற்சி செய்தது.

ஆயினும் புலிகள் தம்மிடமிருந்த 52 எம் — எம் ஆட்டிலறிகள், 122 எம் எம் ஆட்டிலறிகள், 120 எம்.எம் மோட்டார்கள் என்பவற்றை பயன்படுத்தியே இந்தத் தாக்குதலை முறியடித்திருக்கிறார்கள்.

இந்த மோதலில் 248 படையினர் கொல்லப்பட்டும், 19 பேர் படையினர் காணாமல் போயும் 860 படையினர் காயமடைந்திருப்பதாகவும் படைத்தரப்பு தெரிவித்துள்ள போதிலும் 400க்கு அதிகமான படையினர் கொல்லப்பட்டதாகவும், இரண்டாயிரத்துக்கும் அதிகமான படையினர் காயமடைந்ததாகவும் சுயாதீன செய்திகள் தெரிவிக்கின்றன.

2 டாங்கிகளும் 1 எம் ஐ2 உலங்கு வானூர்தியும் சேதமாக்கப்பட்டுள்ளன.

படையினரால் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட எறிகணைகள், பீரங்கி குண்டுகள் பல்குழல் எறிகணைகள், விமானக் குண்டுகள் என்பன 60 மணி நேர நடவடிக்கையின் போது வீசப்பட்டுள்ளன என்று களமுனைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு 60 மணி நேரத்தில் பல ஆயிரம் கோடி ரூபா செலவு செய்து மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை — புலிகள் தம்மிடம் ஏற்கனவே இருந்த ஆயுதங்களைப் பயன்படுத்தியே முறியடித்துவிட்டதானது படைத்தரப்பில் சலசலப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

பழைய ஆயுதங்களைக் கொண்டே இவ்வளவு தீவிரமாக தாக்கி பலத்த சேதத்தை ஏற்படுத்திய புலிகள் — தம்மிடமுள்ள நவீன ஆயுதங்களை பயன்படுத்தினால் என்ன நடக்குமென்று இராணுவ தரப்பில் சிலர் முணுமுணுக்க தொடங்கிவிட்டனர்.

அவ்வாறான அதிருப்தியாளர் சிலர் யுத்தம் மூலம் புலிகளை வெல்வது கடினமென்றும் —

விரைவில் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்கும் படியும் — ஜனாதிபதி சந்திரிகா வுக்கு கடிதமொன்றை எழுதியிருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆயினும் புலிகள் தரப்பும் இந்த மோதலில் கூடுதலான இழப்பை சந்தித்திருக் கிறது என்றே சொல்லப்படுகிறது.

தமது தரப்பில் 70 போராளிகள் இறந்திருப்பதாக புலிகள் அறிவித்திருந்தனர். ஆயினும் தொடர்ந்து இடம்பெற்ற மோதல்களில் இறந்த 128 போராளிகளின் பெயர்களை புலிகள் அறிவித்துள்ளனர்.

லெப். கேர்ணல் சுதந்திரா அல்லது செங்கதிர் என்ற பெயருடைய யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஜேசுதாஸன் மரிய மகிழினி பளைபகுதியில் படையினரின் வலிந்த தாக்குதலில் லெப். கேர்ணல் நிர்மா என்ற பெயருடைய கிளிநொச்சியை சேர்ந்த ஞானாநந்தன் மேரி சாந்தினி ஆகிய 2 தளபதிகள் இதில் அடங்கி உள்ளனர்.

இதுதவிர 9 மேஜர்கள் 20 கப்டன்கள் 30 லெப்டினன் கள் 15 இரண்டாம் லெப்டினன்கள் என்று புலிகள் தரப்பிலும் இழப்புகள் அதிகமானதாகவே காணப்படுகின்றன.

ஆயினும் தம்மிடமுள்ள உச்சக்கட்ட சக்திகளை பயன்படுத்தி படையினரால் மேற்கொள்ளப்பட்ட அக்கினிச் சுவாலை நடவடிக்கையை — புலிகள் ஊதித் தள்ளிவிட்டதானது இனிமேல் வேறொரு படை நடவடிக்கையில் எவ்வாறு படைத் தரப்பு ஈடுபடப் போகிறதென்ற கேள்வியை எழுப்பி நிற்கிறது.

இந்தத் தாக்குதலில் ஏற்பட்ட பின்னடைவு தொடர்பாக இராணுவ தலைமைப்பீடம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

தேசிய பாதுகாப்பு சபை ஜனாதிபதி சந்திரிகா தலைமையில் கூடி இது தொடர்பாக ஆராய்ந்துள்ளது.

ஆயினும் இவையெல்லாம் காலம் கடந்துவிட்ட நடவடிக்கையென்றே கருதப்படுகிறது. படையினரில் கிட்டத்தட்ட 5 பட்டாலியன்கள் களமுனையிலிருந்து அகற்றப்பட்டு விட்டன.

ஏற்கனவே ஆள் பற்றாக் குறையால் தவிக்கும் படைத் தரப்புக்கு இது ஒரு ஆழமான பாதிப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

இந்த தாக்குதல் மூலம் அரசு தனது பலத்தில் பெருமளவை இழந்திருக்கிறது.

—குமரன்

# கன்னியர் வாழ்வை குலைக்கும் பஞ்சாங்கக் குளறுபடிகள்!

தேரடியில் வந்து அமர்ந்ததும் ''ஊரிலை தடி எடுத்தவை எல்லாம் தண்டல்காரனாக ஆகிவிட்டினம்'' என்றார் விநாசியர்.

''ஏன் என்ன விஷயம்?'' கேட்டான் டானியல்.

''மே முதலாம் திகதி யாழ்ப்பாணத்தில் தொண்டர் ஆசிரியர்கள் சங்கக் கூட்டம் பற்றி ஒரு பத்திரிகை விளம்பரம் வந்திருந்தது. அதிலை நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப் பட்டுள்ள தொண்டர் ஆசிரியர்களை கட்டாயம் கூட்டத்துக்கு வரும்படி கூறப்பட்டிருந்தது. தலைவரும் செயலாளரும் அந்த விளம்பரத்தைக் கொடுத்திருந்தார்கள்'' என்றார் விநாசியர்.

''அவர்கள் இப்படிக் கூட்டம் வைப்பது சகஜம்தானே'' கேட்டான் லோகன்.

''கூட்டத்துக்கு அழைப்பு விடுத்தது சரிதான். ஆனால் கூட்டத்துக்கு வராவிட்டால் நேரும் விளைவுகளுக்கு நாம் பொறுப்பில்லை என்று மிரட்டல் தோரணையில் கூறப்பட்டி ருந்தது. தொண்டர் ஆசிரியர் நியமனங்கள் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படுகின்றன. அப்படி யிருக்க தொண்டர் ஆசிரியர் சங்கச் செயலாளருக்கும் தலைவருக்கும் இப்படி மிரட்டும் அதிகாரம் எப்படி வந்தது'' கேள்வியுடன் நிறுத்தினார் விநாசியர்.

''அதிகாரத்தில் இருப்பவர்கள்தான் அந்த அதிகாரத்தைக் கொடுத்திருப்பினம்'' எழுந்தது சின்னாச்சியின் குரல்.

''நாளைக்குத் தங்கள் விருப்பப்படி நடக்காவிட்டால் நேரும் விளைவுகளுக்கு தாம் பொறுப்பல்ல என்றும் மிரட்டல் வரும்போல இருக்கு'' விசனித்தான் டானியல்.

''என்ன தம்பி செய்யிறது. எப்படியும் வாழலாம் என்று நினைக்கிறவை கொஞ்சம் அப்பிடி இப்பிடி நடக்கிறது வழக்கம்தானே'' என்றார் அதுவரை அமைதியாக இருந்த பரமலிங்கம் மாஸ்ரர்.

''இதைக் கேட்டவுடன்தான் ஞாபகம் வருகுது ஈ.பி.டி.பி. சார்பில் மேதினத்தன்று பிரமாண்டமான பேரணி நடந்ததெல்லோ. இரவு கலை நிகழ்ச்சிகளும் நடந்தன. ஊரடங்கு தளர்த்தப்பட்டதால் சனம் நிம்மதியாகப் பாட்டுக் கச்சேரி பாத்தவை. கனநாளாக இரவானால் வீடுகளுக்குள் அடைபட்டுக் கிடந்த யாழ்ப்பாண மக்களுக்கு ஈ.பி.டி.யினரின் புண்ணியத் தால் கொஞ்சம் காற்றாடப் பொழுதுபோனது'' முகத்தில் எந்தச் சலனமும் இல்லாது சொன்னாள் சின்னாச்சி.

''கிழவி என்ன சேம்ஸைட் கோல் போடுது'' கிசுகிசுத்தான் லோகன்.

அதைக் காதில் வாங்காமல் தொடர்ந்தாள் சின்னாச்சி. ''ஈ.பி.டி.பி நடத்திய மேதின ஊர்வலத்தில் வந்த ஒரு ஊர்தியில் வள்ளத்தில் மீனவர் ஒருவர் சுடப்பட்டு இறந்து கிடக்கும் காட்சி தத்ரூபமாக அமைக்கப்பட்டிருந்தது. சனமும் அதை நல்லா ரசிச்சினம். ஆனால் ஊர்வலப் பாதையிலை பத்தடிக்கு ஒரு ஆளாக காவலுக்கு நின்ற 'அவை' மட்டும் அதைப் பார்த்து தலை குனிஞ்சினம்'' என்றாள்.

''குற்றம் செய்த மனம் குறுகுறுத்ததாக்கும்'' குறுக்கிட்டார் விநாசியர்.

''அது மட்டுமே. ஒரு லாண்ட் மாஸ்ரரிலை 'பெண்களின் கற்புக்கு உலை வையாதே' என்று எழுதப்பட்ட மட்டை யொன்று தொங்கிச்சிது. இன்னொரு ஊர்தியிலை 'தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்று' என்று எழுதியிருந்தது. இதையெல்லாத்தையும் பார்த்துக்கொண்டு எனக்குப் பக்கத்தில் நின்ற ஒரு பிள்ளை இதுகளைக் கொழும்பிலை யெல்லோ போய்ச் சொல்ல வேணும் என்று கூறியதைக் கேட்டு அந்த இடமே சிரிப்பால் அதிர்ந்தது'' கூறி முடித்துவிட்டு வியாபாரத்தில் கவனத்தைத் திருப்பினாள் சின்னாச்சி.

''என்ன லோகன். ஸேம் சைட் கோல் என்றாய், கிழவி 'கோணர் கிக்'கில் கோல் அடிச்சுப்போட்டுது'' காதைக் கடித்தான் டானியல்.

''காணாமல் போனோர் பற்றிய விசாரணைகள் முழு வீச்சில் நடக்குது'' பேச்சைத் திசை திருப்பினார் விநாசியர்.

''ஓம் அரசாங்கம் இதற்கென்று ஆள்களை அனுப்பி பொலிஸ் நிலையங்களிலை காணாமல்போனவர்களின் உறவினர்களை கொஞ்சம் கொஞ்சமாகக் கூப்பிட்டு விசாரணை நடத்துகினம். ஏதாவது ஒரு முடிவு வந்தா



## தேரடி அரட்டை

நல்லதுதானே'' என்றார் மாஸ்ரர்.

''மாஸ்ரர் இன்னும் அந்தக் காலத்திலேயே இருக்கிறார். யானை வாங்கிப்போட்டு அங்குசம் வாங்காத கதையெல்லோ அங்க நடக்குதாம்'' விஷயத்தை உடைத்த லோகன் மேலும் தொடர்ந்தான். ''விசாரிக்க வந்தவைக்கு தமிழ் தெரியாதாம். விசாரணைக்குப் போறவைக்கு சிங்களம் தெரியாது. கூடப்போற விதானைமாரிலும் பெரும்பாலானவைக்கும் அந்த நிலைமைதான். இப்படி ஆளுக்கு ஆள் மொழி தெரியாத நிலைமையிலை காணாமல்போனவை பற்றி இவை சொல்லி, அவை கேட்டு கட்டாயம் முடிவு தெரியும் மாஸ்ரர், நம்பியிருங்கோ'' நக்கல் சிரிப்புடன் முடித்தான் லோகன்.

''அப்ப சிதம்பர சக்கரத்தைப் பேய் பார்த்த கதைதான்'' என்றாள் சின்னாச்சி.

''உங்கை மேடை போட்டு முழங்கிறவை இந்த மாதிரி விஷயத்திலை கவனம் எடுத்து மொழி தெரிந்தவர்கள் விசாரணை நடத்த நடவடிக்கை எடுக்கலாம். யார் செய்யப்போகினம்''. கவலைப்பட்டார் மாஸ்ரர்,

''ஏன் எங்கடை 'அப்புக்காத்து' அரசியல் வாதிகள் இதில் அக்கறை எடுக்கலாம். ஆனால் அவைக்கு இதுக்கெல்லாம் நேரம் இருக்காது. அந்த நேரத்திலை இரண்டு அறிக்கை எழுதிப் போடலாம் எல்லோ'' குத்திக் காட்டினார் விநாசியர்.

''இந்தக் குளறுபடியைச் சொல்லுறியள். பஞ்சாங்கக் குளறு படியால் ஒரு கலியாணம் நின்று போன கதை தெரியுமோ'' கேட்டபடியே காலை மாற்றிப் போட்டார் மாஸ்ரர்.

''அதென்ன கதை'' ஆவலுடன் கேட்டான் லோகன்.

கூறத் தொடங்கினார் மாஸ்ரர்.

''ஒரு கலியாணப் பேச்சிலை பெண்ணின் ஜாதகத்தை மாப்பிள்ளை வீட்டுக்குக் கொடுத்தவை, மாப்பிள்ளையின் தகப்பனின் தாய் பஞ்சாங்கத்தைப் பார்த்து, இரண்டு பேரும் ஒரே நட்சத்திரம் மற்ற விஷயங்களும் சரி, ஆனபடியால் பொருத்தம் என்று சொல்லிப் போட்டா, இதனையடுத்து இரு பகுதியும் கலியாணத்துக்கு ஆயத்தப்படுத்திச்சினம்.

''இந்தச் சமயத்திலை பொடியனும், பெட்டையும் ஒருத்தரோடை ஒருத்தர் கதைச்சுப் பழகி, 'உனக்கு நான், எனக்கு நீ' என்ற அளவு பாசமாகிவிட்டினம்.

''இந்த நேரத்திலை பெண் வீட்டிலை இருந்த ஒரு பெரிசு, 'குண்டொன்றைத்' தூக்கிப் போட்டிருக்கு'' சற்று நிறுத்தி மூச்சு வாங்கிக் கொண்ட மாஸ்ரர் மேலும் தொடர்ந்தார்...

''ஒரு பஞ்சாங்கத்தை எடுத்துக் காட்டிய அந்தப் பெரிசு, இரண்டு பேரின் நட்சத்திரத்தை சொல்லி, அது ஒன்றாக இருந்தால் பொருத்தமில்லை'' என்று சொல்லியிருக்கிறார். போதாக் குறைக்கு நட்சத்திரப் பொருத்தமில்லாட்டி மாப்பிள்ளைக்கு கூடாது என்று வேறு பயமுறுத்தியிருக்கினம்.

''இதனாலை எல்லா ஆயத்தமும் செய்தும் கலியாணம் அந்தரத்திலை நிக்குது.''

''அதெப்படி மாஸ்ரர், பஞ்சாங்கத்திலை வெவ்வேறு மாதிரி பொருத்தம் போட்டிருக்குமோ'' கேட்டான் லோகன்.

''அந்தச் சந்தேகத்திலை நானும் விசாரிச்சுப் பார்த்தனான்.''

''முதலில் மாப்பிள்ளை வீட்டார் பார்த்தது வாக்கிய பஞ்சாங்கம். அதிலை மத்திம பொருத்தம் என்றிருக்கு. மற்ற விஷயங்கள் நல்ல பொருத்தம் என்றால் ஒன்று, இரண்டு மத்திம பொருத்தங்களையும் சேர்க்கிறது வழக்கம். பிறகு பெரிசு கொண்டு வந்தது திருக்கணித பஞ்சாங்கம். அதில் அவையின்ரை நட்சத்திரம் ஒன்றாக இருந்தால், பொருத்தமில்லை என்று போட்டிருக்கு. இதனால்தான் குழப்பம்.''

''கடைசியாக என்ன முடிவு?'' ஆவலுடன் கேட்டான்.

''பொடியன் என்ன நடந்தாலும் பரவாயில்லை. அந்தப் பிள்ளையைத்தான் கட்டுறது என்று ஒற்றைக்காலில் நிற்கிறான். 'கலியாணம் வரைக்கும் வந்து தடைப்பட்ட பிறகு உமக்கு வேறை கலியாணம் பேசிறது கஷ்டம்' என்று எப்படியாவது, அந்தப் பிள்ளையை கட்ட வேணும் என்ற விருப்பத்திலை பொடியன் வெருட்டியும் பார்த்திட்டுது.

''ஆனால் அந்தப் பிள்ளை இனிமேல் நான் வேற ஒருத்தரையும் கட்ட மாட்டன். அதே சமயம் உங்களைக் கட்டி, அதனால் உங்களுக்குக் கெடுதல் நடக்கக் காரணமாகவும் இருக்கமாட்டன்'' என்று கூறிப் போட்டுது.

''இதுக்குள்ளை, பொம்பிளை வீடு கலியாணத்தை நிற்பாட்டத்தான் பஞ்சாங்கத்தை சாட்டு கூறிகினம் என்று அக்கம் பக்கத்தார் மாப்பிள்ளை வீட்டை உசுப்புகினம். இப்படி பெரியவை மல்லுக் கட்ட, ஒருவரை ஒருவர் உயிருக்குயிராக நேசிக்கிற பொடியனும், பெட்டையும் என்ன செய்யிறது என்று தெரியாமல் தவிக்கினம்.''

கதையைக் கூறி முடித்தார் மாஸ்ரர்.

''பிரிந்து நிற்பது தமிழனின் பிறவிக் குணம் என்று பகிடி பண்ணிறவை, அது இப்ப பஞ்சாங்கங்கள் வரை வந்து நிற்குது.'' கவலையுடன் கூறியபடி கடலைக் கடையைக் கட்டத் தொடங்கினாள் சின்னாச்சி.

தேரடி கலைந்தது.

— ஏகலைவன்

## கவிதைப் பூங்கா

### மனிதனுருவில்......!

மனிதனுருவில் பலவிலங்கு
பாரினிலே வாழுது — அதைப்
பார்க்கும் போது மனசுகொஞ்சம்
நோகத்தானே செய்யுது!

அடுத்தவரை ஏமாற்றி
அபகரித்து வாழுகின்ற
நடுக்காட்டு நரிக்கூட்டமோ
நாட்டினிலே ஏராளம்

அதிகார கதிரைகளை
அடைந்ததும் ஏனையோரை
மிதிக்கின்ற எருமைகள்
மேதினியில் ஏராளம்

பகைமையினால் பலிதீர்க்க
பகலிரவாய் அலைகின்ற
மிகவிஷமாம் நாகங்கள்
மேதினியில் ஏராளம்.

— ஜீ.ஒகஸ்டின்

### குழந்தைதான்

காலையிலே
உனைக்கண்டு
சோலையிலே பூப்பறித்து
உன்
கூந்தலிலே சூட்டுவேன்
இல்லையெனில் நீ அழுதிடுவாய்
ஏனெனில்...
எப்போதும் — நீ
எனக்கு 'குழந்தை'
நீ நடக்கும்
பாதையிலே
கிடந்திடும் கற்களையும்,
முட்களையும் அகற்றிடுவேன்
இல்லையெனில் நீ அழுதிடுவாய்
ஏனெனில்...
எப்போதும் — நீ
எனக்கு 'குழந்தை'

கட்டழகியே — உன்
கட்டளையை மீறமாட்டேன்
உனைவிட்டு
எங்கும் மாறமாட்டேன்
இல்லையெனில் நீ அழுதிடுவாய்
ஏனெனில்...
எப்போதும் — நீ
எனக்கு 'குழந்தை'

—மா.செழியன்

### உன்னுடன்

மேகத்துக்கு காற்று சொல்லும்
காதல் சுகமானது.
வானுக்கு நிலவு சொல்லும்
காதல் ஒளியானது.
உனக்கு நான் சொல்ல வந்த
காதல் தடையானது.
ஓட்டில் ஓடும் மழைநீரைப் போல்
ஓடோடி வந்தேன் காதல் கொள்ள.
மூழ்கிப் போன படகைப் போல்
தாழ்ந்து போகிறேன்.
கண்ணிழந்த குருடனைப் போல்
வாயிழந்த ஊமையைப் போல்
காதல் கொள்கிறேன் உன்னுடன்

—தி. பரணி பாரதி

### இழிவானது

தமிழினப் பெண்கள் மீது
மேற் கொள்ளும்
பாலியல் வல்லுறவு
பயங்கர வாதத்தின்
இன நசுக்கல்
ஆக்கிரமிப்பு பாலியல்
வதைக்கு
அதிகாரம் துணை போவது
அசிங்கமானது!
உலக அரங்கில்
அவமான மானது!

—கவிக்குயிலன்

### ஏன்? ஏன்?

தொடரும் யுத்தம்
தொலைத்திடும் உயிர்களின்
தொகையினைத் தெரிந்தும்
தொடராமல் தடுக்கவோ
தலையிட வேண்டியவர்கள்
தயங்குவதும் ஏன் ஏன்?

— தங்கத் தமிழன்

### போர்க்கள வாழ்க்கை

வாழ்க்கையொரு போர்க்களம்
வாழத் துணிந்துவிட்டால்
இன்பத் தோட்டம்
அப்பப்ப முகிழுடைக்கும்
அனுபவப் பூக்கள் அள்ளிவரும்
வெற்றியும், தோல்வியும்
உன்கை கனியாவதும்
வாடிக் காய்வதும்
உன் திறமையில்.
வாழ்க்கையொரு சதுரங்கம்
வாய்ப்பை பயன்படுத்தினால்
அரசனுக்கும் அறைகூவலாம்.
கானலில் நீரெடுத்து.
கற்பனையில் தோட்டம் வைத்து
காகிதப் பூக்கள் பூக்கவைத்து,
வாசத்தைத் தேடி மோசம் போகும்
மாயைக்குள் மனசை தொலைத்து
பொல்லாத கனவுகளுடன்
பொழுதைக் கழிக்குமொரு
வேண்டாத வீராப்புக்கள்
வேண்டாது வெற்றிகளை.

—ஜெ.சூரியன்

# நித்திய கல்யாணி

## நீ.பி. அருளானந்தம்

சுடர் ஒளி சிறுகதை

கல்யாண வீட்டுக்குப் போகாவிட்டாலும் கூட ஒருவரின் சாவு வீட்டுக்குக் கட்டாயம் போக வேண்டும்.

அனேகமாக நாலு பேராய் சேர்ந்து கூடித்தான் பெண்கள் அந்த இழவு வீட்டுக்கு வருகை தந்துகொண்டிருந்தார்கள். அவளோ அங்கே தனியாகத்தான் வந்துகொண்டிருந்தாள். பூவும் பொட்டுமாக இப்போ உடையில் முன்னையதை விட திருத்தம். நடையும் அப்படித்தான். கற்றைத்தலை முடியை முன்போல் காணக்கிடைக்கவில்லை.

இவளை எங்கே கண்டாலும் பயம்தான் அவனுக்கு. பலருக்கு முன்னே அவள் கதைத்தாளென்றால் பரிசுகெட்டதாய் போய்விடும் என்ற பயம்.

விளம்பரம் இல்லாமலே பிரபலமாகிற தொழில் விபசாரம். இன்று திருந்தி நடக்கிறவளாக இருக்கிறாளாம். இப்படித்தான் ஊருக்குள் அவளைப் பற்றி கதைக்கிறார்கள்.

இவள் பெயர் மல்லிகா. மணமுள்ளதான மல்லிகை போல் அழகும் குணமும் கொண்டவளாக இளமையில் இவள் எப்படி இருந்தாள் என்று நினைக்கையில் பழைய சம்பவங்களை நாடி அவனது சிந்தனை சிறகடித்துப் பறந்தது.

* * *

பொன்னம்பலவாணர் என்றால் ஊருக்குள்ளே பெரிய விலாசமாகவிருந்தது. அந்தளவுக்கு முதன் முதலில் கல் வீடு கட்டிக்கொண்டவரும் பணக்காரரும் அவர்தான்.

பூபாலன், அவருக்கு மூன்று பெண் பிள்ளைகளுக்குப் பின்பு பிறந்த ஆண்பிள்ளை. சிறுவயதிலே பக்கத்துத் தெருவிலே ஓடி விளையாடும் பிள்ளைகளோடு இவனும் சேர்ந்து கொள்வதுண்டு. அந்த இடத்திலேதான் மல்லிகாவின் வீடும் இருந்தது. சிறுவயதில் அவளும் அங்கு வந்து அவர்களுடன் சேர்ந்துகொண்டு விளையாடுவாள்.

இலுப்பையும், நாவல் மரங்களும் நின்றதால் விளையாடும் அந்த இடம் நல்ல நிழல். மூன்று பெரிய ஆட்கள் சுற்றிநின்று கட்டிப் பிடிக்குமளவு பெருப்பம் கொண்ட ஒரு நாவல் மரத்தைத் தறித்து விழுத்தி துண்டுபோட்டிருந்தார்கள். அதற்கு மேல் பிள்ளைகளெல்லாம் ஏறி இருந்து கீழே குதித்து விளையாடுவார்கள்.

மல்லிகா பொடியன்களோடு சமமாக நின்று சண்டை போடுவாள். ஓட்டத்தில் எல்லா நண்டு சிண்டுகளையும் முந்திவிடுவாள். படுசுட்டியான பெண்பிள்ளை அவள்.

தைப் பொங்கல், சித்திரைப் புத்தாண்டு பண்டிகைகள் வந்தால் இலுப்பை மரத்திலே பெரிய ஊஞ்சல் கட்டி பிள்ளைகளை நடுவிலே இருக்கவைத்து பெரியவர்கள் இருவர் எதிரும் புதிருமாக நின்றுகொண்டு உந்தி மிதித்து ஊஞ்சலை ஆட்டுவார்கள்.

காற்றைக் கிழித்துக்கொண்டு மேலும் கீழும் ஆடிவருகையிலே பூபாலனுக்கும் அவனைப் போல் வயதுப் பிள்ளைகளுக்கும் பெருமகிழ்ச்சி. அதிலே மல்லிகா எப்போதும் பூபாலன் பக்கத்திலேயே இடம்பிடித்து இருப்பாள். அவளது பிஞ்சுக்கை அவனை விழவிடாது வளைத்தபடி ஜாக்கிரதையாக இருக்கும். எதிலும் அன்புள்ள அக்கறை அவனிடத்தில் அவளுக்கு இருந்தது.

மல்லிகா கொஞ்சக் காலத்தில் பூத்த மல்லிகை போல் புதுமெருகு கொண்டாள். கருநாகம் போல் சுருட்டையான கூந்தல் முகத்தில் அலைபாய, கண்டவர் மயங்கும் கவர்ச்சிக் கண்களைக் கொண்டவளாக மாறிவிட்டாள்.

பூபாலனுக்கும் இப்போ காளை வயசு, மீசையெல்லாம் அரும்பத் தொடங்குகிறது.

'' மீசை முளைக்குது உங்களுக்கு'' சொல்லிவிட்டு களுக்கென்று அவள் சிரித்தாள். ''சும்மா சொல்லக் கூடாது பூபாலன் நீங்கள் வடிவா இருக்கிறீங்க'' மீண்டும் சொன்னாள். எதையும் அவள் மனதில் மறைத்து வைப்பது இல்லை!

''நீரும் கூடத்தான் இப்ப வடிவா இருக்கிறீர்'' பூபாலனும் புகழ்ந்தான். உண்மையைத் தான் சொன்னான்.

''போம் பூபாலன் பொய் சொல்லுறீர்'' அவளுக்கு உள்ளத்தில் ஒரு கிளுகிளுப்பு என்றாலும் இவற்றை அவள் பெரிதாக வேறு விதமாக எண்ணவில்லை. ஆழமான ஒரு நல்ல நட்புக்குரிய உரையாடலாகத்தான் இருவருக்குமிடையில் இவைகள் இருந்தன.

பக்கத்து ஊர்களிலே ஆண்டுதோறும் நடக்கும் கோயில் திருவிழாவுக்கெல்லாம் பூபாலன் போவதுண்டு. இங்கேயெல்லாம் தனது தாயுடன் மல்லிகாவும் வருவாள். அங்கு அவனைக் கண்டால் நன்றாகவே நின்று கதைப்பாள்.

காவடி ஆட்டம் கண்டால் மல்லிகாவின் தாய் உரு ஏறி



ஆடுவாள். வீட்டில் இருந்தாலும் வெள்ளிக்கிழமைகளில் அவளுக்கு உரு வந்துவிடும். இப்படி ஆடும்போது கீழேயும் விழுந்து புரள்வாள். பக்கத்து வீட்டு ஆண்கள் இப்படியான நேரம் இவளுக்கு உதவி செய்வதாகவென்று வந்து சுயநினைவு அவளுக்கு வருமளவு மட்டும் அமர்த்திப்பிடித்து அணைத்துவிட்டுப் போவார்கள். இப்படியெல்லாம் இவர்கள் குடும்பத்தில் இருக்கு.

மந்திரம், மாயம் என்று இவர்கள் எந்த நேரம் பார்த்தாலும் கதைத்துக் கொண்டிருப்பார்கள். இதையெல்லாம் பூபாலனும் பார்த்திருக்கிறான். என்றாலும் சரி பிழை இதைப்பற்றி அவன் அவர்களுடன் கதைப்பதில்லை.

மல்லிகா அரைப்படிப்போடு பாடசாலையை விட்டு விலகிவிட்டாள். பூபாலன் படித்து முடித்துவிட்டு வெளிநாடு போனான். திரும்பி அவன் ஊருக்கு வருகையிலே அங்கு எல்லாமே மாற்றம்.

மல்லிகா ஒரு குழந்தைக்குத் தாயாகி இருந்தாள்.

''மல்லிகா இது உன் குழந்தையா? உனக்கு கல்யாணம் ஆகிற்றா'' என்று ஆவலோடு கேட்டான்.

''அதை ஏன் கேட்கிறீங்க பூபாலன். ஒரு நயவஞ்சகன் என்னை நல்லா ஏமாத்தீட்டான்'' அழுதாள்.

அவனுக்குப் பரிதாபமாக இருந்தது. பெண்குழந்தையோடு அவளின் கோலத்தைப் பார்க்க மனதை வாட்டியது.

அப்ப இப்ப என்ன மாதிரி? சீவியத்துக்கு என்ன செய்கிறாய்?

''என்னைப் போல ஏமாத்திக் கைவிடப்பட்ட பெண்கள் என்னத்தையெல்லாம் செய்யத் துணியிறாங்களோ அதைத்தான் வழியொண்டும் கிடைக்காமல் நானும் பார்த்துச் செய்யிறன். உடம்பை வித்து காசுவாங்கிறன். இதுவுமொரு வியாபாரம்தானே'' வெறுமை கலந்த சிரிப்புடன் அவள் சொன்னாள்.

அவனுக்கு அனலுக்குள் தள்ளிவிட்டாற் போல் இருந்தது. முன்னைய பால்ய சினேக அன்பு கண்களை நீர்க்குளமாக்கியது.

''மல்லிகா இப்படி உனக்கு வருமெண்டு நான் கனவிலையும் நினைக்கேல்ல, உனக்கு உதவிசெய்ய சொந்தக்காரர் ஒருவருமில்லையா?'' அக்கறையுடன் கேட்டான்.

''ம்... என்று பெருமூச்செறிந்தபடி ''பூபாலன் எங்கட சொந்தக்காரரைத்தான் உங்களுக்குத் தெரியுமே எல்லாரும் பரம்பரை ஆண்டிகள், அவையளுக்கு மனமிருந்தாலும் கையில பணமில்லை. அதனால அவங்களையும் குற்றம் சொல்லி பிரயோசனமில்ல'' என்று சோர்ந்தபடி சொல்லி முடித்தாள்.

''சரி உன்ரை அம்மா இப்ப என்ன செய்யிறா'' ஆர்வமாகக் கேட்டான்.

கீழே நிலத்தைப் பார்த்தபடி அவள் சொன்னாள்.

''அம்மா புண்ணியம் செய்தவ வேளைக்குப் போய்ச் சேர்ந்திட்டா''

இவையெல்லாவற்றையும் கேட்க நெஞ்சுக்கு மேல் பாறாங்கல்லை வைத்ததுபோல் அந்தரமாக இருந்தது அவனுக்கு.

''பூபாலன் கதைச்சது காணும். ஆராவது கண்டால் உங்கட நல்ல பேரும் என்னால கெட்டுப்போயிடும், நான் வாரன் பூபாலன்''

சொல்லிவிட்டு அந்த இடத்தை விட்டு அவள் போய்விட்டாள்.

அன்று இரவு படுக்கையில் பூபாலனுக்கு நித்திரையே வரவில்லை. பால்ய வயது பழைய நினைவுகள் நீங்கிப் போவதற்கு இரவு நடுச்சாமமாகியது. ஒருவாறு மனதை நிம்மதிப்படுத்தி பின்பு கண் அயர்ந்தான்.

சில மாதங்களின் பின் பழையபடி மீண்டும் வெளிநாட்டு வாழ்க்கையைத்தான் பூபாலன் தேடிக்கொண்டான். இருண்ட தேசங்களிலே பல காலம் கழித்துவிட்டு மீண்டும் தாய் மண்ணிலே காலடி எடுத்து வைத்ததும் வீட்டிலுள்ளவர்கள் திருமணம் செய்துகொள்ளும்படி அவனுக்கு நெருக்குதல் கொடுத்தனர்.

ஆனால் அவர்களது முயற்சி பலிக்கவில்லை. கலியாணம் எட்டிக் காய்போல் அவனுக்குக் கசந்தது. நாற்பத்தைந்து வயதில் உடலும் அசதியாக வருகிறதை உணர்ந்து காலம் போன பின் கலியாணம் எதற்கு என்று இருந்துவிட்டான்.

* * *

வீட்டிலே செய்கின்ற கிரியை எல்லாம் முடிந்து பிரேதம் பாடையில் வைக்கப்பட்டுவிட்டது. நினைவு கலைந்து பூபாலனும் வெளியே வீதிக்கு வந்தான்.

* * *

வெட்டப்பட்ட வேலியைக் கடக்கும் போது மல்லிகா அவன் கண்ணில் பட்டாள். அந்த நேரம் இருவர் பார்வையும் பழைய நினைவுகளை ஒரு முறை பகிர்ந்துகொண்டன.

மல்லிகா தனி மரம் போல் ஒரு மூலையில் நின்றாள். அவளுடன் அங்கு நின்ற எவருமே கதைக்கவில்லை. சமூகம் அவளை தள்ளிவைத்து விட்டதில் எவருமே அவளை ஒரு மனுசியாகக் கணக்கெடுக்கவில்லை.

அவள் நெற்றியில் இட்டிருந்த அந்தக் குங்குமப் பொட்டுக்கும் அர்த்தமில்லை. அவளுக்குத்தான் கணவன் இல்லையே?

என்றாலும் அவள் இறக்கும் வரை அதை வைத்துக் கொள்வாள். ஏனென்றால் அந்த ஊரிலுள்ள திருமணமான ஆண்கள் பலர் அவளது ரகசிய கணவன் மார்கள். அவர்களெல்லாம் இறப்பதற்கு முன் சுமங்கலியாக அவள் இறந்து விடுவாள். இதனால் அவள் என்றுமே நித்திய கல்யாணி தான்.


பாலியல் பலவீனத்துக்கு
ரிஷி அஜமாமிச லேகியம்

தேவையில்லாத வைகரா நம்பிக்கையுடன்
பாலியல் பலவீனத்துக்கும் உடல் சக்திக்கும்,
ஆண்மைக்கும் வீரிய விருத்திக்கும்,
ரிஷி அஜமாமிச லேகியம்.
ரூ. 195/- ரூ. 360/-
தங்கபஸ்பம் கலந்தது ரூ. 1360/-

மூல வியாதியா
ரிஷி லேகியம் பாவியுங்கள்
உள்மூலம், வெளிமூலம்
இவற்றை சுகப்படுத்தும் ரூ. 195/-

ஞானசுந்தர வைத்தியசாலை
187, செட்டியார் தெரு, கொழும்பு - 11.
T.P: 421398

# விவேக் 'கடி' பதில்கள்

'நகைச் சுவை' சினிமாவில் இன்றியமையாதது. அதன் வலது கை என்று கூடச் சொல்லலாம். ஒருவரின் தோற்றத்தைக் கிண்டல் பண்ணுவதன் மூலம் மற்றவர்களைச் சிரிக்க வைக்கும் அளவுக்கு நகைச்சுவை தரமிறங்கிப் போய்க் கொண்டிருந்த நேரத்தில் நகைச் சுவை மூலமும் நல்ல கருத்துக்களைச் சொல்ல முடியும் என்ற கோட்பாடுடன் கள மிறங்கியிருப்பவர் நடிகர் விவேக்.

இப்போது விவேக்கிற்காகவே நகைச் சுவைக் காட்சிகள் சேர்க்கப்படுகின்றன.

அதுமட்டுமல்ல 'பஞ்சு' படத்தின் மூலம் கதாநாயகனாகவும் உயர்வு பெற்றிருக்கிறார் விவேக். விவேக்கின் 'கடி' பதில்கள் இதோ உங்களுக்காக,



**கே: வணக்கம் ஸார் உங்கள் காட்டில் மழை போலிருக்கிறதே?**

ப: என்ன ஸார் மழை, புயல்ன்னு கிட்டு. ஏதோ நாலு படங்கள் நடிச்சிட்டிருக்கிறேன். ஜனங்களும் சிரிச்சுகிட்டிருக்காங்க.

**கே: புத்தியுள்ள நகைச்சுவை நடிகர் என்று பாராட்டப்படுகிறீர்களே?**

ப: தாங்ஸ்ப்பா

**கே: அதே நேரம் அழகான காமெடியனும் நீங்கள் தானாமே?**

ப: அடடா எனக்கு ஜலதோஷமே பிடிச்சிரும் போலிருக்கே.

**கே: நீங்கள் பள்ளிப் பருவத்தில் சைட் அடித்த நடிகை யார்?**

ப: ஸ்ரீ வித்யா

**கே: தங்களின் பலம், பலவீனம் எது?**

ப : பலம் — ரசிகர்கள்

பலவீனம் — முன்கோபம்

**கே: தேவயானி திருமணம் பற்றி...?**

ப:எல்லோருக்கும் அல்வா கொடுத்திட்டாங்க. அந்தத் தங்கை எங்கிருந்தாலும் நல்லா இருக்கட்டும்.

**கே:'பஞ்சு' படத்தில் கதாநாயகனாக நடிக்கிறீர்கள் இனி கதாநாயகனாக மட்டுமே நடிப்பீர்களா?**

ப: நான் கதைக்குத்தான் நாயகனே தவிர கதாநாயகன் அல்ல , காமெடிதான் நம்ம ஏரியா,

**கே:'பஞ்சு' வெற்றியடைந்தாலும் காமெடி நடிகனாகவே இருப்பீர்களா?**

ப:ஆமாம். பஞ்சு ஒரு பரீட்சார்த்த முயற்சி. வெற்றி அடைந்தாலும் தொடர்ந்து காமெடியில் தான் கவனம் செலுத்துவேன்.

**கே:ராதிகா சௌத்ரியுடன் சுற்றுகிறீர்களாமே?**

ப:நீங்கள் சொல்வதில் பாதி உண்மை இருக்கிறது. ஆமாம் சௌத்ரியை நான் அடிக்கடி சந்திப்பது உண்டு. அது ராதிகா சௌத்ரி அல்ல, தயாரிப்பாளர் சௌத்ரி.

**கே:உங்கள் வாழ்க்கையில் கிடைத்த பெரிய மகிழ்ச்சி எது?**

ப:தமிழக முதல்வர் கையால் சிறந்த நகைச்சுவை நடிகர் விருது வாங்கியது.

**கே: உங்களது நகைச்சுவையை யார் பாணி என்பது?**

ப : 'விவேக்' பாணிதான்.

**கே: உங்களைப் பற்றி அதிக கிசு கிசு வருவதில்லையே?**

ப: மன்னித்துக் கொள்ளுங்கள். இனி அதிகளவில் வருவது மாதிரிப் பார்த்துக் கொள்கிறேன்.

**கே: ஜோதிகாவுடன் நடிக்கக் கிடைத்தால் என்ன செய்வீர்கள்?**

ப : விட்டிடுவேனா!

**கே: உங்கள் படங்களில் மதங்களிலுள்ள சில கோட்பாடுகளைச் சாடுவதைப் போன்று கருத்துக்களைச் சொல்லியிருக்கிறீர்களே! நீங்கள் நாத்திகரா?**

ப: இல்லை; ஆன்மீகத்தில் புரையோடிக் கிடக்கும் சில சடங்குகளை அறிவு பூர்வமாக விசாரிக்கும் ஆன்மீக வாதி.

**கே: 'அஞ்சு'வுக்கும் 'பஞ்சு'வுக்கும் இடையே ஒரு இதுவாமே?**

ப: தயவு செய்து 'அஞ்சு'வையும் 'பஞ்சு'வையும் இணைக்காதீர்கள்.

**கே: டி.வி.யில் வரும் விளம்பரங்களில் கரெக்டாக பந்தை காட்ச் பிடிக்கும் கிரிக்கெட் வீரர்கள் போட்டியில் கோட்டை விடுவதேன்?**

ப: அவர்கள் மைதானத்தைப் பார்த்து விளையாடாமல் விளையாட்டை ரசிக்க வந்த நடிகைகளின் பார்வைப் பிடிக்குள் அகப்பட்டு விடுவதால்.

**கே : உங்கள் அழகின் ரகசியம் என்ன?**

ப: நிச்சயமாக சோப்பும் சீப்புமல்ல, எப்போதும் புன்னகை செய்வது சிந்தித்து செயல்படுவது இதுவே என் அழகின் ரகசியம்.

**கே : அழகான பெண்களைப் பார்த்தால் 'சூப்பர் பிகர்' என்று ஆண்கள் அவள் பின்னால் செல்கிறார்கள். ஆனால் பெண்கள் அப்படிச் செல்வதில்லையே?**

ப:செல்வதில்லை. ஆனால் அவனை ஓரக்கண்ணால் 'லுக்' விட்டு தன் பின்னால் தேவதாஸாக அலைய விட்டு விடுகிறார்களே.

**கே : சமீபத்திய இன்ப அதிர்ச்சி?**

ப : இன்டர்நெட் வாக்கெடுப்பிலும் 78% ஆதரவு எனக்குக் கிடைத்து நான் முதலாவது இடத்தில் இருப்பதாக அறிந்த போது ஏற்பட்டது.

**கே : பெண்கள் கைக்குடை இல்லாமல் இருப்பதில்லையே ஏன்?**

ப:அவர்களால் வாழ்வை இழந்த ஆண்களின் கண்ணீரைத் துடைப்பதற்காகவோ தெரியவில்லை.

**கே:'பாளையத்து அம்மன்' படத்தில் இடம்பெற்ற நீண்ட வசனத்தை எப்படிப் பேசினீர்கள்?**

ப : வாயை வைத்துத்தான்.

**கே : ஒரு புதிய ஆத்திசூடி ஒன்று...?**

ப: அம்மாவை வணங்கு
ஆகாரம் இகழேல்,
இன்டர்நெட் பயில்
ஈமெயில் கற்றுணர்
உறக்கமதிகம் வேண்டாம்
ஊண் அதிகம் உபத்திரவம்
எதிரிகள் வைத்துக் கொள்
ஏணியாகவே இருக்காதே
'ஐ' போல வளையாதே
ஒன் வேயில் செல்லாதே
ஓட்டுப் போட மறுக்காதே
ஔடதம் உடற்பயிற்சி
ஃபூ பஞ்சர் நரம்புப் பயிற்சி

**கே: இளைஞர்களுக்கு உங்களின் அறிவுரை?**

ப : சிரி, சிந்தி, செயல்படு!



ராதிகா சௌதரி — விவேக்
படம்: 'பஞ்சு'

— ஷாம்

# ரசிகர்களின் அன்பு வலையில் லைலா



'பார்த்தேன் ரசித்தேன்' இதற்குப் பிறகு இளவட்டங்களின் இதயத் துடிப்பை எகிற வைத்துக் கொண்டிருப்பவர் லைலா. இவர் இப்போது ரசிகர்களின் அன்பு வலையில் சிக்கிக் கொண்டிருக்கிறாராம். ரசிகர்கள் கடிதம் எழுதுவதோடு மட்டும் நின்று விட வில்லையாம். லைலாவின் ஈ—மெயில் முகவரியுடனும் தொடர்பு கொள்கிறார்களாம். ரசிகர் ஒருவர் ''நான் உங்களைக் காதலிக்கிறேன்'' என்றும் இன்னொருவர் ''லைலா நீங்கள் இல்லாவிட்டால் என்னால் உயிர் வாழ முடியாது'' என்றும் வேறொருவர் தனது இரத்தத்தால் ''லைலாவுக்கு என் அன்பு முத்தங்கள்'' என்றும் எழுதி அனுப்பியிருக்கிறார்களாம் பணத்தை வாங்கிக் கொண்டு நடித்து விட்டுப் போகும் எங்களுக்காக உயிரை விடவும் தயாராக இருக்கும் ரசிகர்களை நினைக்க ஆச்சரியமாக இருக்கிறது என்கிறார் லைலா.

# விசித்திர நடிகையின் மறுபக்கம்



'தலைவாசல்' படத்தின் மூலம் தமிழ்த் திரையுலகில் தலையெடுத்தவர் விசித்திர நடிகை.

இவர் நடித்த மடிப்பு அம்சா பாத்திரம் ரசிகர்களின் நெஞ்சில் ஒட்டிக் கொள்ளவே அம்மணி மடிப்பு அம்சாவானார்.

கதாநாயகிக் கனவில் உள்ளே நுழைந்தவருக்குக் கிடைத்ததென்னமோ துண்டு துக்கடா வேடங்கள் தான். விழாக்களுக்கு சேலையால் இழுத்துப் போர்த்திக் கொண்டு வருபவரைத் திரையில் 1/2 மீட்டர் துணியோடு ஆட விட்டார்கள். என்ன செய்வது வயிற்றுப் பிழைப்பைப் பார்க்க வேண்டுமே! அம்மணி துணிந்தார். சாகத் துணிந்தவருக்கு சமுத்திரம் காலளவு அல்லவா? அதைப்போலவே அம்மணிக்கும் அப்படியே! அரை மனதுடன் அரைகுறை ஆடையில் ஆடச் சம்மதித்தவருக்கு திரையுலகின் நெளிவு சுளிவுகள் புரிய ஆரம்பித்த போது அட இவ்வளவுதானா? என்று வியந்தவர் காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ள ஆரம்பித்தார்.

கவர்ச்சி நடிகைகளுக்கும் போட்டி ஏற்பட்டதனால் வெளிநாடுகளில் கலைச் சேவை, வி.ஐ.பிகளுக்குக் கம்பனி என்று கொடுக்கத் தொடங்கினார்.

அந்நேரத்தில் அகப்பட்டவர் தான் பிரபல பொலிஸ் அதிகாரியின் மகன். அம்மணி இல்லையேல் வாழ்வே இல்லை என்று காதல் மொழி பேச ஆரம்பித்தார்.

வேறு வழியில்லாது பொலிஸ் அதிகாரியின் மனைவியும் சம்மதம் கொடுக்க 'விசித்திர' நடிகையும் மணஞ் செய்து கொள்ளப் போகிறார் என்று பத்திரிகைகள் பரபரப்பாகச் செய்திகளை வெளியிட்டன. ஆனால் என்னானதோ பிறகு அதைப்பற்றிய பேச்சே இல்லை.

அம்மணியும் தான் உண்டு தன் கலைச் சேவை உண்டு என்று இருந்து வந்தார். இந்தச் சந்தர்ப்பங்களில் காண்பவரையெல்லாம் காதலித்து தன்வாழ்க்கையில் காதலித்தோரின் எண்ணிக்கையை அதிகரித்துக் கொண்டார்.

இப்போது அம்மணியின் காதல் பார்வை சின்னத்திரையில் கேள்வி கேட்ட நாயகன் 'ஸ்ரீ'யின் மீதாம். காதல் ஆழமாகித் திருமணம் வரை சென்றுள்ளது என்று பேசிக் கொள்கின்றனர்.

அண்மையில் நடிகையைப் பற்றிய ஒரு செய்தி திரையுலகை உலுக்கி வருகின்றது. இவரைக் காண்பவர்கள் தம் கன்னங்களைத் தடவிப்பார்த்துக் கொள்கின்றனர்.

அதிகமாக வாலாட்டிய தெலுங்கு ஸ்டண்ட் மாஸ்டர் ஒருவரின் கன்னத்தில் அறைந்து துணிச்சலான நடிகை என்று பெயரெடுத்திருக்கிறார்.

அம்மணி நடிகர் சங்கத்தில் வேறு புகார் செய்தாராம். ஆனாலும் தீர்ப்பு இழுபட்டுக் கொண்டே போகின்றது. கவர்ச்சி நடிகை என்றால் அவ்வளவு இளப்பமா? இதே கம்ப்ளைன்ட்டை (புகார்) கதாநாயகி ஒருவர் கொடுத்திருந்தால் அடுத்த நிமிடமே தீர்ப்புச் சொல்லியிருப்பாங்க என்று ஆவேசமாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார் அம்சா.



# விக்ரம் சிபாரிசு மீனா நாயகி

'பாளையத்து அம்மன்' படத்தில் அம்மனாக நடித்ததன் மூலம் பரபரப்பானார் மீனா. அடுத்து வந்தது 'ரிஷி' பிறகு என்னானதோ அல்பத்துடன் ஒதுங்கி விட்டார்.

புதிய வரவுகள் மீனாவையும் ஓரங்கட்டி விட்டதோ என்று திரையுலகம் நினைக்க ஆரம்பித்திருக்கும் இந்த நேரத்தில் மீண்டும் புதிய படம் ஒன்றில் நாயகியாக நடிக்கப் போகின்றார் மீனா. நாயகன் — விக்ரம்.

இந்தப்படத்திற்கென மீனாவைச் சிபாரிசு செய்தவர் விக்ரம் தானாம்.

## இனி இவர்கள்....!

* 'செரீன் மூவி மேக்கர்ஸி'னரின் புதிய தயாரிப்பு 'வாமன்'. இதில் அஜித்குமார் கதாநாயகனாக நடிக்கிறார்.

* ஏ.ஆர். ரஹ்மானுடன் 'ஏலேலோ' படத்தின் மூலம் இணையும் பார்த்திபனின் அடுத்த படம் 'கலிங்கா'

* பஞ்சு அருணாசலத்துக்காக சிங்கிதம் சீனிவாசராவின் இயக்கத்தில் ஒரு படத்தை நடித்துக் கொடுக்கத் திட்டமிட்டுள்ளாராம் கமலஹாசன்.



# இன்ப அதிர்ச்சியில் சுவலட்சுமி

சமீபத்தில் ஒரு படத்தின் படப் பிடிப்புக்காக ஜேர்மனி சென்றிருந்தார் நடிகை சுவலட்சுமி. ஜேர்மனியில் நமக்குப் பிடித்தமான நம்நாட்டுச் சாப்பாடு கிடைக்காது. நமக்கோ அசைவச் சாப்பாடு பிடிக்காது என்ன செய்வது? வயிற்றைக் காய போட்டுக் கொண்டு நடித்துவிட்டு நாடு திரும்ப வேண்டியது தான் என்று நினைத்திருந்தாராம். ஆனால் அங்கு வாழும் இலங்கைத் தமிழர்கள் ஒரு நாள் கூட சுவலட்சுமியை ஹோட்டலில் சாப்பிட விடவில்லையாம். நாளுக்கொரு வீடாக விருந்து கொடுத்து அசத்தி விட்டார்களாம். இலங்கைத் தமிழர்கள் கொடுத்த இன்ப அதிர்ச்சியோடு அவர்களை வாயாரப் புகழ்ந்து கொண்டிருக்கிறார் நடிகை.



# ரம்யா வேணாம்மா! அத்தை மகனே போதும்மா!!

சுந்தர்.சி — கார்த்திக் கூட்டணியில் நின்று போயிருந்த 'அழகான நாட்கள்' படம் மீண்டும் ஆரம்பிக்கப்படப் போவதையும் புதிய நாயகியைத் தேடுவதையும் கேள்விப் பட்டார் ரம்யா கிருஷ்ணன்.

சுந்தர். சி யிடம் சென்று தான் நாயகியாக நடித்துத் தருகிறேன் என்றாராம். ஏற்கனவே ரம்யா கிருஷ்ணன் — கார்த்திக் ஜோடியை வைத்து சுந்தர்.சி உருவாக்கிய 'அத்தை மகன்' படம் பாதியில் நிற்கிறது.

அதனால் மறுபடியும் ரம்யாவை ஒப்பந்தம் செய்யத் தயங்கிய சுந்தர்.சி ''அம்மா வேணாம்மா! அத்தை மகனே போதும்மா!!'' என்று ரம்யாவுக்கு டாட்டா காட்டிவிட்டு ரம்பாவை ஒப்பந்தம் செய்து படப்பிடிப்பை நடத்தி வருகிறார்.



# தேவயானி குடித்தனம் நடிகைகள் குதூகலம்

திடீரென்று இயக்குனர் இராஜகுமாரனை ரகசிய திருமணம் செய்து கொண்டு வீட்டை விட்டுப் போய் சென்னை வளசரவாக்கம் பகுதியில் ஒரு வாடகை வீட்டில் கணவருடன் வசித்து வருகிறார் தேவயானி. இதனால் அவருக்குச் செல்ல வேண்டிய புதுப்பட வாய்ப்புகள் சிம்ரன், ஸ்நேகா, அபிராமி ஆகியவர்களுக்குப் பிரிந்து சென்றிருக்கிறது.

தேவயானியின் குடித்தனத்தால் இந்த நடிகைகள் குதூகலமடைந்திருக்கின்றனர்.

# இளமை புதுமை நாயகி இப்போது பதுமை

சன் டி.வியில் இளமை, புதுமை நிகழ்ச்சியின் தொகுப்பாளினி சொர்ணமால்யா. இளைஞர் யுவதிகளைக் கவரும் இந்த வித்தியாசமான நிகழ்ச்சியைத் திறம்பட நடத்தி புகழ்பெற்றவர். இப்போது ரமேஷ் அரவிந்துக்கு ஜோடியாக 'நான் பாட நினைப்பதெல்லாம்' படத்தில் நடித்து வருகிறார். சுட்டித்தனம் மிக்கவர் இப்படத்தில் தன்சுட்டித் தனங்களை யெல்லாம் மூட்டைகட்டி வைத்து விட்டு பதுமை போன்று நடித்து வருகிறாராம்.



சொர்ணமால்யா

# கெஞ்சினார் அர்ஜுன் மிஞ்சினார் ஜோதிகா

'வேதம்' படத்திற்காக ...திகாவை அணுகினார் ...ஜுன். ஆனால் ஜோதிகா ...து சம்பளத்தில் விட்டுக் கொடுக்க மறுத்துவிட்டார்.

''35 லகரம் தந்தால் கால்ஷீட். இல்லாவிட்டால் நோ டோக்'' என்று சொல்லி விட்டார்.

'ரிதம்' படத்தில் நடித்த ப்ரண்ட்ஷிப்பையாவது நினைத்துப்பார் என்று கெஞ்சினாராம் அர்ஜுன். ஜோதிகா தரப்பில் கப்சிப்பாகவே, இனியும் அவரிடம் கேட்பதில் பயனில்லை என்று நினைத்து வேகமாகத் திரும்பி வந்த அர்ஜுன் திவ்யா உன்னியை ஒப்பந்தம் செய்து படப்பிடிப்பையும் நடத்தி வருகிறார்.



''என்னை யார் பார்த்தாலும் ...யாணம் எப்பொழுது'' என்றே ...கட்கிறார்கள். கல்யாணம்னா ...லேசா? பிரச்சினைகளுடன் ...ருமணம் செய்து கொண்டால் ...ந்தோஷமாக வாழ முடியுமா?

அதனால் தான் பிரச்சினைகள் முழுவதும் தீர்ந்த பின்னர் திருமணம் செய்து கொள்ள எண்ணியுள்ளோம்.

முதற்கட்டமாக இப்போது ...ந்த வீடு வாங்கியிருக்கிறேன். ...ரச்சினைகள் முழுவதும் தீர்ந்த ...னர் உடனே 'டும் டும்' கொட்ட ...டியது தான் என்கிறார் ரோசா (ரோஜா).

# ...யாணம்னா லேசா ...ட்கிறார் ரோசா



# திரை மறைவில்

முத்தக்காட்சியில் நடிப்பதில் தவறில்லை ஆனால் என்னிடம் அனுமதி பெற வேண்டும் என்று கூறியிருக்கிறார் ஜோதி மயமான நடிகை.

'ரன்' நடிகையின் மீள் வருகையினால் சம்பளக் குறைப்பு, கவர்ச்சிச் சலுகைகள் வழங்கும் ஆலோசனைகளை நெருங்கியவர்களிடம் கேட்டு வருகிறார்.

**

முதல் முதலில் 'காதல் கவிதை' பாடியவர் மாடலிங் நடிகை. அடுத்து வந்த 'நெஞ்சினிலே' ரசிகர்களின் நெஞ்சில் நிற்கவில்லை. 'சுவாசக் காற்றே'யும் சுவாசிக்க மறுத்து விட்டது. மும்பைக்குச் சென்று மாடலிங் செய்து கொண்டு அப்பாடா என்றிருந்தவரை பிடிவாதமாக நின்று தன் 'நரசிம்ம' படத்தில் நடிக்க வைத்தார் வெற்றிகாந்த்.

இப்போது என்னடா வென்றால் நடிகை பண விஷயத்தில் கறாராக இருக்கிறாராம். டெல்லியில் அவுட்டோர் ஷூட்டிங்கின் போது, யூனிட் கதாநாயகிக்காகக் காத்திருக்க, முழுச் சம்பளத்தையும் கையில் கொடுத்தால் தான் ஷூட்டிங் வருவேன் என்று முரண்டு பிடித்தாராம். வேறு வழியில்லாது நடிகையின் பணத்தை செட்டில் செய்த பின்னரே நடிக்க வந்தாராம் நடிகை.

**

மறு மொழிப் படங்களின் கதையைத் தமிழில் படமெடுத்து வெற்றிப் படங்களாகத் தந்து கொண்டிருப்பவர் மூன்றெழுத்து நாயகன். அவருக்கு உலக அழகியான 'ஜீன்ஸ்' நாயகியுடன் ஜோடி சேர ஆசையாம். தனது ஆசையை புதிய படத்தில் தன்னை ஒப்பந்தம் செய்ய வந்த தயாரிப்பாளர்களிடம் கூறியிருக்கிறார்.

**

மும்பை அழகியுடன் 'தாஜ்மஹால்' கட்டித் தோல்வியுற்றவர் வாரிசு நடிகர். இவர் டப்பிங் ஆர்ட்டிஸ்ட் ஒருவரின் காதல் வலையில் சிக்கியிருந்தார். விஷயம் தந்தைக் குலத்துக்குத் தெரியவே அவர் டப்பிங் ஆர்ட்டிஸ்ட்டுக்கும் தன் மகனுக்குமிடையே காதலுமில்லை கத்தரிக்காயுமில்லை என்று கூறிப்பத்திரிகைகளுக்குப் பேட்டி கொடுத்திருக்கிறார்.

இதனால் டப்பிங் காதலி வாரிசிடம் தந்தைக் குலத்தைப்பற்றித் தாறுமாறாகக் கூறியிருக்கிறார். மனமுடைந்த வாரிசு காதலிக்கு டாட்டா காட்டி விட்டாராம்.


**

மலையாளத்தில் சக்கை போடு போட்ட ஒரு படம் 'மடிசார் மாமி' என்ற பெயரில் பதிவு செய்யப்பட்டு 'என் அத்தை'யாகி வெளிவருகின்றது. படத்தில் பல அசத்தலான காட்சிகளும் உண்டாம். பத்திரிகைகளில் வெளியாகிய 'என் அத்தை' ஸ்டில்களைக் கண்ட பைனான்சியர்கள் படத்தை வாங்குவதற்குப் போட்டி போடுகின்றார்களாம். இந்தப் படத்திற்கு இப்படிக் கிராக்கியா? என்று திரையுலக நலன் விரும்பிகள் அலுத்துக் கொள்கிறார்களாம்.



சதிஸ்குமார் — சௌமியா
படம்: என் அத்தை

# பூட்டிய அறைக்குள்



கலிபோர்னியா நகரத்தில் அமைந்துள்ள ரோமன் கத்தோலிக்க தேவாலயம் ஒன்றில் ரொட்னியின் இரண்டாவது திருமணம் மிகவும் எளிய முறையில் நடந்தது.

ரொட்னியின் இரண்டாவது மனைவி கதரின். அவனை விட ஆறு வயது கூடியவள்.

முதல் மனைவியை பாம்பு கடித்து அவள் இறந்து போனதன் பின்னர் மிகவும் கவலையுடன் வாழ்ந்து வந்த ரொட்னி இனிமேலாவது சந்தோஷமாக வாழட்டும் என்று அவனுடைய பெற்றோரும் இரண்டாவது கலியாணத்தை வாழ்த்தினார்கள்.

ரொட்னி ஓர் அப்பாவி. எவரையும் புண்படுத்தாமல் தானுண்டு தன் வேலையுண்டு என வாழ்ந்து வருபவன். தான் ஒரு பெரிய பணக்காரனாக வரவேண்டும் என்ற கனவைத் தவிர அவனுக்கு வேறு கவலை எதுவும் இல்லை. சதா அதே கனவுதான் அவனுக்கு.

முதல் மனைவி பாம்பு கடித்து இறந்து போன பின் பேயறைந்தாற் போல் இடிந்து போன அவன் மீண்டும் எழும்ப முடியாத சோகக் கடலில் ஆழ்ந்து விட்டவன் போல் கதிகலங்கிப் போய் பைத்தியக்காரனாய் திரிந்தான்.

கதரின் அவன் வாழ்வில் மீண்டும் வசந்தத்தைக் கொண்டு வருவாள் என்று எல்லோரும் எதிர்பார்த்தார்கள்.

ஆனால்...

முதலிரவு அன்று அவர்களுக்கிடையே கடுமையான சண்டை மூண்டு விட்டது. அறைக்குள் இருவருக்குமிடையில் இடம் பெற்றுக் கொண்டிருந்த காரசாரமான வாக்குவாதத்தை அறைக்கு வெளியிலிருந்தவர்கள் பயத்துடன் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

''ராஸ்கல்! என்னை ஏமாற்றி விட்டாய், ஏமாற்றி விட்டாய்.'' என கதரின் கதறினாள். எதையோ இழந்து விட்ட சோகம் அவள் குரலில் ஓங்காரமாக ஒலித்தது.

ரொட்னி மனம் இடிந்தவனாக அறையிலிருந்து வெளியில் வந்தான். அம்மா, அப்பா, தங்கை மற்றும் உறவினர்கள் அனைவரையும் கலங்கிய கண்களுடன், பார்த்து விட்டு முன் வராண்டாவிற்கு வந்து, சாய்வு நாற்காலியொன்றில் சாய்ந்து கொண்டான். வாகன போக்குவரத்து வீதியை வெறித்துப் பார்த்தவாறு உட்கார்ந்து கொண்டான்.

இரவு 9.30 மணி போல் கதரினும், ரொட்னியும் சண்டை போட்டுக் கொண்ட சம்பவம் நிகழ்ந்தது.

அதன் பின்னர்....

தொலைக்காட்சியில் இசை நிகழ்ச்சியொன்று ஆரம்பமாகிவிட்டதால் குடும்ப அங்கத்தவர்கள் அனைவரும் அதில் லயித்து விட்டார்கள்.

ஆனால் கதரின் ரொட்னி இருவரும் நிகழ்ச்சியைக் கண்டு களிப்பதற்காக முன் அறைக்கு வரவில்லை. கதரின் கதவை மூடி விசும்பிக் கொண்டிருந்த பின்னர் உறங்கி விட்டாள். ரொட்னி முன் வாசலிலே நாற்காலியில் சுருண்டு தூங்கி விட்டான்.

* * *

மில்டன், ரொட்னியின் மிக நெருக்கமான நண்பன். நியூயோர்க் நகரில் வசித்து வந்த அவன் நண்பனை பார்ப்பதற்காக தன்னுடைய காரை எடுத்துக் கொண்டு வந்திருந்தான்.

காரை விட்டு இறங்கிய அவன் முன் வராண்டாவை அடைந்ததுமே அதிர்ச்சியடைந்தான்.

''ஏய் ரொட்னி இதென்ன கோலம்?'' என கத்திய அவன் நாற்காலியில் சுருண்டு படுத்துக் கிடந்த நண்பனை 'படபட'வென தட்டி எழுப்பினான்.

திடுக்கிட்டு எழும்பிய ரொட்னி மலங்கமலங்க விழித்தான். அவன் கண்கள் நெருப்புத் துண்டுகளாக சிவந்து கிடந்தன. இரவு முழுவதும் தூக்கமில்லாமல் தவித்திருப்பான் போலும்.

இருவரும் உள்ளே போன போது இன்னொரு அதிர்ச்சி அவர்களுக்கு காத்திருந்தது. முன் அறையில் அனைவரும் அசந்து தூங்கிக் கொண்டிருந்தார்கள். தொலைக் காட்சிப் பெட்டி இயங்கிக் கொண்டிருந்தது.

ரொட்னி அமைதியானவன் என பெயர் பெற்றவன்.

ஆனால் எல்லோரும் கன்னா பின்னா'வென முன் அறையில், கதவுகளையும் மூடாமல் அசந்து தூங்குவதைக் கண்டதும் அவனுக்கு எரிச்சல் பொத்துக் கொண்டு வந்தது. ''டேம் ச்சீட்'' என பேய்த்தனமாக அலறினான்.

அனைவரும் திகிலடைந்து போய் வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தார்கள். அவர்களிடையே கதரின் காணப்படவில்லை.

கதரினுடைய அறை உட்புறமாகப் பூட்டிக் கிடந்தது. வேகமாகச் சென்ற ரொட்னி கதவைத் தட்டினான். கதரின்! கதரின்! எனக் கூப்பிட்டான்.

பதில் இல்லை. 'பட பட'வென வேகமாக மறுபடியும் தட்டினான். வெகு நேரம் தட்டியும் பதில் எதுவும் இல்லை. அனைவரும் பதற்றமடைந்தார்கள்.

பின்புறமாக ஓடிச் சென்று ஜன்னல் கண்ணாடியை உடைத்த போது கதரின் தூக்கில் சடலமாக தொங்கிக் கொண்டிருப்பது தெரிகிறது. ஜன்னலில் கம்பிகள் போடப்பட்டிருப்பதால் உள்ளே செல்வதற்கு முடியவில்லை.

ரொட்னியின் பேய்த்தனமான அலறலைக் கேட்டு, அனைவரும் வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தார்கள். ஆனால் அவர்களிடையே கதரின் மட்டும் காணப்படவில்லை. அவளின் அறை உட்புறமாகப் பூட்டிக் கிடந்தது. வெகு நேரம் கதவைத்தட்டியும் அறையிலிருந்து பதிலெதுவும் இல்லை. அனைவரும் பதற்றமடைந்தார்கள். பின்புறமாகச் சென்று ஜன்னல் கண்ணாடியை உடைத்த போது அங்கே....!

* * *

இன்ஸ்பெக்டர் ஸ்மித் கம்பீரமான மனிதர். வீட்டினுள் நுழைந்ததுமே மில்டனை அவர் பார்த்த பார்வை கடுமையாகவிருந்தது. 'என்ன தம்பி' சேட்டையா பண்ணுகிறாய் என்பது போல் அது அமைந்திருந்தது. இதென்னடா வம்பு என மில்டன் வெலவெலத்துப் போனான்.

பூட்டிய அறைக்குள் கதரின் தூக்குப் போட்டுக் கொண்டிருக்கிறாள். நீண்ட கயிறு ஒன்றினை சீலிங் பலகையில் மாட்டி மேசை மேல் ஏறி அதனை கழுத்தில் சுற்றிப் பின்னர் மேசையை எட்டி உதைத்து இருக்கிறாள். மேசை சரிந்து கிடக்கிறது. அந்தரத்தில் துடிதுடித்து உயிர் போயிருக்கிறது. துடி துடிப்பு அடங்கிய சடலம் அந்தரத்தில் தொங்குகின்றது.

அது பழங்காலத்து வீடு. அறைக்கதவுகள் பலமானவை, தரையில் இணைப்பாகும் தாழ்ப்பாள் கொண்டவை. உட்புறமாகவே தாழ்ப்பாள் போடப்பட்டுள்ளது. வெளியிலிருந்து வந்த எவரும் கதரினை கொலை செய்து தொங்கவிட்டுச் செல்ல முடியாது.

இன்ஸ்பெக்டர் ஸ்மித்தின் சிந்தனையில் இவ்வாறாக எண்ணங்கள் ஓடின.

ரொட்னியை தனியாக அழைத்துச் சென்று விசாரணை நடத்திய போது அவன் சொன்ன விசயங்கள் அவரை அதிர்ச்சியடையச் செய்தன.

''முதலிரவின் போது நான் ஆண்மை அற்றவன் என தெரிந்து கொண்டு அவள் என்னை விரட்டி விட்டாள். பிறகு தற்கொலை செய்து கொண்டாள்'' என அவன் துக்கமுடன் சொன்னான்.

இன்ஸ்பெக்டரின் விசாரணை ஆரம்பமானது.

''உங்கள் முதல் மனைவி எப்படி இறந்தாள்''

''பாம்பு கடித்து''

''எங்கே வைத்து''

''இதே அறையில் தான், ஜன்னலால் பாம்பு அறைக்குள் நுழைந்திருக்கிறது''

''எவ்வளவு காலம் முதலாவது மனைவியுடன் வாழ்ந்தீர்கள்''

''மூன்று மாதம்''

''மூன்று மாதமா? அந்த நாள்களில் உங்கள் ஆண்மை குறித்து அவள் கவலைப்படவில்லையோ?

''அவள் பொய்க்காரி. தன்னை பெரியதொரு தொகைக்கு இன்ஷுர் செய்திருப்பதாகப் புழுகினாள். அதற்காக இறைவன் அவளுக்குக் கொடுத்த தண்டனை அது.''

இன்ஸ்பெக்டர் நிமிர்ந்து உட்கார்ந்தார். அவருடைய சுங்கானிலிருந்து 'குபுக் குபுக்'கென புகை வெளிக்கிளம்பியது. ஏதேனும் ஆதாரங்கள் கிடைத்து விட்டால் அவர் இப்படித்தான் நடந்து கொள்வார்.

* * *

இரண்டு நாட்களின் பின்னர் ரொட்னி கைது செய்யப்பட்டான். தன் இரு மனைவியரையும் இன்சூரன்ஸ் பணத்திற்காக ரொட்னி கொலை செய்தான் என அவன் மீது குற்றஞ் சாட்டப்பட்டது. நீதிமன்றத்தில் அனைத்தையும் இன்ஸ்பெக்டர் விளக்கமாகச் சொன்னார்:—

தொலைக் காட்சியில் குடும்பத்தினர் இசை நிகழ்ச்சியை ரசித்துக் கொண்டிருந்த வேளையில் அவர்கள் அருந்திய தேநீரில் மயக்க மருந்தை ரொட்னி கலந்தான்.

கதரினின் கழுத்தை கயிறு ஒன்றினால் இறுக்கிக் கொன்று தொங்க விட்டான்.

கதவு தாழ்ப்பாளுக்கும், தரைக்குமிடையில் காணப்படும் குழிக்கு மேலாக சிறிய பத்திரிகைத் துண்டொன்றை வைத்து மெழுகு வர்த்தியை எரியவிட்டான். மெழுகு கரைந்து கொண்டே கீழிறங்க பத்திரிகைத்துண்டைக் கதவின் கீழ்ப்பாகத்தினூடே மெதுவாக வெளியில் இழுத்துவிட தாழ்ப்பாள் 'சளுக்'கென குழிக்குள் விழுந்து இறுகி விடுகிறது. இப்பொழுது பூட்டிய அறைக்குள் சடலம் தொங்குகின்றது.

கதரினுடன் சண்டை போட்ட விசயங்கள் அனைத்தும் ரொட்னி திட்டமிட்டுச் செய்தவைகள் ஆகும். தேநீரில் தூக்கமருந்து கலந்தது போன்ற விசயங்களையும், அறைக்குள் கொலை நடந்தது, முதல் மனைவியைப் பாம்பை ஏவிக் கொன்றது ஆகிய அனைத்தையும் இன்ஸ்பெக்டர் நிரூபித்துக் காட்டிய போது நீதிமன்றத்தில் கூடியிருந்தவர்கள் ஆச்சரியத்தில் ஆழ்ந்தனர்.



# தனியார் வீடுகளில் தங்குவது வவுனியாவில் தர்மசங்கடம்

## பாஸ் பெறுவதில் புதிய நடைமுறை அமுலுக்கு வந்ததை அடுத்து

புலிகளின் யுத்தநிறுத்தம் முடிவுக்கு வந்து மோதல்கள் மீண்டும் முளை விட்டிருக்கும் நேரத்தில்—

வவுனியாவில் பாதுகாப்பு நடைமுறைகள் மக்களை மீண்டும் இடுக்கிப் பிடியாக இறுக்க ஆரம்பித்து விட்டன.

வீதிக்கு வீதி புதிது புதிதாக காவலரண்களும், சோதனைச்சாவடிகளும் உருவாகிக் கொண்டிருக்க புதிய புதிய நடைமுறைகளும் அமுலுக்கு வந்தபடியே இருக்கின்றன.

முன்னர் நகரப்பகுதியில் அங்கொன்றும் இங்கொன்றுமாக இருந்த காவலரண்களும், சோதனைச் சாவடிகளும் இன்று திரும்பிய பக்கமெல்லாம் நிறைந்து காணப்படுகின்றன.

இதனால் பெரும் சிரமத்தை எதிர்நோக்க வேண்டியுள்ளதாக பயணிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

வவுனியாவில் ரயில் ஏறச் சென்றால் ஏகப்பட்ட இடங்களில் கியூவிலே நிற்கவேண்டும். பயணப்பொதியை சோதிக்க ஒரு கியூ, பாஸைப்பதிந்து பயண அனுமதிபெற ஒரு கியூ, பின்னர் ரிக்கெட் எடுக்க ஒரு கியூ. அந்தப்பயண அனுமதி, அடையாள அட்டை, வதிவிட அனுமதி என்பனவற்றை பரிசோதித்து ரயில் நிலைய மேடைக்குள் நுழைய ஒரு கியூ என்று ஏகப்பட்ட கியூக்கள்.

தற்போது இந்த உடல் பரிசோதனைக்கும் புதிதாக ஒரு கியூ முளைத்துள்ளதாக பயணிகள் ஆதங்கப்படுகிறார்கள்.

இது தவிர தற்போது மேலும் ஒரு புதிய கெடுபிடியை வவுனியாவில் அறிமுகப்படுத்தியுள்ளது படைத்தரப்பு.

அதாவது வவுனியாவுக்குள் வரும் ஒருவர் வவுனியாவில் நீண்ட நாள் தங்க வேண்டி ஏற்பட்டால் அதற்கான நீண்ட நாள் செல்லுபடியாகக்கூடிய பாஸ் பெறவேண்டும்.

ஒருவர் வவுனியாவுக்குள் வந்ததும் அவருக்கு நகரத்தின் வாசல்களாக உள்ள ஈரப்பெரியகுளம், ரயில் நிலையம், பூவரசங்குளம், பிரமணாளங் குளம் ஆகிய பகுதிகளில் வைத்து நகரினுள் நுழைவதற்கான பாஸ் வழங்கப்படும்.

தென்பகுதியிலிருந்து வருவோருக்கு முதலில் 7 நாட்கள் செல்லுபடியாகக்கூடிய பாஸும், பின்னர் ஒரு மாதம் செல்லுபடியாகக் கூடிய பாஸும் வழங்கப்படுவது வழக்கம்.

வன்னியில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து வருவோருக்கும் முன்னர் இவ்வாறாக முதலில் ஒரு வாரகால பாஸும் பின்னர் ஒரு மாதகால பாஸும் வழங்கப்பட்டுவந்தன.

ஆனால் தற்போது இந்த நடைமுறை இறுக்கப்பட்டு முதலில் 3 நாள் பாஸ் வழங்கப்படுகிறது. அந்தப் பாஸை எடுத்துக்கொண்டு கோழிக்கூண்டு முகாம் எனப்படும் இடத்தில் அதனை மேலும் ஒரு நாளுக்கு புதுப்பித்த பின்னர் பிறவுண் கொம்பனி கட்டடத்துக்குச் செல்ல வேண்டும்.

அங்குள்ள முகாமில் அதனை மேலும் மூன்று நாட்களுக்குப் புதுப்பிக்க வேண்டும். அதற்குப் பின் புதுப்பிக்கும் போது ஒரு மாதம் செல்லுபடியாகக் கூடிய பாஸ் வழங்கப்பட்டு வருகிறது.

ஒருவார காலத்தின் பின்னர் ஒரு மாதகால பாஸைப் பெறுவதற்கும் பல நடைமுறைகள் உள்ளன.

வவுனியாவில் நிரந்தர வதிவிடப் பாஸ் வைத்திருக்கும் ஒருவரின் பிணைக் கையொப்பத்தை பெற்றுக் கொண்டு அவரது தங்குமிடத்தை உறுதிப்படுத்திக் கொண்டு கிராம சேவகரின் உறுதிப்படுத்தலுடனான விண்ணப்பத்தை சமர்ப்பித்தே ஒரு மாதகால பாஸைப் பெற முடியும்.

ஆனால் இந்த நடைமுறையுமே முதலாம் திகதியுடன் நிறுத்தப்பட்டு புதிய நடைமுறை ஒன்று அமுலுக்கு வந்துள்ளது.

இதுவரை பார்த்துப் பாராமல் அறிந்தவர் தெரிந்தவர் என்று எல்லாருக்கும் பிணைக் கையெழுத்து வைத்த பலரும் இந்தப் புதிய நடைமுறையை அடுத்து பிணை என்ற பேச்சைக் கேட்டாலே ஓடி ஒளிய ஆரம்பித்து விடுகின்றனர்.

லொட்ஜுகளிலே முகாமையாளர்களாக இருந்து பந்தா பண்ணிய பலர் பிச்சை வேண்டாம் நாயைப் பிடி என்று ஓட்டமாக ஓடுகின்றனர்.

வன்னியிலே இருந்து மக்களை ஏற்றிக்கொண்டு வரும் பஸ்கள் பஸ் நிலையத்தை அடைந்ததும் பஸ்களில் இருந்து இறங்கும் பயணிகளை கையைப் பிடித்து இழுக்காத குறையா தங்களது லொட்ஜுகளுக்கு கடுகதி வேகத்தில் அழைத்துச் செல்லும் பலர் தற்போது பயணிகள் வலியச் சென்று கையைப் பிடித்து உங்கள் லொட்ஜுக்கு வரலாமா என்று கேட்டால் கையை உதறிவிட்டு ஓட்டமாக ஓடுகிறார்கள்.

இவ்வாறாக இந்தப் புதிய நடைமுறையானது வவுனியாவில் உள்ள லொட்ஜ்காரர்களையும் நிரந்தரப் பாஸ் வைத்திருக்கும் பலரையும் தர்மசங்கடத்தில் மாட்டிவிட்டுள்ளது.

புதிய நடைமுறையின்படி பிணைக்காக முன்னர் நடைமுறையிலிருந்த விண்ணப்ப நடைமுறை ரத்துச் செய்யப்பட்டு கிராம சேவகரின் உறுதிப்படுத்தலும் ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

இனிமேல் பாஸ் பெறவேண்டிய விண்ணப்பதாரி தன் கைப்பட பாஸைப் புதுப்பித்துத் தரும்படி கடிதம் ஒன்றை எழுதவேண்டும்.

அந்தக் கடிதத்தின் கீழ் அவர் தங்கியிருக்கும் இடத்தின் பொறுப்பானவர் கையெழுத்திடவேண்டும்.

அதாவது வீடென்றால் குடும்பத் தலைவரும் லொட்ஜ் என்றால் அதன் முகாமையாளரோ அல்லது உரிமையாளரோ கையெழுத்திடவேண்டும்.

குறிப்பிட்ட நபர் தங்கள் இடத்தில் தங்கியுள்ளதை உறுதிப்படுத்தி அவர் சம்பந்தமான முழுப் பொறுப்பையும் தாம் ஏற்றுக்கொள்வதாக உறுதிப்படுத்த வேண்டும்.

தமது வதிவிட அனுமதிப்பத்திரத்தினதும், தேசிய அடையாள அட்டையினதும் போட்டோப் பிரதியை கடிதத்துடன் இணைக்க வேண்டும்.

இந்த உத்தரவுதான் பலருக்கும் கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

வவுனியாவில் வந்து தங்கும் பலரும் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான வன்னியிலிருந்தே வருகிறார்கள்.

அதிலும் லொட்ஜ்களில் தங்கிவரும் பலரும் புதிய முகங்களாக — முன்பின் அறிமுகமில்லாதவர்களாகவே இருக்கின்றனர்.

இவர்களது பின்னணியோ, நடவடிக்கைகளோ வவுனியாவில் இருப்பவர்களுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை.

இந்த நிலையில் அவரது முழுப் பொறுப்பையும் நாங்கள் எப்படி ஏற்றுக் கையொப்பமிடுவது என்று பலரும் விசனம் தெரிவிக்கிறார்கள்.

''வீட்டு உரிமையாளர்களுக்கு இது பெரிய பிரச்சினையாக இருக்காது.'' ஆனால் லொட்ஜ் உரிமையாளர்களுக்கே இதனால் பிரச்சினை. ஒருநாளுக்கு 25 அல்லது 30 பேருக்கு உறுதிப்படுத்தல் கடிதம் வழங்குவது, தேசிய அடையாள அட்டை, நிரந்தரப் பாஸ் என்பவற்றின் போட்டோப் பிரதியைக் கொடுப்பது சுலபமான காரியம் அல்ல.

''இப்படிக் கண்டபடி போட்டோப் பிரதி எடுத்தால் தேசிய அடையாள அட்டையும், நிரந்தரப் பாஸும் மங்கி இரண்டொரு மாதங்களில் தெளிவில்லாததாக வந்துவிடும்'' என்கிறார் லொட்ஜ் உரிமையாளர்களில் ஒருவரான சந்திரன்.

''வவுனியாவில் தற்போது கைதுகள் அதிகரித்துள்ள நிலையில் இவ்வாறாக நாம் பொறுப்புக் கையெழுத்துகள் வைத்தால் லொட்ஜ்காரர்களும் உள்ளே செல்லவேண்டிய நிலை ஏற்படும்.

''இப்படிப் பார்த்தால் ஒவ்வொரு நாளும் பல லொட்ஜ்காரர்கள் பிடிபடுவது சர்வசாதாரணமாகிவிடும்.

''எனவே இதுபற்றி வவுனியா அரச அதிபர், பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோருக்கு முறையிட்டிருக்கிறோம்'' என்றார் வவுனியா வர்த்தகர் சங்கச் செயலாளரும் லொட்ஜ் உரிமையாளருமான செந்தில்நாதன்.

இறுதியாகக் கடந்த 4ஆம் திகதி லொட்ஜ் உரிமையாளர்கள் — வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரைச் சந்தித்து இதுபற்றி முறையிட்டுள்ளனர்.

இதனையடுத்து படை அதிகாரிகளுடன் கதைத்துவிட்டு ஆவன செய்வதாக பொலிஸ் அத்தியட்சகர் உறுயளித்திருக்கிறார்.

படையினரின் இந்தப் புதிய நடவடிக்கையை அடுத்து வவுனியாவில் உள்ள லொட்ஜ் உரிமையாளர்கள் வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரைச் சந்தித்து தமது பிரச்சினைகளைச் சொல்லியிருக்கின்றனர்.

தொடர்ந்து படை அதிகாரிகளைச் சந்தித்துப் பேசிவிட்டு தற்போது இந்த கெடுபிடிகளுக்கு ஒரு தளர்த்தல் செய்யச் சம்மதித்திருக்கிறார் பொலிஸ் அத்தியட்சகர்.

இதன்படி இதுவரை இருந்ததுபோல் லொட்ஜ் பொறுப்பாளர் பயணியின் தங்குமிடத்தை உறுதிப்படுத்தினால் போதும். ஆனால் அவ்வாறு உறுதிப்படுத்திக் கையெழுத்திடும் லொட்ஜ் பொறுப்பாளர் தனது கையொப்பத்தின் மாதிரியை பிறவுண் அன் கொம்பனி கட்டட பாஸ் அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டுமென முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஆயினும் தனியார் வீடுகளில் தங்கியிருப்போர் நிலைமைதான் தர்மசங்கடமாகி விட்டது.

அவர்கள் தற்போது வீட்டுக்கு வரும் விருந்தாளிகளை வெறுப்பாகப் பார்க்கும் நிலைக்கு இந்தத் திட்டம் வழி வகுத்துவிட்டது.

லொட்ஜ்காரர்களுக்குப் பிரச்சினை வந்தபோது அவர்கள் போய் படை அதிகாரிகளுடன் பேசித்தீர்த்துக் கொள்கிறார்கள். ஆனால் எமக்கு யார் இருக்கிறார்கள் என ஆதங்கப்படுகிறார்கள் மக்கள்.

— வன்னி மைந்தன்

## வாசகர் இதயம் பேசுகிறது

''வடக்கை அதிர வைத்த அகோரப் போர் பற்றி ''அட்டையில் படங்களுடன் விளக்கியிருந்தது பிரமாதம்.

—எம்.சி.அஹமது ,மருதமுனை

''வகுப்பறையில் சாக்கடை நீர் ''வந்தது பற்றி ''சுடர் ஒளி''யில் 'மிஸ்டர் க்றோ' தந்த விவரம் மனதை உலுக்கி விட்டது.

—ஆ.சிறிதரன், பண்டாரவளை

''பலஸ்தீனர்களும் வடக்கு—கிழக்கு தமிழர்களும் '' என்னும் தலைப்பில் ''சுடர் ஒளி'' யில் வெளியான தகவல் உள்ளத்தைக் கலங்கவைத்து விட்டது.

—கே.அக்கீத், செட்டிக்குளம்

லண்டன் மாநகரில் இசைக்கச்சேரி நடத்திய இசைக்குயில் நந்தா மாலினி இனவாதத்துக்கு எதிராகத் தெரிவித்திருந்த கருத்தை ''சுடர் ஒளி'' சிறப்பாகத் தந்திருந்தது.

—சோலைக்குயில், கல்முனை—07

ஏப்ரல் 22 ''சுடர் ஒளி'' சுவாரஸ்யமான முகப்புப் படத்துடன் கருத்தாழமுள்ள வரிகளைத்தாங்கி வந்து சுவையூட்டியது.

—அ.அரசரெத்தினம், சேனையூர்

சச்சினின் உலக சாதனை பற்றி தந்ததற்கு நன்றி.

—ஏ.முபீன், அனுராதபுரம்

குறைகளைச் சுட்டிக்காட்டி சம்பந்தப்பட்டவர்களுக்குத் தெரியப்படுத்தும் ''மிஸ்டர் க்றோ'' வின் சேவை சிறப்பானது.

—பி.பிரேம், வவுனியா

சார்ஜா கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் போது ''சுடர்ஒளி'' தனது வாசகர்கள் மத்தியில் ஒரு போட்டியை நடத்திப் பணப்பரிசுகளையும் தந்து அசத்திவிட்டதே.

— ஆ.பொன்னம்பலம், கந்தளாய்

வவுனியா குண்டு வெடிப்பினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு, உரிய முறையில் நஷ்டஈடு வழங்கப்படாத கொடுமையை விரிவாகத் தந்திருந்தீர்கள். நன்றி.

— த. கனகரத்தினம், தெஹிவளை

''ஜீனா எங்கே?'' என்னும் தலைப்பில் ''ஆந்தையாரின் க்ரைம் டயறி'' உள்ளத்தை அதிர வைத்து விட்டது.

— தி. வரதசுந்தரம், கம்பளை

மலையக மக்களின் குறைகளை ''மலையகக் கண்ணோட்டம்'' பகுதியில் நீங்கள் தருவது சிறப்பாக இருக்கிறது.

—கே. வேலாயுதம், மஸ்கெலியா

# சொந்தக் கிராமத்திலேயே 10 வருட காலம் அகதிவாழ்வு

## அலஸ்தோட்ட மக்களின் துயர் தீருவது எப்போது?

வடக்கு கிழக்கு மாகாணத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் இன்னும் அகதிகளாகி இடம்பெயர்ந்த வண்ணம் உள்ளனர்.

திருகோணமலைப் பகுதியைச் சேர்ந்த நூற்றுக் கணக்கான மக்கள் கடந்த 10 வருடங்களாக 3ஆம் கட்டை ''அலஸ்தோட்டம்'' என்னும் இடத்தில் அகதிகளுக்கான ஐ.நா தூதரகத்தினால் அமைத்துக் கொடுக்கப்பட்ட முகாமில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

இவர்களில் திரியாய், இறக்கக்கண்டி, நிலாவெளி, இலுப்பக்குளம், சாம்பல் தீவு, அலஸ்தோட்டம், பன்குளம், கன்னியா உப்புவெளி, குச்சவெளி புல் மோட்டை, கும்புறுப்பிட்டி, மூதூர், சம்பூர் என திருமலை மாவட்டத்தில் உள்ள 37 கிராமங்களைச் சேர்ந்த தமிழ் மக்களும் அடங்குவர். இந்த மக்கள் வெறும் தகரக் கொட்டகைக்குள் புழுங்கித் தவிக்கின்றனர்.

இவர்களில் அலஸ்தோட்ட மக்களின் நிலைமை பரிதாபகரமானது.

அலஸ்தோட்டத்தைச் சேர்ந்த மக்கள் தங்கள் வாழ்விடங்களை இழந்து அதே இடத்தில் உள்ள — அதாவது அலஸ்தோட்டத்தில் உள்ள — அகதி முகாமில் தங்கி இருக்கின்றனர்.

தமது சொந்தக் கிராமத்திலேயே அகதிகளாக வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கும் அப்பாவி மக்களை அவர்களது வாழ்விடங்களில் மீளக் குடியமர்த்த முடியாத நாடாளுமன்ற உறுப்பினர்களை என்னவென்று அழைப்பது?

குச்சவெளி, கும்புறுப்பிட்டி, உப்புவெளி போன்றஇடங்களில்இவர்களில்சிலர்மீளக் குடியேறியுள்ளனர்.ஏனையோரது இருப்பிடங்கள்பறிபோய்விட்டன.

இதனைத் தீர்த்து வைக்க இதுவரை எவரும் முன்வரவில்லை.

திரியாய், இறக்கக்கண்டி, இலுப்பக்குளம், பன்குளம், கன்னியா போன்ற இடங்களில் தமிழர் அல்லாதோர் மீண்டும் குடியேறியுள்ளனர்.

ஆனால் தமிழர்கள் அங்கு செல்லப் பயப்படுகின்றனர்.

மூன்றாவது தடவையாக இந்த இடங்களையும், சிறிது சிறிதாக சேர்த்து வைத்திருக்கும் பொருளாதாரத்தையும் அவர்கள் இழக்கத் தயாராக இல்லை.

''சூடுகண்ட பூனை அடுப்பங்கரையை நாடாது'' என்பதற்கு மற்றும் ஓர் உதாரணம் இது.

இந்த அகதிகளை மீளக் குடியமர்த்துவதற்கு அரசுக்கு பல்வேறு சிக்கல்கள் இருக்கின்றன.

மீள்குடியமர்வுக்கு இராணுவம் கூட ஆதரவு இல்லை.


சிவில் நிர்வாகம் நடைபெறும் திருகோணமலையில், அதுவும் இராணுவக் கட்டுப்பாடுள்ள பகுதியில் மக்கள் மீளக்குடியமர முடியாது இருப்பது வெட்கப்பட வேண்டிய விடயம் ஆகும். இதனை அந்த அகதிகளே கூறுகின்றனர்.

காணிகள் இல்லாப் பிரச்சினை, அவற்றைப் பறிகொடுத்த பிரச்சினை, வாடகை கொடுத்து இருக்கமுடியாத பிரச்சினை, பல தடவைகள் பாதிக்கப்பட்ட பீதி, மற்றும் இன்னோரன்ன காரணங்கள் மீள்குடியமர்வுக்குத் தடையாக இருக்கின்றன.

இவ்வாறான நிலையில் தான் தாம் தொடர்ந்து அகதி முகாமில் தங்கியிருக்க வேண்டிய சூழ்நிலை இருப்பதாக அவர்கள் கூறுகின்றனர்.

இம்முகாமில் உள்ளவர்களுக்கு உலக உணவுத் திட்டத்தின் கீழ் பங்கீட்டு உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்படுகின்றன.

அரிசி, பருப்பு, சீனி, உப்பு, தேங்காய் எண்ணெய் போன்ற பொருட்களோடு சிறுவர்களுக்கு திரிபோஷாவும் வழங்கப்படுகின்றது.



அலஸ்தோட்ட அகதிமுகாமில் பயன்படுத்தப்படும் கழிப்பறைகளையே இங்கு காண்கிறீர்கள். கதவில்லாத கழிப்பறையை பனை ஓலை கொண்டு மறைத்து உபயோகிக்கும் இவர்களின் பரிதாப நிலையைப் பாருங்கள்.

ஒரு மாதத்துக்கு ஒரு தடவை வழங்கப்படும் நிவாரணத்தில் ஒருவருக்கு 9 கிலோ அரிசி கொடுக்கப்பட்டாலும் உரிய வேளையில் அவை கிடைப்பதில்லை.

இத்தனை ஆண்டுகளில் இலங்கை அரசாங்கம் எவ்விதமான உதவியையும் இந்த அகதிகளுக்குச் செய்யவில்லை. இதனை நினைத்து வெட்கப்படுவதா? வேதனைப்படுவதா?

இந்த அகதிகள் கடந்த 3 அல்லது 4 வருடங்களாக மின்சாரம் இல்லாமல் குப்பி விளக்கில் காலத்தைக் கழித்து வருகிறார்கள்.

தெரு விளக்குகள் கூட அங்கில்லை. கடந்த வருடம் வீசிய சூறாவளியினால் பாதிப்புற்றோருக்கு எவ்வித உதவியும் இன்னும் கிடைக்கவில்லை.

குடி தண்ணீர் வசதியையும் கழிப்பறை வசதியையும் அமைத்துக் கொடுத்த அகதிகளுக்கான ஐ.நா தூதரகம் சூறாவளியினால் கூரைகளையும் கதவுகளையும் இழந்த கழிப்பறைகளை புனரமைத்துக் கொடுக்க முன்வரவில்லை. அத்தகைய கழிப்பறைகளுக்கு பனை ஓலையே கதவாகப் பயன்படுத்தப்படுகிறது.

இட நெருக்கடி காரணமாக சில நோய்கள் பரவுவதற்கும் வாய்ப்பிருக்கின்றது. நடமாடும் வைத்திய சேவை இல்லை.

கர்ப்பிணிப் பெண்களுக்கான தடுப்பூசி சேவை, மாதத்துக்கு ஒரு முறை நடை பெறுகின்றது.

காதல் பிரச்சினைகளால் சில குடும்பங்கள் நீதிமன்றம் வரை சென்ற சம்பவங்களும் இடம் பெற்றிருக்கின்றன. பெண் பிள்ளைகளைப் பெற்றவர்கள் அச்ச உணர்வுகளுடன் வாழ்கின்றனர்.

இத்தகைய சுமைகளோடு ''புலி'' என்ற முத்திரை குத்தி இளைஞர்கள் கைதாவதை நினைத்து இந்த அகதி மக்கள் கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

என். ரூபராஜா என்பவரை (வயது 22) கடந்த ஆண்டு ஜூன் 8ஆம் திகதி சிவிலில் வந்த திருமலை சி.ஐ.டி பொலிஸ் பிரிவினர் கைது செய்தனர்.

மார்ச் 5ஆம் திகதி அனுராதபுரத்திற்கும், 8ஆம் திகதி களுத்துறைக்கும் அவர் கொண்டு செல்லப்பட்டார்.

கடற்றொழில் செய்து குடும்பத்தை பராமரித்து வந்த மகன் கைதானது அநியாயம் என்று தாய் நாகம்மா புலம்புகின்றார்.

இரண்டு பிள்ளைகளுக்குத் தந்தையான தனது கணவன் ரி.கிருபைராஜா (வயது 24) முக மூடி நபர் முன் நிறுத்தப்பட்டுக் கைது செய்யப்பட்டது ஒரு சிலரின் சதி என்று புலம்புகிறார் மனைவி உமாதேவி.

கடந்த ஆண்டு ஜூன் 6ஆம் திகதி ரூபராஜாவின் நண்பன் என்ற காரணத்தால் எஸ். பிரேம லோயிட் என்பவரும் கைதானார். உழைத்துக் கொடுக்கும் மகனை இழந்து தாய் புலம்புகின்றார்.

எத்தனை முயற்சிகள் எடுத்தும் களுத்துறைச் சிறையில் இருக்கும் இவர்களை விடுவிக்க முடியவில்லை என்று சம்மந்தப்பட்டவர்கள் தெரிவிக்கிறார்கள்.

அகதி முகாமில் இருந்து புறப்பட்டுச் சென்ற 3 பிள்ளைகளின் தந்தை மு.பரஞ்சோதியை இன்னும் காணவில்லை. இறந்து விட்டாரா? உயிருடன் இருக்கிறாரா? தெரியவில்லை. எந்த நிவாரணமும் இதுவரை இல்லை. சத்தியக் கடதாசிக்கும், தேசிய அடையாள அட்டைக்குமாக குடும்பத்தினர் அலைந்து திரிகிறார்கள்.

இந்த முகாமில் உள்ள பல சிறுவர்களுக்கு படிப்பைத் தொடர ஆர்வம் இருக்கிறது. குடும்பக் கஷ்டமும் சூழ்நிலையும் தடுக்கின்றன.

இந்த அகதி முகாமில் உள்ளோரில் பலர் 1990ஆம் ஆண்டுக்குப் பின் வந்தவர்கள். பெரும்பாலானோர் இந்தியாவில் இருந்து கப்பல் மூலம் திருகோண மலைக்கு கொண்டு வரப்பட்டு இந்த முகாமில் தங்க வைக்கப்பட்டவர்கள்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒரு குடும்பமும் இங்கு இருக்கின்றது.

விடிகின்ற காலைப் பொழுது ஒரு நல்ல விடியலைக் கொண்டு வராதா என்று தினமும் ஏங்கித் தவிக்கின்றனர் இந்த அகதிகள்.

— எஸ்.எஸ்.ஆர்

# நோர்வே பிரகடனத்தை அரசு சிதைத்து விட்டது

## விடுதலைப் புலிகள் பதில் அறிக்கை

கடந்த முதலாம் திகதி விடுதலைப் புலிகள் வன்னியில் அறிக்கை ஒன்றை விடுத்தார்கள். தம்மீது குற்றஞ்சாட்டி தகவல், ஊடகத்துறை அமைச்சு விடுத்திருந்த அறிக்கைக்குப் பதிலாகவே அவர்களின் அறிக்கை வெளியானது.

தகவல் அமைச்சின் அறிக்கையைப் போன்றே புலிகள் இயக்கத்தின் அறிக்கையும் நீண்டதாகும். நோர்வேயின் சமாதானத் தூதுவர் வன்னியில் தலைவர் பிரபாகரனைச் சந்தித்தது, புலிகள் போர் நிறுத்தத்தை அறிவித்தது, அக்கால கட்டத்தில் அரச படையினர் தாக்குதல்கள் நடத்தியமை, போர் நிறுத்தத்தை முடிவுக்கு கொண்டுவந்ததும் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கை ஆகியவற்றை எல்லாம் புலிகள் இந்த அறிக்கையில் விவரித்துள்ளனர்.

சமாதானத்துக்கான சூழ்நிலைகள் அரச தரப்பினரால் எவ்வாறு சீர்குலைக்கப்பட்டன என்பதை விளக்கியுள்ள புலிகளின் அறிக்கை, நோர்வே அரசு கடந்த ஆண்டு நவம்பர் மாதம் தங்களிடம் கையளித்த புரிந்துணர்வு பிரகடனத்துக்கு என்ன நேர்ந்தது என்பதையும் விவரித்துள்ளது.

''இந்த ஆவணம் எமக்கு கையளிக்கப்பட்ட போது தலைமைப் பீடம் அதனை கொள்கையளவில் ஏற்றுக் கொண்டது. ஆனால் அரசு அந்த ஆவணத்தை ஆரம்பத்தில் அலட்சியம் செய்தது. ஆவணத்தின் தலைப்பிலும் முன்னுரையிலும் உள்ளடக்கத்திலும் திருத்தம் செய்தது. எரிபொருள், சீமெந்து, இரும்புக் கம்பிகள் போன்றவற்றின் மீதான கட்டுப்பாடுகளை இறுக்கியது.

''இறுதியில் கடந்த 25ஆம் திகதி நோர்வே அரசு திருத்தப்பட்ட அந்த ஆவணத்தை எமது பார்வைக்கும் அங்கீகாரத்துக்கும் அனுப்பிவைத்துள்ளது. இருந்த போதும் இந்த ஆவணத்தில் மேலும் சில பிரச்சினைகளுக்கு விளக்கம் தேவைப்படுகிறது.

''நோர்வேயின் இப்பிரகடனத்தை ஒரு பயனற்ற ஆவணமாகச் செய்து விட்ட முழுப் பொறுப்பையும் அரசே ஏற்க வேண்டும். போரைத் தணித்து வடக்கு கிழக்கில் இயல்பு நிலையைத் தோற்றுவிக்கும் ஓர் ஆக்கபூர்வ நடவடிக்கையாக இப் பிரகடனத்தை அரசு ஏற்குமானால் நாமும் அதனை முழுமை பெறச் செய்து ஏற்க தயாராக இருக்கிறோம்.

— இவ்வாறு அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

# புலிகளை யாழ். மக்கள் வற்புறுத்த வேண்டும்

## செய்மதி மூலம் ஜனாதிபதி உரை

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க யாழ். மக்களுக்கு மீண்டும் ஒரு தடவை செய்மதி தொடர்பு மூலம் உரையாற்றியுள்ளார். மே தினத்தன்று அவர் இந்த உரையில் சமாதானத்தையும் ஜனநாயகத்தையும் விரைவில் வடக்கிற்கு கொண்டு வர உறுதியளித்தார்.

''புலிகள் யுத்தத்தின் மீது கொண்ட மோகத்தைக் கைவிட்டு சமாதான வழிக்குத் திரும்ப யாழ்ப்பாண மக்கள் வற்புறுத்த வேண்டும். நோர்வே ஆதரவுடன் சமாதான திட்டத்தை தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஆனால் புலிகள் விதித்துள்ள நிபந்தனைகள் காரணமாக சமாதான முயற்சிகளில் தாமதம் ஏற்பட்டுள்ளது'' எனவும் ஜனாதிபதி அந்த உரையில் குறிப்பிட்டுள்ளார்.

சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்ல பலதரப்பட்ட தடைகள் ஏற்பட்டிருந்தாலும் சமாதானம் கைக் கெட்டிய தூரத்திலேயே உள்ளது எனவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் அமைக்கப்பட்டிருந்த ஒரு பெரிய திரையில் ஜனாதிபதி உரையாற்று வதை ஏராளமானோர் கூடிநின்று பார்த்தனர். ஜனாதிபதியின் உரை சுமார் 15 நிமிடங்கள் நீடித்தது.



''என்ன இது! தலைமயிரை நல்ல கட்டையா வெட்டச் சொன்னா இப்பிடியே வெட்டுறது?''

''பரவாயில்லை அண்ணே! வேணுமெண்டால் ஒரு கிழமைக்கு இங்கேயே இருந்திட்டுப் போங்கோ''

# ராசி பலன்

13.05.2001 முதல் 19.05.2001 வரை
பொ.சந்திரன்.

**மேடம்: அச்சுவினி, பரணி, கார்த்திகை1.**
இராசிக்கு இருபுறமும் சுக்கிரனும் குருவும் இருப்பதால் பக்கபலம் உண்டு. கையில் காசு இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். வீடு, வாகனங்களால் எதிர்பார்த்த இலாபம் இல்லை. உறவினர் ஒத்துழைக்க மாட்டார்கள். எதிரிகளின் தொல்லை இருக்கும். ஆயினும் வெற்றி உங்களுக்கு. தேக ஆரோக்கியம் பாதிக்கலாம். பிரயாண வாய்ப்புகள் இருக்கும். தொழில் துறையில் போட்டி இருக்கும்.

**இடபம் : கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிடம் 1,2.**
இராசியில் சனி, புதன், குரு, அத்துடன் செவ்வாய்க்கிழமை சூரியனும் வருகை. முக்கியமான பல நிகழ்வுகள் இருக்கும். பணத்தட்டுப்பாடு இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். வீடு, வாகனம் இலாபம் தரும். உறவினர் விசுவாசமாக இருப்பர். உங்கள் செயலே உங்களுக்கு எதிரி. உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். தொழிலில் பிரச்சினை இருக்கும்.

**மிதுனம் : மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.**
சுக்கிரன், சந்திரனைத் தவிர மற்ற எல்லாக் கிரகங்களுடனும் இராசியும் இராசிநாதனும் தொடர்புபடுவது நல்லது. கல்வியில் ஆர்வம் குன்றலாம். பணத்தட்டுப்பாடு இருக்கும். வீடு, வாகனம் இலாபம் தரும். உறவினர் விசுவாசமாக இருப்பர். எதிரிகள் நட்புக்கொள்வர். தேக ஆரோக்கியம் நன்று. தொழில் விருத்தியுண்டு.

**கடகம் : புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்.**
இராசிக்கு சனி, செவ்வாயின் பார்வையுண்டு. ஒன்று நன்மை செய்யும் மற்றையது தீமை செய்யும். பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். வீடு, வாகனம் இலாபம் தரும் உறவினரின் ஆதரவு இருக்கும். எதிரிகள் நண்பராகலாம். தேக ஆரோக்கியம் நன்றாக இருக்கும். பிரயாண வாய்ப்பு இருக்கும். தொழில்துறை நன்றாக இருக்கும்.

**சிங்கம் : மகம், பூரம், உத்தரம்1.**
இராசிநாதன் தசம கேந்திரத்திற்கு வருவதும் இராசிக்கு சுக்கிர பார்வை கிடைப்பதும் நல்ல அம்சம். கல்வியில் ஆர்வம் இருக்கும். பணம் இருக்கும். வீடு, வாகனம் இலாபம் தரும். உறவினர் விசுவாசமாக இருப்பர். எதிரிகளால் ஆபத்தில்லை. உடல் ஆரோக்கியம் நன்று தொழில்துறையில் முன்னேற்றம் உண்டு.

**கன்னி : உத்தரம் 2,3,4, அத்தம், சித்திரை 1,2.**
இராசிநாதன் பாக்கியஸ்தானத்தில் இருப்பதும் இராசிக்கு குரு, சுக்கிரனின் பார்வை கிடைப்பதும் நன்மையே. கல்வியில் ஆர்வம் இருக்கும். பணம் இருக்கும். வீடு, வாகனம் இலாபம் தரும். உறவினர் அன்பாய் இருப்பர். எதிரிகளின் தொல்லை இருக்கும். தேக ஆரோக்கியம் சிறிது பாதிக்கலாம். தொழில்துறையில் முன்னேற்றம் உண்டு.

**துலாம்: சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3.**
இராசிநாதன் உச்சமாக இருப்பது விசேஷம். கல்வியில் ஆர்வம் இருக்கும். பணத்தட்டுப்பாடு இருக்கும். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தும். சொந்தக் காரரோடு மனக் கசப்பு வர இடம் உண்டு. எதிரிகளால் ஆபத்தில்லை. தேக ஆரோக்கியம் நல்லாயிருக்கும். தொழில் துறை முன்னேற்றம் உண்டு.

**விருச்சிகம்: விசாகம் 4, அனுஷம், கேட்டை.**
இராசிக்கு குரு, சனி, புதன் ஆகிய கிரகங்களின் பார்வை கிடைப்பது யோகம். கல்வியில் ஆர்வம் இருக்கும். பணப் புழக்கம் இருக்கும். வீடு வாகனங்களால் இலாபம் இருக்கும். உடல் ஆரோக்கியம் சிறு பாதிப்படையலாம். எதிரிகளால் ஆபத்தில்லை. தொழில் துறையில் முன்னேற்றம் உண்டு. புதிய தொழில் வாய்ப்புண்டு.

**தனு: மூலம், பூராடம், உத்தராடம் 1.**
இராசிநாதன் சத்துரு ஸ்தானத்தில் இருப்பது நல்லதில்லை. ஏழு கிரகங்களின் தொடர்பு இராசிக்கும் இராசிநாதனுக்கும் கிடைப்பது நல்லது. பணத்தட்டுப்பாடு இருக்கும். கல்வியில் ஆர்வம் குறையலாம். வீடு, வாகனம் இலாபம் தரும். உறவினர் விசுவாசமாக இருப்பர். எதிரிகளால் ஆபத்துண்டு. தேக ஆரோக்கியம் நன்று. தொழில் துறையில் பிரச்சினை இருக்கும்.

**மகரம்: உத்தராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2**
இராசிநாதன் புண்ணிய ஸ்தானத்தில் புதன், குரு, சூரியனோடு இருப்பது விசேஷம். கையில் பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். வீடு, வாகனங்களால் செலவு உண்டு. எதிரிகளால் தொல்லை இல்லை. உடல் நிலை நன்றாக இருக்கும். தொழில் முன்னேற்றம் உண்டு. புதிய தொழில் வாய்ப்புண்டு.

**கும்பம்: அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3.**
இராசிநாதன் சுகஸ்தானத்தில் இருப்பது விசேஷம். சந்திரன் இராசியில் சஞ்சரிப்பது நலம். கையில் பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். வீடு, வாகனம் இலாபம் தரும். உறவினர் விசுவாசமாக இருப்பர். எதிரிகளால் ஆபத்திருக்கும் அவதானம் வேண்டும். உடல் ஆரோக்கியம் நன்றாயிருக்கும். தொழில் முன்னேற்றம் உண்டு.

**மீனம்: பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி.**
இராசியில் சுக்கிரன் பலமாக இருப்பது விசேஷம். இராசி நாதன் சனியோடு சம்பந்தப் படுவது நல்லதல்ல. பணத் தட்டுப்பாடு இருக்கும். கல்வியில் ஆர்வம் குன்றலாம். வீடு, வாகனம் செலவை உண்டாக்கும். உறவினரால் உதவி இருக்காது. எதிரிகளால் ஆபத்தில்லை. தேக ஆரோக்கியம் நன்றாக இருக்கும். தொழில் துறையில் பிரச்சினை இருக்கும்.

# புத்தளத்தில் இப்படியும் ஒரு விளையாட்டு மைதானம்

கடந்த ஐந்து தசாப்தங்களுக்கு மேலாக கால் பந்தாட்டத்தில் பல சாதனைகளைப் படைத்து வருகிறது புத்தளம்.

புத்தளம் நகரில் எட்டுக்கு மேற்பட்ட கால்பந்தாட்டக் கழகங்கள் உள்ளன.

பயிற்சிகளை மேற்கொள்ள சிறந்த, தரமான மைதானம் ஒன்று இல்லையே என இந்தக் கழகங்கள் கவலை தெரிவிக்கின்றன.

இங்குள்ள விளையாட்டுக் கழகங்களின் ஆர்வத்தையும், ரசிகர்களின் ரசிப்புத் தன்மையையும் ஓரளவு தீர்த்துக் கொண்டிருக்கும் புத்தளம் பொது விளையாட்டு மைதானத்தின் நிலை பரிதாபகரமானது.

சிறிதளவு மழை பெய்து விட்டால் போதும் நிலைமை... மோசம்... மோசம்... படு மோசம்...!

சொற்ப மழை பெய்தாலே இந்த பொது விளையாட்டு மைதானம் குளமாகவோ அல்லது குட்டையாகவோ மாறி விடும். அதன் பின்பு விளையாட முடியாது.

இங்குள்ள ஒரே மைதானத்துக்கும் இந்தக் கதி என்றால் யாருக்குத் தான் கவலை ஏற்படாது.

கால்பந்தாட்டப் போட்டிகள் மாத்திரம் இங்கு நடைபெறுவதில்லை.

சுதந்திர தினக் கொண்டாட்டங்கள், இசைக் கச்சேரிகள், அரசியல் பொதுக் கூட்டங்கள் என்பனவும் இங்கு இடம் பெறுகின்றன.

இவ்வாறான நிகழ்ச்சிகள் இடம் பெறுவதற்கு முன்னர் சிறிதளவு மழை பெய்தாலும் நிகழ்ச்சிகள் ரத்துச் செய்யப்படுகின்றன.

இந்த வருடத்திற்கான சுதந்திர தினக் கொண்டாட்டங்களை இந்த மைதானத்தில் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

அன்றிரவு பெய்த மழை மைதானத்தைக் குளமாக்கியது. பிரதான அதிதிகள் வருகை தந்து தேசியக் கொடியை மாத்திரம் ஏற்றி விட்டு திரும்பிச் சென்றனர்.

அணிவகுப்பு மரியாதையை நடத்த முடியாது போனதால் மாணவர்களும் திரும்பிச் சென்றனர்.

ஏப்ரல் 7ஆம் திகதி புத்தளத்திலுள்ள பிரபல கால்பந்தாட்டக் கழகங்களில் ஒன்றான ''நிவ்ஸ்டார்'' கழகம் கண்காட்சி கால் பந்தாட்டப் போட்டி ஒன்றை ஏற்பாடு செய்திருந்தது.

இலங்கை பொலிஸ் அணியும், நிவ்ஸ்டார் கழகமும் அன்றைய தினம் மோத இருந்தன. அன்று கிடைக்கும் நிதி அனைத்தும் தேசிய பாதுகாப்பு நிதிக்கு வழங்கப்படவிருந்தது.

போட்டிக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டு பொலிஸ் உயரதிகாரிகள், பொலிஸ் அணி ஆகியனவும் புத்தளம் வந்தபின்பும் அன்று பகல் பெய்த மழையினால் அனைத்து ஏற்பாடுகளும் வீணாகின.

என்ன மழை பெய்தாலும் விளையாடியே தீருவோம் எனக் கூறிய பொலிஸ் அணியினர் மைதானத்தை சென்று பார்வையிட்ட போது அது நீர்த் தடாகமாக மாறியிருப்பதைக் கண்டு ஆச்சரியம் அடைந்தனர்.


போட்டியை ரத்து செய்து விட்டு அவர்கள் கொழும்பு திரும்பினர். பாதுகாப்பு நிதி சேர்க்கும் நடவடிக்கையும் அதோ கதி ஆகிற்று.

குறைந்த பட்சம் இந்த மைதானத்தை ஒரு அடி உயரத்திற்காவது மண்போட்டு உயர்த்த வேண்டும் என்று ரசிகர்கள் கோருகின்றனர்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களா?

ஒரேயொரு மைதானமான இந்தப் பொது விளையாட்டு மைதானத்தை சிறந்த ஒரு மைதானமாக மாற்றியமைத்து எமது நகரின் முன்னேற்றத்திற்கு உதவுவார்களா...?

ஏ.எஸ். புல்கி



# அச்சில் வரும் கணினிகள்

அதிவேகமாக வளர்ந்துவரும் தொழில்நுட்பத்தின் மகத்தான சாதனைகளில் ஒன்றுதான் அச்சிடப்பட்டுத்தயாராகும் கணினி. கலிபோர்னியாவைச் சேர்ந்த 'ரோல்ட்ரானிக்ஸ்' நிறுவனத்தினர் இந்த அச்சுக் கணினியைத் தயாரிக்க 50 கோடி டொலர்களைச் செலவு செய்திருக்கிறார்கள்.

ஒரு முழுமையான கணினியை மென்மையான பிளாஸ்டிக்தாளில் அச்சிட்டுக்காட்டியிருக்கிறார்கள். பிளாஸ்டிக்கினாலான மிகப்பெரிய தாள் உருளைகளை இதற்குப் பயன்படுத்துகிறார்கள். முதலில் தாளின்மேல் மின்சாரத்தைக் கடத்தாத ஒருவகைப் பூச்சை அச்சிட்டுக்கொள்கிறார்கள். பின்னர் தாளைத் திருப்பி ஒவ்வொரு பக்கமாக குறித்த அளவில் அச்சிடுகிறார்கள். கணினியின் பாகங்கள் குறித்த பக்கங்களில் அச்சிடப்படும் அமைப்புகளினுள் அடங்கியிருக்கும்.

மின்கலங்கள், வீடியோ, மொடெம், நுண்பகுப்புச் சாதனங்கள், நினைவகப் பக்கங்கள் எல்லாம் இந்தத் தாள்களினுள் அடக்கப்பட்டுவிடும். ரேடியோ, ரீவி, டெக் போன்ற சாதனங்களில் தற்போது பயன்படுத்தப்படும் அச்சிடும் சுற்றுக்களுக்கான (Printed Circuits) தொழில்நுட்பமே இங்கும் பயன்படுத்தப்படுகிறது. 'ஹார்ட் டிஸ்க்' போன்றவையெல்லாம் தேவைப்படாது. எல்லாமே அச்சிடப்பட்டவையாக இருக்கும்.

கீ—போர்ட்டையும் இவ்வாறு அச்சிட்டுப்பயன்படுத்துவதால் அழுத்தவேண்டிய அவசியம் இல்லாமல் தொட்டாலே உணர்ந்து கணினி செயலாக்க ஆரம்பிக்கும். கணினியின் திரையும் பிளாஸ்டிக் தாளினாலேயே ஆக்கப்பட்டிருக்கும். இறுதியாக ஒளி ஊடுருவக்கூடிய கடைசிப்பக்கம் அச்சிடப்படும். இப்பக்கத்திலேயே தொடுதிரை, ஒலிபெருக்கிகள் எல்லாம் இருக்கும். முடிவில் எல்லாத்தாள்களையும் வரிசைப்படி அடுக்கி அமைத்துக்கொண்டால் கணினி தயாராகிவிடும்.

இந்தமுறையில் அச்சிடப்படும் கணினிகள் கால் அங்குல அளவு தடிப்பு உடையனவாக இருக்கும். மின்னேற்றம் செய்து பயன்படுத்திக்கொள்ளலாம். எதிர்காலத்தில் இவ்வகைக் கணினிகளே பயன்பாட்டில் இருக்கும் என்று அடித்துச்சொல்கிறார்கள் ரோல்ட்ரானிக்ஸ் நிறுவனத்தினர். ஆரம்பத்தில் இதனை உருவாக்குவதற்கான செலவு 50 கோடி டொலர்களாக இருந்தாலும் வணிகரீதியில் தயாரிக்க ஆரம்பித்தால் ஒரு கணினியின் விலை ஏறத்தாழ 15 டொலர்களாக இருக்கும் என்கிறார்கள்.

—தீபன்







# மரபணு சிகிச்சை மூலம் பார்வை

பிறவியிலேயே பார்வை இழந்த நாய்களுக்கு ஜீன் மரபணு மாற்று சிகிச்சை மூலம் அமெரிக்க விஞ்ஞானிகள் பார்வை அளித்துள்ளனர்.

இந்த விஞ்ஞானப் பெறுபேறுகளின் படி பிறவியிலேயோ அல்லது பரம்பரையாகவோ பார்வை இழந்த மனிதர்களுக்கும் பார்வை கிடைக்கலாம் என்ற நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது.

பார்வையை இழப்பதற்குக் காரணமான மரபணுவை இனங்கண்டு நாய்களின் கண்ணில் விஞ்ஞானிகள் ஆரோக்கியமான மரபணுவை ஊசி மூலம் ஏற்றினார்கள்.

இதனை அடுத்து சில மாதங்களில் அந்த நாய்கள் தங்களது கண்ணால் பார்க்கக் கூடிய சக்தியைப் படிப்படியாகப் பெற ஆரம்பித்தன.

இந்த மருத்துவ ஆராய்ச்சியை மேலும் முன்னெடுத்துச் செல்வ தன் மூலம் மனித வர்க்கத்தில் உள்ள கண்பார்வை அற்றோருக் குப் பெரிய வரப்பிரசாதம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# திருமணகால உலா வழிகாட்டி சிறப்பிதழ்

# BRIDAL SEASON GUIDE

அன்றும் இன்றும் என்றும் 22 கரட் நகைகளுக்கு

**புனிதா நகை மாளிகை**

239, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

புதிய சிங்கப்பூர் டிசைன்களில்
உங்கள் கொழும்புத் தேவைகளுக்கு

**ஸ்ரீ இலட்சுமி ஜுவலர்ஸ்**

171/1, செட்டியார் தெரு,
கொழும்பு 11.
தொலைபேசி: 074 710905, 074 510241

*Dealers in 22kt Gold Jewellery*

தங்க நகை உலகில் மங்கா
புகழ் பெற்ற ஸ்தாபனம்
அன்றும் இன்றும் என்றும்
22 கரட் நகைகளுக்கு

**Sangeetha Jewels**

335C, Galle Road, Wellawatte,
Colombo - 06. Tel : 500682, 585321

**TEX CITY**

தலைநகரில் கல்யாண புடவை வகைகள்,
ஷல்வார் கமிஸ் அனைத்து ரக ஆடை வகைகள்
விற்பனையில் தனக்கென தனிப்பெயர் பெற்ற
பிரபல்யமான ஸ்தாபனம் !
நாகரீக புடவை உலகின்
முன்னோடிகள்
இன்றே விஜயம் செய்யுங்கள் !

இல.42A, **ரெக்ஸ் சிட்டி**
காலி வீதி,
வெள்ளவத்தை.
தொ.இல. 074-514332

**Devi Jewellers**

131

*தலைநகரில் தனக்கென
முத்திரை பதித்து
தங்க நகைகளில் மங்கா புகழ் பெற்ற*

**தேவி ஜுவலர்ஸ்**

**Buyers & Sellers of Bullion
(Gold, Silver, Platinum & Palladium)
Diamonds, Gems & Cubic Zicorium**

AUTHORISED MONEY CHANGER
CUSTOM MADE JEWELLERY

No. 131, Sea Street, Colombo - 11, Sri Lanka.
Tel: 432502
Fax: 327101
E-mail: devi 131@visual.lk

**நியூ அசோக் வீடியோ புறொடக்ஷன்**

உங்கள் நிகழ்வு எதுவானாலும் நவீன தொழில்நுட்ப சாதனங்களின் உதவியுடன் உங்கள் திருப்திக்கேற்ப நிறைவேற்றித் தருவதற்கு மிகத்தரமான நிழற்படங்கள், வீடியோ படப்பிடிப்புகளில் கைதேர்ந்த நிபுணத்துவ சேவை.

298, 1/2, காலி வீதி,
கொழும்பு – 06, இலங்கை.
தொலைபேசி : 586240, 598599

இந்து, பௌத்த, கிறிஸ்தவ, முஸ்லிம் திருமண வைபவங்கள், பிறந்தநாள் நிகழ்வுகள் மற்றும் சமூக, வர்த்தக ரீதியிலான வைபவங்கள், விளையாட்டுத்துறை நிகழ்வுகள் என்பனவற்றை அற்புதமாக வீடியோ படமாக்கித் தருபவர்கள்.

VHS ல் இருந்து CD க்கு மாற்றுதல், கலர் பிலிம் டெவலப்பிங்கும் மற்றும் பிரின்டிங் சேவை, ஆங்கில, தமிழ் CD வாடகைக்குப்பெற்றுக் கொள்ள நாடுங்கள்.

**A new ASHOK VIDEO PRODUCTION**

298, 1/2, Galle Road,
Colombo - 06, Sri Lanka.
Tel : 586240, 597400, 598599

**Satha Video**

PHOTO GRAPHERS & VIDEO GRAPHERS

*வீடியோ உலகில் தனக்கென
முத்திரை பதித்து புகழ் பெற்ற ஸ்தாபனம்*

**SATHA VIDEO**

Orchard Building,
7-2/8, Second Floor, Galle Road, Colombo - 06.
Phone : 584191, 591812 Fax: 94-1-91812 Mobile : 077-304027

**Maruthi Services**

* Reception Hall
* Hall Arrangements
* Meals (Indoor & Outdoor)
* For all Occations

பல ஆண்டு காலமாக
மக்களின் நன்மதிப்பைப் பெற்று
தொடர்ந்து சேவையாற்றி வரும்

**Maruthi Services**

Orchad Building (Opp. Savoy),
7-2/9, Galle Road, Colombo - 06.
Tel: 584191, 591812 Fax: 94-1-591812

**JAYALALITHANGHI**
JEWELLERS



22 கரட் தங்க நகைகளை
நவீன டிசைன்களில் செய்து
மக்களின் நன் மதிப்பைப்
பெற்று தொடர்ந்தும்
சேவையில் உள்ள
ஜெயலலிதாங்கி
ஸ்தாபனத்தார்
மணப்பெண் /
மனமகனுக்குத்
தேவையான அத்தனை
நகைகளையும் அவர்
அவர் விரும்பிய
டிசைன்களில்
மிகவும்
தத்ரூபமாக
செய்துக்
கொடுக்கப்படும்.

225, Galle Road,
Colombo-04
Tel : 595144

**திருமணம் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகிறது**

உங்கள் மகனின், மகளின் திருமண வைபவத்தை
எண்ணம் போல் நடத்திவைக்க, ஒன்றுகூடல்கள்
மற்றும் அனைத்து வைபவங்களுக்கும் கொழும்பில்
நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்.

**பிரைட்டன் திருமண மண்டபம்**



214/2. மெசன்சர் வீதி, கொழும்பு - 12.
தொ.பே. : 437789, 329664
தொலைநகல் : 074-610765

**Hotel BRIGHTEN REST**

Approved by the Sri Lankan Tourist Board

**Hotel Westeern (Pvt) Ltd**

*வெளிநாட்டவர், உள்நாட்டவர்
விரும்பி வந்து தங்கிச் செல்வதுடன்
பிறந்த தினக் கொண்டாட்டம்,
திருமண வைபவங்களுக்கும்
சகல வசதிகளும் செய்து கொடுக்கப்படும்*

* SEA SIDE HOTEL
Located at 1/4 Km away from Colombo's best shopping Complex Majestic City Centre.

* FACILITIES ARE
A/C Rooms, Telephone I.D.D., T.V., Mini Bar, Restaurant, Bar, Room service, Pool Tables, Airport Transport, Rent-A-Car and Transport.

* FOOD
Eastern Western, Indian & Sri Lankan Cuisine

No. 35, Frankfurt Place, Bambalapitiya,
Colombo - 04, Sri Lanka.
Tel: 941-507161 Fax: 94-74-518481
E-mail: info@hotelwesteern.com
Web: www.hotelwesteern.com
Reg. No : N(PV)5125749



நவீன மயமான முற்றிலும் குளிரூட்டப்பட்ட

**மியாமி திருமண மண்டபம் - வெள்ளவத்தை**

இஸ்லாமிய திருமண வைபவங்களுக்கு ஆண்கள், பெண்கள் என இரு பகுதிகளாகவும் நுழைவாயில் வசதிகள் அமைத்துக் கொடுக்கப்படும். இந்து திருமண வைபவங்களுக்கு சகல வசதிகளும் செய்து கொடுக்கப்படும். வாகனங்கள் நிறுத்த விசாலமான இடவசதி உண்டு.

**MIAMI RECEPTION HALL (PVT) LTD**

இல. 33, அலெக்சான்ரா வீதி, கொழும்பு - 06. தொலைபேசி : 504362 / 3, பெக்ஸ் : 94-1-440826
E-mail : mohdbros@cga.lk, albilal@sltne.lk



# வன்முறைகளுக்கு எதிராக குரல் கொடு பெண்ணே!

பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்படும் கொடுமை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே போகின்றது. ''வேலியே பயிரை மேய்வது'' போல மக்களைக் காக்க வேண்டியவர்களே அப்பாவிப் பெண்களைத் துன்புறுத்துவது இந்த நாட்டில் சாதாரணமாகி விட்டது.

சந்தேகம் என்ற பெயரில் பெண்கள் கைது செய்யப்படுவதும் விசாரணை என்ற போர்வையில் அவர்கள் பொலிஸ் நிலையங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டு பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்படுவதும் இன்று சாதாரணமாகி விட்டது.

பெண்ணை அடித்து, உதைத்து துன்புறுத்துவதை விட அவர்களை பாலியல் துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கினால் அவள் வெட்கத்தினாலும், பயத்தினாலும் தன் எதிர்கால வாழ்வை நினைத்து இதுபற்றி வெளியே சொல்ல மாட்டாள் என்று பல ஆண்களும் கருதுகிறார்கள். இதனால் பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதி அதிகரித்துக் கொண்டு போகிறது.

தமக்கு ஏற்படும் அவமானத்தைப் பொறுக்கவும் முடியாமல், வெளியில் சொல்லவும் முடியாமல் பல பெண்கள் தற்கொலை செய்து கொள்கிறார்கள். இப்படித் தற்கொலை செய்வதனால் பெண்களுக்கு இழைக்கப் படும் கொடுமைகள் வெளியே தெரியப் போவதில்லை. மாறாக இது போன்ற கொடுமைகள் தொடரவே போகின்றன.

ஒரு பெண்ணை ஓர் ஆண் பின் தொடர்ந்து வந்தால் போதும் அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து அந்தப் பெண்ணுக்கும், அவனுக்கும் ஏதோ தொடர்பு இருப்பதாகக் கதை கட்டி அவள் ஒரு மாதிரியான பெண் என முத்திரை குத்தி விடுவார்கள்.

ஒரு பெண் மற்றவர்களிடம் கெட்ட பெயர் வாங்க அவளுக்கு இழைக்கப்படும் அநீதிகளே காரணம்.

பாலியல் துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கப் படும் பெண்கள் இன்று அவமானப் படுத்தப்பட்டு ஓரங்கட்டப் படுகிறார்கள். ஆனால் பாலியல் துன்புறுத்தல்களில் ஈடுபட்ட ஆண் மற்றவர்களின் குத்தல் பேச்சுக்களுக்கு ஆளானதாக சரித்திரம் இல்லை. அவர்கள் குடும்பம் சீரழிந்து போய்விடுவதுமில்லை. சமூகம் அவர்களை ஒதுக்கி விடுவதுமில்லை.

வெட்கம், அவமானம் பெண்களின் ஏகபோக உரிமையாகிவிட்டன. கொடுமைக்கு ஆளானவளே குற்றம் சாட்டப்பட்டவளாகின்றாள்.

இந்த அவமான நிலை மாற பெண்கள் தான் முயற்சி எடுக்க வேண்டும். தேவையற்ற வெட்கத்தையும், அவமான உணர்வையும் பெண் தன் உள்ளுணர்வில் இருந்து தடயம் இன்றி களைந்து அகற்றிவிட வேண்டும். தனக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கு எதிராக அவள் துணிச்சலுடன் குரல் கொடுத்துப் போராட வேண்டும்.

நிமிர்ந்த நன்னடை, நேர்கொண்ட பார்வை, நிலத்தில் எவர்க்கும் அஞ்சாத நெறிகள் போன்ற இலட்சியங்களைக் கொண்ட பாரதி கண்ட புதுமைப் பெண்ணாக ஒவ்வொரு பெண்ணும் திகழ வேண்டும்.

பெண

பிரதீபா — பசீனா



# வெளியூர் செல்கிறீர்களா...?

பாடசாலை விடுமுறைக் காலத்தில் குடும்பத்தோடு வெளியூர் சென்று தங்கிவிட்டு வர யோசிக்கிறீர்களா?

அப்படிச் செல்லும் போது உறவினர்களின் வீடுகளில் அல்லது நண்பர்களின் வீடுகளில் தங்குவதானால் பின்வரும் ஆலோசனைகளைக் கருத்திற் கொள்ளுங்கள்.

* நீங்கள் போய்த் தங்கப் போகும் வீட்டில் வேறு எவராவது வந்து தங்கியிருக்கிறார்களா? நீங்கள் போய்த் தங்குவதனால் அவர்களுக்கு ஏதாவது சிரமம் இருக்குமா? என அறிந்து கொள்ளுங்கள்.
* நீங்கள் எத்தனை நாட்கள் அங்கு தங்கப் போகின்றீர்கள் எவற்றையெல்லாம் பார்வையிடப் போகின்றீர்கள் என்பதைத் தபால் மூலமாகவோ, தொலைபேசி மூலமாகவோ அவர்களுக்கு முன் கூட்டியே கூறிவிடுங்கள்.
  ஏனெனில் அவர்கள் வேறு காரணங்களுக்காக வெளியூர் செல்ல வேண்டி இருந்தால் நீங்கள் பயணத்தில் மாற்றம் செய்து கொள்ளமுடியும்.
* நீங்கள் செல்லும் போது உங்கள் ஊரில் உள்ள விசேஷமான பொருட்களில் சிலவற்றை அவர்களுக்காக வாங்கிச் செல்லுங்கள்.
* அவர்களின் வீட்டில் தங்கியிருக்கும் காலங்களில் நீங்கள் தினமும் ஒவ்வொரு இடங்களிற்குச் சென்றுவர நேரிடும், அப்படியான சந்தர்ப்பங்களில் இரவில் வெகுநேரம் தாமதமாக வருவதைத் தவிர்த்து விடுங்கள்.
* நாம் வெளியில் செல்லும் போது சாப்பிட வருவோமா? இல்லையா? என்பதை வீட்டுக்காரர்களுக்குத் தெளிவாகக் கூறிவிட்டுச் செல்லுங்கள்.
* வெளியில் போய்விட்டு வரும் போது காய்கறிகளையோ, பழங்களையோ அவர்களுக்கு வாங்கி வந்து கொடுங்கள்.
* நீங்கள் ஹோட்டலுக்கு, சினிமாவிற்குச் செல்லும்போது வீட்டுக்காரர்களையும் அழைத்துச் சென்றால் அவர்களுக்கு மாறுதலாகவும், சந்தோஷமாகவும் இருக்கும்.
* உங்களுக்கு இந்தச் சமையல் பிடிக்கும் அந்தச் சமையல் பிடிக்காது என்று கூறி அவர்களைச் சங்கடத்துக்கு உள்ளாக்கி விடாதீர்கள்.
* நீங்கள் வீட்டில் தொடர்ச்சியாகத் தொலைக் காட்சி பார்ப்பது போல அவர்கள் வீட்டில் பார்க்க வேண்டாம். அவர்கள் ஓய்வாக இருக்கும் வேளைகளில் தொலைக் காட்சியை அணைத்து விடுங்கள்.
* காய்கறிகளை வெட்டிக் கொடுப்பது, பாத்திரங்களைக் கழுவிக் கொடுப்பது, ஆடைகளை மடித்துக் கொடுப்பது போன்ற சின்னச்சின்ன வேலைகளில் அவர்களுக்கும் உதவியாக இருங்கள்.

நீங்கள் இப்படி இருந்தால் உங்களின் அடுத்த வரவை அவர்கள் ஆவலுடன் எதிர்பார்க்கத் தொடங்கிவிடுவார்கள்.



# அழகின் ரகசியம்

அழகை வெறுக்கும் பெண்கள் உலகில் இருக்க முடியாது. ஒவ்வொருவரும் தனித்துவமான அழகுடன் தான் பிறக்கின்றனர்.

இதனைவிட நாம் எம்மை பராமரிக்கும் முறையிலும் அழகு தங்கியுள்ளது. உங்கள் அழகைப் பராமரிக்கும்போது பின்வரும் நான்கு விடயங்களைக் கருத்திற் கொள்ளுங்கள்.

உடற்பயிற்சி:— உங்கள் உடல் பருமனானாலும் மெலிவானாலும் கட்டாயம் உடற் பயிற்சி செய்ய வேண்டும்.

உடலமைப்பு: —ஒவ்வொருவரும் தமது உடலமைப்புக்குப் பொருத்தமாக உடைகளை அணிய வேண்டும்.


ஆளுமை:— ஆளுமையைப் பேணுவது மிக முக்கியம்.

பேச்சு, நடை போன்ற விடயங்களில் பொது இடங்களில் அதிக கவனம் காட்டுவது அவசியம்.

உணவு:— நாம் உட்கொள்ளும் உணவுகள், சில சந்தர்ப்பங்களில் உடல் அழகைக் கெடுத்து விடும். எனவே சத்தான, சுத்தமான உணவுகளை உண்ணுங்கள்.

# நலம் தரும் இயற்கை உணவு

* இயற்கை உணவு இலகுவில் சமிபாடடைந்து விடுகிறது. சக்திகள் விரயமாவதில்லை. இதனால் குறைந்தளவு உணவு போதுமானது. இயற்கை உணவு நம்மை அடிமைப் படுத்துவதில்லை. இதில் கழிவுகள் குறைவு. அதனால் நோய்கள் ஏற்படாது.
* இயற்கை உணவு மூலம் இதயநோய், புற்றுநோய், இரத்தச் சோகை, சிறுநீரகக் கோளாறுகள் போன்றன உயிருக்கு அபாயம் ஏற்படுத்தும் நோய்கள் தவிர்க்கப்படுகின்றன. எலும்புகள் மென்மையடைதல், மூட்டு வலிகள் போன்ற நோய்கள் ஏற்படாது. ஊளைச் சதைபோடாது.
* இயற்கை உணவு உண்பவர்களின் மனம் மென்மை அடைகிறது. இதனால் காமம், குரோதம், கோபம் போன்றன ஏற்படாது. மேலும் பகை, பொறாமை, பழிவாங்கும் எண்ணம் ஏற்படாது. இதனால் மனம், உடல் இரண்டும் ஆரோக்கியமாக இருக்கும்.
* இயற்கை உணவுகளால் சோர்வு, பலவீனம் போன்றன நீங்கி அறிவு, ஞாபகசக்தி அதிகரிக்கும்.



# படித்ததில் பிடித்தது



* எதிர்காலத்தைப் பற்றித் திட்டமிடுங்கள்... தவறில்லை. ஆனால் எதிர்காலத்தில் என்ன நடக்கும் என்று கற்பனை பண்ணி பயப்படுவதால் உங்கள் மகிழ்ச்சிதான் பாழாகும்!
* சந்தோஷம் என்பது பூட்டு மாதிரி. அறிவு என்பது சாவியைப் போல, அறிவுச் சாவியை எதிர்ப்பக்கம் திருப்பினால் அது சந்தோஷத்தைப் பூட்டிவிடும். அதே சாவியைச் சரியான பக்கம் திருப்பினால் சந்தோஷக் கதவுகளைத் திறந்து விடும்!
* தோல்வி என்பது தள்ளிப் போடப் பட்டிருக்கும் வெற்றி, அவ்வளவுதான்! அதில் உற்சாகம் இழக்க ஒன்றும் இல்லை!
* நீங்கள் இந்தப் பூமியில் பிறந்ததன் அர்த்தம் பூர்த்தியாக வேண்டுமென்றால் அடுத்தவருக்கு உதவி செய்யுங்கள். அது முடியாவிட்டால் கூடப் பரவாயில்லை! ஆனால் எவரையும் புண்படுத்தி விடாதீர்கள்.
* வளர்ப்புப் பிராணிகளைப் போல நல்ல நண்பர்கள் எவரும் இல்லை. ஏனெனில் அவை வினாக்கள் தொடுப்பதில்லை, விமர்சனமும் செய்வதில்லை.
* வாழ்க்கை என்பது ஒரு கண்ணாடி. நீ சிரித்தால் சந்தோஷமாகப் பிரதிபலிக்கும். அழுதால் சோகமாகப் பிரதிபலிக்கும்.

# லஞ்சம் கொடுத்தால் விடுதலை மறுத்தால் அடி, உதை மறியல்

## கடவுச்சீட்டு மோசடி தொடர்பாக கைதானோரின் அவலநிலை



ஜெயராஜ் பொனாண்டோ புள்ளே

குடிவரவு குடியகல்வு சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட சுமார் 217 பேர் நீர்கொழும்பு விளக்கமறியல் சாலையில் பல மாதங்களாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் பெரும்பாலானோர் வெளிநாடுகளில் தொழில் வாய்ப்புக்களைப் பெற தொழில் வாய்ப்பு முகவர்களை நாடி ஏமாற்றப்பட்டதால் இன்று இந்த நிலையில் உள்ளனர்.

இவர்களின் கதைகள் பரிதாபகரமானவை.

தாங்கள் விடுவிக்கப்படாமல் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டிருப்பதை ஆட்சேபித்து சில வாரங்களுக்கு முன்னர் இவர்கள் விளக்க மறியல் சாலையில் பெரும் போராட்டம் ஒன்றை நடத்தினர்.

இவர்களின் போராட்டத்தால் பயன் கிடைக்கவில்லை. தொடர்ந்தும் இவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

விளக்க மறியல் சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களில் ஆண்கள் 157 பேர். பெண்கள் 60 பேர். இவர்களில் 22 பேர் வெளிநாட்டவர்கள்.

கடவுச்சீட்டுகளில் முகவர்களால் மேற்கொள்ளப்பட்ட மோசடிகளால் விமான நிலையத்தில் பிடிபட்டோரே இவர்களில் அநேகர். மற்றும் வெளிநாடுகளில் மோசடி கண்டுபிடிக்கப்பட்டு திருப்பி அனுப்பப்பட்டு கைதானோர், வேறு குற்றங்களுக்காகக் கைதானோர், ஆகியோரும் இவர்களில் அடங்கி உள்ளனர். இவர்களில் 69 வயது பெண் ஒருவரும் உள்ளார். 15 வயதான ஒரு சிறுவனும் உள்ளான்.

இந்த விளக்க மறியல்சாலையில் இருந்து தமக்கு விடிவே இல்லையா என்று ஏங்கிக் கொண்டிருந்த இந்த சந்தேக நபர்கள் இறுதியில் சிவில் விமானப் போக்குவரத்து, விமான நிலையங்கள் அபிவிருத்தி அமைச்சர் ஜெயராஜ் பெர்ணான்டோ புள்ளேயின் தயவை நாடினர். தங்களின் பரிதாப நிலையை விளக்கி இவர்கள் அமைச்சருக்கு மகஜர் அனுப்பியிருந்தனர்.

இந்த மகஜரை அடுத்து அமைச்சர் ஜெயராஜ் நீர்கொழும்பு விளக்க மறியல் சாலைக்கு நேரில் சென்று பார்வையிட்டார். சந்தேக நபர்கள் அமைச்சரிடம் கூறிய தகவல்கள் ஆச்சரியமளிப்பவை. அந்த தகவல்கள் இவைதான்.

கடவுச்சீட்டு தவறுகள் காரணமாக கட்டுநாயக்கா விமான நிலையத்தில் கைது செய்யப்படுவோரிடம் குற்ற விசாரணை திணைக்கள அதிகாரிகள் இலஞ்சம் கோருகிறார்கள். இலஞ்சம் வழங்காவிடில் மிருகத்தனமாகத் தாக்குகிறார்கள். நீதிமன்றத்தில் பிணை பெற முடியாதவாறு குற்றஞ்சாட்டுகிறார்கள்.

சந்தேக நபர்களிடம் ஒரு இலட்சம் ரூபா முதல் நான்கு இலட்சம் ரூபா வரை இலஞ்சம் கேட்கிறார்கள். கொடுத்தால் சட்டத்தின் பிடியில் சிக்காத வாறு தப்பிச் செல்ல விடுகிறார்கள். கொடுக்காதவர்களை பொய் குற்றச்சாட்டுக் கள் சுமத்தி விளக்க மறியலில் வைத்து விடுகிறார்கள்.

இதனைவிட குற்ற விசாரணை அதிகாரிகள் சிலர் சில சட்டத்தரணிகளுடன் சேர்ந்து சந்தேக நபர்களுக்கு பிணை பெற்றுக் கொடுப்பதாகக் கூறுகிறார்கள். அதற்காக ஆயிரக்கணக்கில் பணமும் பெறுவார்கள். ஆனால் அதன் பின்னர் அந்த சட்டத்தரணிகளை கண்ணால் கூட காணக் கிடைக்காது.

வழக்குத் தொடராமலும் பிணை வழங்காமலும் மூன்று, நான்கு மாதங்களாக சந்தேக நபர்கள் விளக்கமறியலில் வைக்கப்படுகிறார்கள். இதனால் அவர்களின் குடும்பத்தவர்களின் மனநிலையும் பாதிக் கப்படுகிறது. தனது மகன் இவ்வாறு தொடர்ந்து விளக்க மறியலில் வைக்கப்பட்டதால் மனமுடைந்த ஒரு தந்தை தற்கொலை செய்த சம்பவமும் இடம்பெற்றுள்ளது.

நிலைமைகளை நேரில் கண்ட அமைச்சர் ஜெயராஜ் அதிர்ச்சியடைந்துள்ளார். 230 கைதிகளை மட்டுமே தடுத்து வைக்கக்கூடிய அந்த விளக்கமறியல் சாலையில் ஆயிரத்துக்கு மேற்பட்டோர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அங்கு எவ்வாறான நிலைமை இருக்கும் என்பதை விவரிக்கத் தேவையில்லை.

இந்த சந்தேக நபர்களின் நிலைமை குறித்து ஜனாதிபதிக்கு விரிவான அறிக்கை சமர்ப்பிக்க அமைச்சர் ஜெயராஜ் உறுதியளித்தார். கடந்த 2ஆம் திகதி காலை நிலைமைகளை நேரில் பார்வையிட்ட அமைச்சர் மறுநாளே ஜனாதிபதிக்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.

நீர்கொழும்பு விளக்கமறியல் சாலையில் அல்லலுறும் இந்த சந்தேக நபர்களுக்கு நீதி, நியாயம் கிடைக்குமா?

# சூப்பர் சொனிக்கை விட வேகம் கூடிய ஹைப்பர் சொனிக்!

## நியூயோர்க்கிலிருந்து லண்டன் செல்ல 40 நிமிடங்கள்


தற்போது உலகில் காணப்படும் வேகம் கூடிய விமானம் சுப்பர்சொனிக்.

இந்த விமானத்தின் வேகத்தையும் விஞ்சக் கூடியது ஹைப்பர் சொனிக் (Hypersonic) விமானம்.

'உலோக அறிவியல்' வளர்ச்சியின் ஒரு சாதனையாக ஹைப்பர்சொனிக் யுகம் மலரவிருக்கிறது.

ஹைப்பர்சொனிக் விமானத்தின் மாதிரி ஒன்றை போயிங் நிறுவனத்தினர் தற்போது உற்பத்தி செய்திருக்கிறார்கள். விரைவில் இதனைச் செலுத்தி பரீட்சிக்கப் போகிறார்கள்.

இந்த விமானம் நியூயோர்க்கிலிருந்து லண்டன் செல்வதற்கு 40 நிமிடங்களே எடுக்கும். இந்த விமானத்தில் முழு உலகையும் நான்கு மணித்தியாலங்களில் சுற்றி வந்து விடலாம். மணிக்கு 5 ஆயிரம் மைல்கள் தொடக்கம் 7 ஆயிரம் மைல்கள் வரை இந்த விமானம் பறக்கக் கூடியது.



தற்போது தயாரிக்கப்பட்டுள்ள மாதிரி ஹைப்பர்சொனிக் விமானத்தின் நீளம் 12 அடி, அகலம் 5 அடி. நிறை 2200 இறாத்தல். பரீட்சார்த்த ஓட்டம் வெற்றி அளிக்குமானால் அடுத்த கட்டமாக, இந்த வருட இறுதியில் பசுபிக் சமுத்திரத்தின் சன் நிக்கலஸ் தீவுக்கு மேலாக மேலும் ஒரு தடவை இதனை ஓட்டிப் பரீட்சித்துப் பார்ப்பார்கள். இதன் உச்ச வேகம் மணிக்கு 7000 மைல்களாகும்.

கடந்த மாதம் Wind tunnel பரிசோதனையின் போது இதன் தொழினுட்பம் நன்கு பரீட்சிக்கப்பட்டது.

பரீட்சார்த்த ஓட்டங்கள் நம்பிக்கை அளிக்குமானால் இந்த விமானத்தின் வர்த்தக ரீதியிலான உற்பத்திகளை 2007 ஆம் ஆண்டிலேயே தொடங்கவிருப்பதாக போயிங் நிறுவனத்தினர் கூறுகின்றனர்.

முதலில் உற்பத்தி செய்யப்படும் ஹைப்பர்சொனிக் விமானங்கள் அமெரிக்க இராணுவத் தேவைகளுக்கு மட்டுமே பயன்படுத்தப்படும்.

அமெரிக்க இராணுவத்தினரின் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்ட பின்னரே சாதாரண பயணிகளுக்கு ஏற்றவாறு விமானம் உற்பத்தி செய்யப்படும்.

இத்தகைய நிலைமை ஏற்படுவதற்கு 2016 ஆம் ஆண்டு வரையாவது செல்லலாம் என்று போயிங் நிறுவன வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர்.

வேக விமானங்களின் உற்பத்தியில் இது ஒரு 'பாய்ச்சல்' என்றாலும் இந்த பாய்ச்சல் முன்னரே ஏற்பட்டிருக்க வேண்டும் என்பதே இத்துறையில் அனுபவம் மிக்க வல்லுநர்களின் கருத்து.

ஏனென்றால் அதிவேகமான பயணிகள் விமானம் Tu.144 ஆகும். இதன் வேகம் மணிக்கு ஆயிரத்து 600 மைல்கள். 1970 இல் ரஷ்யா இதனை உற்பத்தி செய்தது. ஆனால் இந்த விமானம் அது உற்பத்தியாகி மூன்று வருடங்களின் பின்னர் பாரிஸில் நடைபெற்ற விமான சாகஸக் காட்சியின் போது நொறுங்கியதுடன் இதன் உற்பத்தி நிறுத்தப் பட்டது.

இதன்பின்னர் இப்போது தான் ஒலியைவிட அதிவேகமான வேகத்துடன் செல்லும் பயணிகள் விமானம் தயாரிக்கப்படுகிறது. சுப்பர்சொனிக் விமானத்தின் வேகத்தை விட ஒரு மடங்கும் கொன்கோட் விமானத்தின் வேகத்தைவிட மூன்று மடங்கும் வேகம் கூடியது ஹைபர் சோனிக்.

1950 களிலிருந்து மணித்தியாலத்திற்கு 500 மைல்கள் வேகம் கொண்ட விமானங்களே உற்பத்தி செய்யப்பட்டு வந்தன. தற்பொழுது பரீட்சார்த்தமாகத் தயாரிக்கப்பட்டுள்ள ஹைப்பர் சொனிக் விமானம் விமான உற்பத்தியில் ஒரு சாதனைதான்.

இந்த ஹைப்பர்சொனிக் விமானங்களுக்கு ஜன்னல்கள் இருக்கா. அதனால் ஒலித் தடைகளைக் கிழித்துக் கொண்டு செல்கையில் ஏற்படும் அதிரும் ஒலிஅலைகள் பிரச்சினையாக அமையும். பயணச் செலவும் அதிகமாக இருக்கலாம்.

இந்த விமானத்தின் சாதக பாதக விளைவு கள் எப்படி இருந்தாலும் இதனை ஆவலுடன் வரவேற்க பலரும் காத்திருக்கின்றனர்.

கொன்கோட் விமானம் மூலமே பயணம் செய்வதற்குப் பழக்கப்பட்டு விட்டவரான சினிமாத் தயாரிப்பாளர் மைக்கேல் வின்னர் என்பவர் ஹைப்பர்சொனிக் விமானங்கள் குறித்து கருத்துத் தெரிவிக்கையில், ''நீண்ட நேரம் விமானத்தில் பயணம் செய்வதை நான் வெறுக்கிறேன். கூடிய வேகத்தில் பறப்பது எனக்குப் பெருமகிழ்ச்சியே'' என்கிறார்.

பருமனைப் பொறுத்தவரையில் ஜம்போவிலும் பார்க்க ஹைப்பர்சொனிக் குறைந்தது. ஜம்போவின் பருமனில் பாதியளவே இருக்கும்.

ஹைப்பர் சொனிக் விமானத்தின் விசேஷ அம்சங்கள்

* 250 பயணிகளை ஏற்றிக் கொண்டு நான்கே மணித்தியா லங்களில் உலகைச் சுற்றி வந்து விடக்கூடியது.
* பலவகை உலோகங்கள் இணைத்து உருவாக்கப்பட்ட ஹைப்பர் சொனிக்கின் கட்டுமானம் ஜன்னல்களின்றியே பலமானதாக இருக்கும்.
* மிகவும் உயர்ந்த அழுத்த இசைவுத் திறனூட்டப்பட்ட பயணிகள் அறையின் வடிவமைப்பும் படிப்படியான முறையில் வேக அதிகரிப்புமுறையும் பயணிகளுக்கு பாதுகாப்பாக இருக்கும்.

விமானங்களும் அவற்றின் வேகங்களும் வருமாறு:—

| | |
|---|---|
| போயிங் 747 | மணிக்கு 580 மைல் |
| கொன்கோட் | மணிக்கு 1350 மைல் |
| லொக்ஹீட் | மணிக்கு 2000 மைல் |
| ஹைப்பர்சொனிக் | மணிக்கு 5000—7000 மைல் |

இப்போதுள்ள விமானங்களுடன் ஒப்பிடும்போது ஹைப்பர்சொனிக் பல மடங்கு வேகம் கூடியது.

# சாய்ந்த கோபுரம் ஜூன் மாதம் திறப்பு

இத்தாலி நாட்டின் பைசா நகரத்தில், உலக அதிசயங்களில் ஒன்றான சாய்ந்த கோபுரம் உள்ளது. 800 ஆண்டுகள் பழமையான இந்தக் கோபுரம் கட்டும்போதே ஒருபுறமாக சாய்ந்து விட்டது. உலகின் 7 அதிசயங்களில் ஒன்றாகத் திகழும் இந்த சாய்ந்த கோபுரத்தைக்காண உலகம் முழுவதும் இருந்து ஏராளமான பயணிகள் வருவதுண்டு.

இந்தக் கோபுரம் ஒரு பக்கமாக சாய்வது அதிகரித்துக் கொண்டே போனது. இதையொட்டி 1990ம் ஆண்டு இந்தக் கோபுரத்தில் ஏற சுற்றுலாப் பயணிகளுக்கு தடைவிதிக்கப்பட்டது. மேலும் நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி சாய்ந்து கிடக்கும் கோபுரத்தைத் தூக்கி நிறுத்தும் பணிகளும் நடந்தன.

இதுவரை 38.7 சென்டி மீட்டர் அளவுக்கு கோபுரத்தின் சரிவை மீட்டுத் தூக்கி நிமிர்த்தி உள்ளனர். வருகிற ஜூன் மாதத்துக்குள் மேலும் 9 செ.மீட்டர் அளவுக்கு கோபுரத்தை நிமிர்த்த திட்டமிடப்பட்டுள்ளது. அதன்பிறகு ஜூன் மாதம் 16ந் தேதி முதல் சாய்ந்த கோபுரத்தில் ஏறிப் பார்க்க பயணிகளை அனுமதிக்க முடிவு செய்துள்ளனர்.

# வாழ்வில் மூன்று

* மதிப்பளிக்க வேண்டியவை மூன்று; முதுமை, சட்டம், மதம்
* காப்பாற்ற வேண்டியவை மூன்று; அன்பு, செல்வாக்கு, நட்பு
* கவனிக்க வேண்டியவை மூன்று; பேச்சு, நடத்தை, செயல்
* விரும்ப வேண்டியவை மூன்று; தூய்மை, கடின உழைப்பு, நேர்மை
* பாராட்டப்பட வேண்டியவை மூன்று; அறிவு, குணம், அழகு
* விலக்கப்பட வேண்டியவை மூன்று; சூதாடல், புகை பிடித்தல், மது அருந்துதல்
* ஒழிக்க வேண்டியவை மூன்று; புறங்கூறல், பொய், சோம்பல்
* தீவிரமடையக் கூடாதவை மூன்று; கோபம், காற்று, தீ

—ச. விஜயவாணி



பட்டி மண்டபத்தில் கலந்து கொண்ட த. சிவசங்கர், த. இராமலிங்கம், இ.ஜெயராஜ், ஸ்ரீ பிரசாந்தன், த.சிவகுமாரன், இரா.மாது .

# ஐந்து நாள் கம்பன் விழா தந்த இலக்கிய வேள்வி

கொழும்பு கம்பன் கழகம் நடத்தும் கம்பன் விழா இம்மாதம் 4ஆம் திகதி முதல் 8ஆம் திகதி வரை வெகுவிமரிசையாக நடைபெற்றது.

கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் நடைபெற்ற இந்த விழாவில் தனியுரை, இளைஞர் அரங்கு, பட்டி மண்டபம், ஐயந்தெளி அரங்கு, கவியரங்கு, இலக்கிய ஆணைக்குழு வழக்காடு மன்றம், மாதர் அரங்கு மற்றும் ஆடல் வேள்வி போன்ற நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

4ஆம் திகதி முதல் நாள் விழாவின் போது கொழும்பில் இடம்பெற்ற பதற்ற நிலையை அடுத்து ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது.

இதனால் அன்று அங்குரார்ப்பண



கவியரசர் இளந்தேவன் சிறப்புரை நிகழ்த்துகிறார்

நிகழ்வு மட்டுமே இடம் பெற்றது. அன்று நடைபெற விருந்த நூல் வெளியீடு மறுநாள் சனிக் கிழமை இடம்பெற்றது.

முதல் நாள் நிகழ்வில், கம்பன் திருவுருவப் படத்துக்கு நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ், லான்ட்மார்க் என்டர் பிரைசஸ் நிறுவனங்களின் நிர்வாக இயக்குநர் திரு. ஈ.சரவணபவன் திருமதி சரவணபவன் ஆகியோரின் விளக்கேற்றலுடன் நிகழ்வு ஆரம்பமானது.

தெ. ஈஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் தொடக்கவுரையை உயர் நீதிமன்ற நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்களும் திறப்புரையை இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபாலகிருஷ்ண காந்தியும் நிகழ்த்தினர்.



யார் வியவாதார் புத்தகத்தின் முதல் பிரதியை தெ.ஈஸ்ரன் வழங்க புரவலர் ஹாசிம் உமர் பெற்றுக்கொள்கிறார்.

இரண்டாம் நாள் நிகழ்வுகள் மறுநாள் சனி காலை 10 மணிக்கு வடக்கு – கிழக்கு தமிழ் விவகார அமைச்சின் செயலாளர் வே.ரகுநாதன் தலைமையில் நடைபெற்றன. ''இன்றைய சூழலில் இளஞ் சமுதாயம் கம்பனிடம் இருந்து பெரிதும் பெற்றுக்கொள்ள வேண்டியது..'' என்ற பொருளில் நடைபெற்ற இளைஞர் அரங்குக்கு இலக்கியச்சுடர் த.இராமலிங்கம் நடுவராகக் கடமையாற்றினார்.

அன்றைய தின மாலை நிகழ்வுகள் மாலை 5 மணிக்கு பேராதானைப் பல்கலைக்கழக முதுநிலைவிரிவுரையாளர் கலாநிதி துரைமனோகரன் தலைமையில் நடை பெற்றன. சிறப்புரையை 'கவியரசர்' இளந்தேவன் நிகழ்த்தினார்.

''யார் கண்களூடு காண இராமன் பெரிதும் அழகு பெறுகிறான்?'' என்ற பொருளில் நடைபெற்ற பட்டிமண்டபத் துக்கு பேராசிரியர் சாலமன் பாப்பையா நடுவராகக் கடமையாற்றினார்.

6ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை நிகழ்வுகள் காலை 10 மணிக்கு வடக்கு – கிழக்கு மாகாண சபையின் பொது நிர்வாக அமைச்சுச் செயலாளர் கே.பரம லிங்கம் தலைமையில் நடைபெற்றன.

''தன்னிகரில்லாத் தலைவனை கம்பன் இன்ன விதமாகப் படைத்தது ஏன்?'' என்ற பொருளில் நடைபெற்ற ஐயந்தெளி அரங்குக்கு பேராசிரியர் சாலமன் பாப்பையா தலைமை வகித்தார்.

அன்று காலை 5 மணிக்கு பொன்னம்பல வாணேஸ்வரர் தேவஸ்தான அறங்காவலர் டி.எம்.சுவாமிநாதன் தலைமையில் நிகழ்வுகள் நடைபெற்றன.

''காலங் கடந்து கம்பவாரி நமக்கு மீளவும் தந்திடுமோ ,மிடுக்கு?'' என்னும் பொருளில் நடைபெற்ற கவியரங்குக்கு கவியரசர் இளந்தேவன் தலைமை வகித்தார்.

மறுநாள் திங்கட்கிழமை காலை நிகழ்வுகள் வடக்கு – கிழக்கு தமிழ் விவகார அமைச்சின் ஊடகத்துறைப் பொறுப்பாளர் வி.ஏ.திருஞான சுந்தரம் தலைமையில் நடைபெற்றன.

''உணர்ச்சி மிகுந்த சிறந்த காட்சிக்கான விருது வழங்கப்பட வேண்டியது'' என்ற பொருளில் நடைபெற்ற இலக்கிய ஆணைக்குழுவுக்கு பேராசிரியர் சாலமன் பாப்பையா ஆணையாளராகக் கடமையாற்றினார்.

அன்றைய மாலை நிகழ்வுகள் வடக்கு, கிழக்கு மாகாண சபை பிரதம செயலாளர் ஜி.கிருஷ்ண மூர்த்தி தலைமையில் நடைபெற்றன.

''தனது இச்சைக்காக, தேசத்தைப் பலியிட்ட இராவணன் குற்றவாளி?'' என்ற வழக்காடு மன்றத்துக்கும் பேராசிரியர் சாலமன் பாப்பையா நீதிபதியாகக் கடமையாற்றினார்.

இறுதி நாள் நிகழ்வுகள் 8ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இடம்பெற்றன. காலை நிகழ்வுகள் ஜப்பான் கச்சுகின் பல்கலைக் கழக வருகை ஆய்வாளர் திருமதி மனோன்மணி சண்முகதாஸ் தலைமையில் நடைபெற்றன.

''தலைவர் மூவர்'' என்னும் பொருளில் கம்பவாரிதி இ.ஜெயராஜ் தலைமையில் மாதர் அரங்கு நடைபெற்றது.

மாலை நிகழ்வுகள் கிழக்குப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் பேராசிரியர் மா.செ.மூக்கையா தலைமையில் நடைபெற்றன.

கொழும்பு கம்பன் கழக பெருந்தலைவர் சி.வி.விக்னேஸ்வரன் இந்த ஆண்டுக்கான விருதுகளை வழங்கினார். தொடர்ந்து ''நாட்டிய கலாநிதி'' பத்மா சுப்பிரமணியத்தின் ஆடல் வேள்வியும் இடம்பெற்றது.

— வாகீசன்

விழாவில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினர்.



## பித்தன் பதில்கள்

கே. அக்கீத், செட்டிக்குளம்.

கே : ஹாய் பித்தனே! உங்களைக் கவர்ந்த அண்மையில் வெளியான தமிழ் திரைப்படம் எது?

ப : 'பத்ரி' ஆவதும் பெண்ணாலே அழிவதும் பெண்ணாலே என்பதற்கு சிறந்த எடுத்துக்காட்டு.

செ. செந்தூரன், கண்டி.

கே : தொலைக்காட்சிப் பெட்டியை ''இடியற்பொக்ஸ்'' என்று சொல்வதேன்?

ப : உம்மையும் என்னையும் மட்டும் அது முட்டாளாக்கவில்லை. முழுச்சமூகத் தையுமே அல்லவா முட்டாளாக்குகிறது.





பி.பிரேம், வவுனியா

கே : மை டியர் பித்தன்.... உங்களிடம் உள்ள சிறப்பான குணம் எது?

ப : பொறுமை. உங்கள் கேள்விகளுக்கெல்லாம் அலுக்காமல் பதில் எழுதுகிறேனே.

தி. சசிகலா, ஏழாலை.

கே : மகன் மீதுள்ள ஆசையினால் அரசியலைக் குட்டிச் சுவராக்கி விட்டார் கருணாநிதி என்பது பற்றி என்ன சொல்கிறீர்கள் பித்தனே?

ப : மகன் மீது மட்டும் கருணாநிதிக்கு ஆசை இல்லை, பரம்பரை பரம்பரையாக மடி கனத்திருக்க வேண்டும் என்பதில் தீராத ஆசை கொண்டிருக்கிறார்.





எ.கண்ணன், மல்லாவி.

கே : ஜனாதிபதியின் வெளிநாட்டு விஜயங்கள் குறித்து உமது கருத்து.

ப : யுத்த வெப்பத் துடன் சூரிய வெப்பமும் அதிகரித் துள்ளது தானே, அது தான் இடைக்கிடை சின்னச் ''சேஞ்ச்''

எஸ்.தியாகலிங்கம், பெரடைஸ்பிளேஸ்.

கே : அக்கினிச் சுவாலை இராணுவ நடவடிக்கையை சரியான நேரத்தில் ஆரம்பித்ததால் குடாநாட்டைப் புலிகள் கைப்பற்றும் திட்டத்தை முறியடித்து விட்டதாக படைத்தரப்புத்தெரிவிக்கிறதே...?

ப : விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை என்பதுதான் ஞாபகம் வருகிறது.

சுபத்ரா, நல்லூர்.

கே : மாவனல்லைச் சம்பவங்கள் எதனை எடுத்துக் காட்டுகின்றன?

ப : இந்த நாட்டில் தமிழ் மக்கள் மட்டும் அல்ல முஸ்லிம் மக்களும் பாதுகாப்பாக வாழ்வதற்கு அரசமைப்பு ரீதியாக உத்தரவாதம் வேண்டும் என்பதை.

சர்மிலா, மருதானை.

கே : புலிகள் மீதான தடை ஒரு போதும் நீக்கப்பட மாட்டாது என்று பிரதமர் கூறுகிறாரே?

ப : நோர்வேயின் மத்தியஸ்த முயற்சி ஆரம்பித்த பின்னர் இப்படி எத்தனையோ கூறிவிட்டார் பிரதமர். அவற்றில் ஒன்றாக இதனையும் கருத வேண்டியது தான்.

கு.ரவிராஜ், மல்லாகம்

கே : தமிழகத் தேர்தல்.....?

ப : சகதிக்குள் சல்லடை!

பா. பிரசாந்தன், கொழும்பு—05.

கே : பட்டதாரி இளைஞர்கள் வேலை வாய்ப்பற்று அங்கலாய்த்துக் கொண்டிருக்கும் போது தொடர்ந்தும் பதவிகளில் இருக்க ஆசைப் படும் வயதான அரச உத்தியோகத்தர்கள் பற்றி என்ன நினைக்கிறீர் பித்தனே?

ப : 'ஈசிச் செயாரில்' தூங்க வேண்டியவர்கள் அலுவலகச் செயாரில் தூங்கினால் நாடும் தூங்கிப்போகும்.



## பாலாவின்....

— 4ஆம் பக்கத் தொடர்ச்சி

இருசாராரின் தேவைகளும் நிறைவேறும் அல்லவா?

அன்டன் பாலசிங்கம் தெரிவித்த தகவல்களை அடுத்து இப்படியான சமரச ஆலோசனைகளுடன்தான் எரிக் சொல்ஹெய்ம் கொழும்பு வருகிறார்.

உலக அபிப்பிராயம் முன்னர் போல் அரசுக்குச் சாதகமாக இல்லாத இன்றைய நிலையில் அரசு சிறிதளவேனும் விட்டுக்கொடுத்தே ஆக வேண்டிய கட்டாயம் இருக்கிறது. அந்த நம்பிக்கை சொல்ஹெய்முக்கு உண்டு.

புலிகளை இராணுவ ரீதியாக முற்றாக ஒழித்துவிட்டு ஏனைய தமிழ்க் கட்சிகளுடன் பேசி கொடுப்பதை மூச்சுக்காட்டாமல் அவர்களை எடுக்கவைக்கவேண்டும்.

புலிகளை முற்றாக ஒழித்துக்கட்ட முடியாவிட்டால் அவர்களின் முதுகை முறித்து அவர்களைப் பலவீனப்படுத்தி பணிய வைத்தே அவர்களுடன் பேசி அரசு விரும்பும் தீர்வைத் திணிக்கவேண்டும்.

இரண்டில் ஒன்றைச் செய்வதுதான் அரசின் விருப்பமாக இருந்தாலும் அரசு பிறர் அபிப்பிராயத்துக்கு மதிப்பு அளித்தே ஆகவேண்டும்.

அதனால் இம்முறை அரசு சிறிது தளர்வைக் காட்டி சர்வதேச சமூகத்தின் மதிப்பையும் ஆதரவையும் மீண்டும் பெற முயற்சிக்கலாம்.

எது எப்படி இருந்தபோதிலும் சுடர் ஒளி எத்தனையோ வாரங்களுக்கு முன்னர் கூறியபடி பேச்சுவார்த்தை நடக்காது; நடந்தாலும் தொடராது; தொடர்ந்தாலும் பலன் தராது.

# சத்துருக்கொண்டானில் கண்ணாக் காடு சீரழிப்பு!

## படையினரின் தற்காப்பு நடவடிக்கையாம் இது!

மட்டக்களப்பு மாவட்டத்தின் சத்துருக்கொண்டான், தன்னாமுனை மற்றும் வாவிக்கரையை அண்டிய பகுதிகளில் வளர்ந்துள்ள கண்டல், கண்ணா தாவரங்கள் தற்போது பாதுகாப்புப் படையினரால் வெட்டி அழிக்கப்பட்டு வருகின்றன.

விடுதலைப்புலிகளின் தாக்குதல்கள் இடம்பெறாதவண்ணம்— பாதுகாப்பு முன் ஏற்பாடுகளுக்கு வசதியாக— இந்தத் தாவரங்கள் அழிக்கப்படுவதாக படைத்தரப்புத் தெரிவிக்கிறது.

இவை அழிக்கப்படுவதால் மண் அரிப்பு ஏற்படுவதுடன் மீன், இறால் போன்ற கடல்வாழ் உயிரினங்கள் அருகி வரும் ஆபத்தும் ஏற்பட்டுள்ளது.

அத்துடன் குட்டி சரணாலயமாக விளங்கிய சத்துருக்கொண்டானில் தங்கி வாழும் பறவை இனங்களின் வருகையும் வீழ்ச்சியடைந்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்டம் இயற்கை எழில் கொண்ட பிரதேசம். வாவிகளும் வாவிக்கரையை அண்டிய சதுப்பு நிலத்தில் கண்டல், கண்ணா தாவர இனங்களும் மட்டக்களப்பு மாநிலத்தின் பெருமைகளில் ஒன்று.

மட்டக்களப்பு நகரில் இருந்து நான்கு கிலோமீற்றர் தொலைவிலுள்ள பிள்ளையாரடி, சத்துருக் கொண்டான், தன்னாமுனை வரை வாவி ஓரமாக இந்த கண்டல், கண்ணா தாவரங்கள் செழிப்புடன் காணப்பட்ட காலம் மலை ஏறி விட்டது.

மட்டக்களப்பு – திருமலை நெடுஞ்சாலை ஓரமாக இந்த வாவி அமைந்திருப்பதால் விடுதலைப் புலிகள் பாதுகாப்புப் படையினர் மீதான தாக்குதலை இப்பற்றைக் காடுகளுக்குள் மறைந்திருந்து மேற்கொள்ளமுடியும் என்ற அச்சம்

சத்துருக் கொண்டான் வாவிக் கரையை அண்டிய பகுதியில் காணப்படும் கண்ணா, கண்டல் தாவரங்களையே படத்தில் காண்கிறீர்கள். இவற்றில் பெரும் பகுதி வெட்டி அழிக்கப்பட்டுவிட்டது.



படைத்தரப்புக்கு இருந்து வருகிறது. இந்தக் காடு அழிப்புக்கு இதுவே காரணம்.

97ஆம் ஆண்டு முதல் படையினர் இப்பகுதியில் தாவர இனங்களை அழிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டாலும் தற்போதே இதனை முற்றாக அழிக்கும் நடவடிக்கையில் இறங்கி உள்ளனர்.

சத்துருக் கொண்டானில் கண்ணாக்காடு ஒரு சதுப்பு நிலப்பிரதேசத்தில் செறிந்து காணப்படுகிறது. இது பறவைகளின் குட்டி சரணாலயம் என்று கூட முன்னர் கருதப்பட்டு வந்தது.

மழை காலங்களில் சைபீரியாவிலிருந்து வாத்துக்களும் இமயமலைப் பகுதிகளிலிருந்து கழுகு, கூழகிடா, பவளக்காலி, நாரை போன்ற பறவைகளும் இங்கு பறந்து வந்து சத்துருக் கொண்டான் சரணாலயத்தில் தங்கிச் செல்வது வழமை.

இலங்கையில் 428 பறவை இனங்கள் காணப்படுகின்றன. இவற்றில் 222 இந்த நாட்டில் உள்ள பறவை இனங்களாகும். மிகுதியானவற்றில் பெரும்பாலானவை வெளிநாடுகளில் கடும் குளிர் நிலவும் காலத்தில் இங்கு வந்து தங்கிச் செல்லும் பறவைகள்.

குளிர் காலத்தில் வெளிநாடுகளிலிருந்து வரும் பறவைகளில் பெரும்பாலானவை சத்துருக் கொண்டானில் தங்கிச் செல்கின்றன.


இவற்றைக் கருத்தில் கொண்டே 96 டிசம்பரில் மட்டக்களப்பில் நடைபெற்ற வாவி முகாமைத்துவ செயலமர்வில் இப்பகுதியில் சரணாலயம் ஒன்றை அமைக்கத் தீர்மானம் எடுக்கப்பட்டது. ஆனால் அத்தீர்மானம் இதுவரை நிறைவேற்றப்படவில்லை.

பசுமைச் செழிப்புடன் வாவி ஓரத்தை அழகுபடுத்திய இத் தாவர இனம் தற்போது முற்றாக அழிக்கப்படுவது வேதனைக்குரியது.

வடக்கு கிழக்கு தவிர்ந்த ஏனைய பகுதிகளில் காடு அழிப்புக்குத் தடை விதித்து மரநடுகையை ஊக்குவித்து வரும் அரசு, ஏன் வடக்கில் பனை வளங்களையும், கிழக்கில் இப்படியான தாவர இனங்களையும் அழித்து பாலை வனமாக்க வேண்டும் என மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை இந்த விடயம் தொடர்பாக மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆக்கபூர்வ நடவடிக்கை எதனையும் எடுக்காதது வேதனைக்குரியது எனவும் மக்கள் குறை கூறுகின்றனர்.

**சத்துருக்கன்**




### புஸ்வாணமா கூட்டமைப்பு?

பத்துத் தமிழ்க்கட்சிக் கூட்டமைப்பு சம்பந்தமாக இப்போதெல்லாம் பத்திரிகைகளில் செய்திகள் வருவது குறைவு.

ஏன் என்று விசாரிக்க முயன்றபோது பல சுவாரஸ்யமான தகவல்கள் அம்பலத்தாரின் காதுகளில் மளமளவென்று வந்து விழுந்தன.

மலைநாட்டின் சேகரனாரும் சாமியாரும் மறைந்த மாபெரும் தலைவரின் பேரனாருடன் கைகோர்த்து கூட்டுச் சேர்ந்து ஒன்றாகி மே தினத்தைக் கொண்டாடியது புதிய கூட்டணி ஒன்று உருவாவதை உறுதிப்படுத்திவருகிறது.

இந்த நிலையில் மறைந்த தலைவரின் பேரனார் இடம்பெறாத பத்துக் கட்சி கூட்டுக்குள் சேகரனாரும் சாமியாரும் தொடர்ந்து நீடிப்பதில் சில சங்கடங்கள் உள்ளனவாம்.

மலையகத்தில் ஒரு கூட்டு, அதற்கு வெளியே இன்னொரு கூட்டு என்று ஒரே நேரத்தில் இரண்டு தோணிகளில் எப்படிப் பிரயாணம் செய்வது? பத்துக் கட்சிகளின் கூட்டுக்குள் மறைந்த தலைவரின் பேரனாரின் கட்சி வருவதற்கு தயார். என்றாலும் ஆட்சியில் பங்காளராக உள்ளவரையில் அக்கட்சியை உள்ளே இழுக்க கூட்டமைப்பில் உள்ள வடக்கு– கிழக்கு கட்சிகள் தயாராக இல்லையாம். இந்த நிலையில் கூட்டமைப்பின் செயற்பாடுகளில் தீவிர அக்கறைகாட்டி வந்த சாமியாரும் சமீப காலமாக சேகரனார் நடந்து வந்திருந்ததைப் போன்று ஏனோ தானோ என்று இருக்கிறாராம்.

இதே நேரத்தில் தனி நாட்டுக்கான ஆணையை 1977 தேர்தலில் பெற்ற பழம்பெரும் தமிழ்க்கட்சியும் முதலில் தோன்றிய தமிழ்க்கட்சி தாங்களே என இப்போதும் மார்தட்டும் கட்சியும் அசிங்கமானதோர் அறிக்கைப் போரில் ஈடுபட்ட சூடு இன்னமும் தணியவில்லையாம்.

அடுத்த அறிக்கை முறைப்படி அந்த மார்தட்டும் கட்சியின் முகாமில் இருந்து தானாம் வெளிவரவேண்டும். அப்படி வெளிவந்தால் அனேக சங்கதிகள் அம்பலத்துக்கு வரும் என பழம்பெரும் தமிழ்க் கட்சியின் சிரேஷ்ட உப தலைவர் ஒருவர் தனது கடைசி அறிக்கையில் மிரட்டி உள்ளதால் கொஞ்சம் யோசிக்கிறார்களாம்.

சமாதானம் வேண்டும் என்பதற்காக இந்த அமைப்பில் இருக்கும் தமிழ்த் தலைவர்கள் சிலர் பகிரங்கமாக இரண்டெழுத்து இயக்கத்தையே தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் என்று அறிவித்தமையும் குறிப்பிடத் தக்கது.

ஆனால் இந்தத் தமிழ்க்கட்சி அமைப்பில், தமிழர்களின் விடுதலைக்காகப் போராடும் ஒரு கூட்டணியின் இளைய தலைமுறையின் நகரத் தலைவர் ஒருவர் தீவிரமாகப் பங்கேற்பது ஒரு சிரேஷ்ட உப தலைவருக்கு அறவே பிடிக்கவில்லை. இதுபற்றி அரசியல் அம்பலத்தார் முன்பும் தெரிவித்திருந்தார். அவரைத் தொடர்ந்தும் அதில் பங்குபற்ற இடமளிக்கமாட்டேன் என்றும் இந்த உபதலைவர் சில பேனாக்காரர்களிடம் தெரிவித்திருந்தார்.

இப்போது இந்த நிலைமை அந்தக் கட்சிக்குள் ஒரு அதிருப்தியான சூழ்நிலையை ஏற்படுத்திருக்கிறது. தமிழர்களின் விடுதலைக்காகப் போராடும் அந்தக் கூட்டணிக்குள் உள்ள பெரும்பாலானவர்கள் இளைய தலைமுறை நகரத் தலைவர் பங்கேற்பதை எதிர்க்கவில்லை.

இதில் இருந்து நாம் நிச்சயம் விலகிக்கொள்ளவேண்டும் என்று சிரேஷ்ட உபதலைவர் தொடர்ந்து வற்புறுத்தி வருவது குறித்து அந்த இளைய தலைமுறை நகரத் தலைவர் இன்னுமொரு தமிழ்க் கட்சித் தலைவரிடம் வருத்தம் தெரிவித்திருக்கிறார்.

''அவர் மட்டும் தான் எதிர்க்கிறார். ஆனால் இதற்கு முடிவு கட்டுவோம். எல்லோரும் சேர்ந்து இதுபற்றி இறுதியான தீர்மானம் எடுக்கவிருக்கிறோம். அதன்பின்பு நான் கூட்டமைப்பில் கலந்து கொள்வதில் பிரச்சினை இருக்காது'' என்று அவர் உறுதியாகக் கூறியிருக்கிறார்.

இதற்கிடையில் கூட்டமைப்பில் நீடிப்பது தொடர்பாக பழம் தமிழ்க் கட்சியின் மத்திய குழு இந்த வாரம் விவாதித்து முடிவு எடுக்க உள்ளதாம்.

### அமைச்சரின் பலமும் பலவீனமும்

வடக்கு மாவட்ட அபிவிருத்தி தொடர்பான ஓர் கூட்டம் விரைவில் நடக்கவிருக்கிறது. இந்தக் கூட்டத்துக்கு செல்ல வேண்டிய பொறுப்புள்ள தமிழ், அதிகாரமன்ற உறுப்பினர்கள் சிலர் கூட்டத்தில் கலந்து கொள்வார்களா என்பது இப்போது கேள்விக் குறியாக இருக்கிறதாம்.

''டக்'' தலைவர் இக் கூட்டத்தை தியேட்டரில் நடத்தத்தான் விரும்புகிறாராம். இது குறித்து ஒரு தமிழ் அதிகாரமன்ற உறுப்பினர் அரசாங்க ஏஜன்ட் ஒருவரிடம் வினவினாராம். ஆனால் அரசாங்க ஏஜன்ட் ''முன்பு அது தியேட்டர் தான் இப்போது அது அமைச்சு'' என்று சொன்னாராம்.

''இல்லை தியேட்டர் அவர்களது கட்சித் தலைமைக் காரியாலயம்'' என்று அந்த அதிகாரமன்ற உறுப்பினர் சூடாக திருப்பிச் சொன்னாராம்.

''யார் போனால் என்ன போகாவிட்டால் என்ன? கூட்டம் நடக்கும். டக் தலைவரை குறைவாக எடை போடக் கூடாது. அவர் இக் கூட்டத்தின் தலைவர். அவருக்கு முழு அதிகாரமும் வழங்கப்பட்டிருக்கிறது'' என்று புகழ்பாடினார் அதிகாரமன்றில் இப்போது அங்கம் வகிக்காத இன்னுமொரு தமிழ்க் கட்சியின் தலைவர்.

''முன்பு முஸ்காங் டாக்டர் ஒருவர் சத்தியாக்கிரகம் இருந்தார். அவருக்கு பக்கபலமாக காலஞ் சென்ற தலைவர் முயற்சி செய்தார். எதுவும் நடக்கவில்லை. அதிகாரமன்ற உறுப்பினர்களுக்காக ஒதுக்கப்பட்ட பணம் எப்படி செலவழிக்கப்பட வேண்டும் என்பதை டக் தலைவர் தான் இறுதியாக தீர்மானிக்க முடியும்'' என்று புகழ்பாடிய அவர் இன்னும் ஒன்றையும் கூறினார்.

''என்னதான் அபிவிருத்தி கூட்டம் என்றாலும் யுத்தம் இருக்கும் வரை ஒன்றும் செய்ய முடியாது. முன்பு ஒதுக்கப்பட்ட பணம் எக்கச்சக்கமாகக் கஜானாவுக்கே திரும்பியது. இக் கூட்டத்தில் அதிகாரமன்ற உறுப்பினர்களின் திட்டங்களுக்கு டக் தலைவர் அனுமதி அளித்தாலும் திட்ட அமைச்சில் அங்கீகாரம் பெறவேண்டும். பின்பு திட்டத்துக்கு 'டெண்டர்' அழைப்பு விட வேண்டும். இவ்வளவும் செய்து முடிவதற்கிடையில் வருடமும் முடிந்து விடும். பணமும் கஜானாவுக்கே திரும்பிவிடும்''.

டக் தலைவர் கவனத்தில் கொள்வாரா?

### புலி + மரம் + கை = சமாதானம்?

அதிகாரத் தரப்பாரும் இரண்டெழுத்து போராட்ட இயக்கக்காரர்களும் பேச்சுக்களை நடத்துவார்களோ இல்லையோ தனித்துவ கட்சி ஒரு விடயத்தில் மிகவும் உறுதியாகவே இருக்குமாம்.

அதிகாரத்தரப்பும் இரண்டெழுத்து இயக்கமும் சமாதானமாகப் பேசும்போது அதிகாரத் தரப்புக் குழுவில் தனித்துவ கட்சியும் சேர்த்துக்கொள்ளப்படவேண்டும் என்பதே அந்த உறுதியாம்.

அதிகார அம்மணி இதற்கு ஆரம்பத்தில் இணங்கியிருந்தாராம். ஆனால் இப்போது சுருதியை மாற்றிக்கொண்டுவிட்டாராம். இதனால்தான் தனித்துவ கட்சியின் உயர் மட்டக் கூட்டத்தில் இதனையிட்டு அதிகாரத்தரப்பை மீண்டும் வலியுறுத்தவேண்டும் என்று இன்னுமொரு முறை தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார்கள்.

இதே உயர்மட்ட கூட்டத்தில் 'கிழக்கிலே புதிய மாவட்டத்தை ஏற்படுத்த புதிதாக தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியிருக்கிறார்களாம். மே 31வரை காலக்கெடு விதித்து அதிகாரத்தரப்பாரை உசுப்பிவிடுவதே இதன் நோக்கமாம்.

குறித்த காலத்துக்குள் புதிய மாவட்டத்தை ஏற்படுத்தாவிட்டால் அதிகாரத்தரப்பாருடன் இணைந்திருப்பதா இல்லையா என்பதை தீர்மானிக்கவேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது.

ஆனால் தனித்துவ கட்சியின் உள்ளார்ந்த நோக்கம் அதிகாரத்தரப்பில் இருந்து பிரிந்து செல்வது இல்லை'' என்பதுதான் என்பதைத் தெளிவாக்குகிறார் ஒரு செயலர்.

''அதிகாரத்தரப்பில் தொடர்ந்து இருப்பதா என்பதைப் பற்றி மீள்பரிசீலனை செய்வது என்பது பச்சைக்கட்சிக்காரர்களுக்கு ஆதரவளித்து ஆட்சியில் அமர இடமளிப்பது அல்ல. நாங்கள் அதனை செய்யமாட்டோம்'' என்று அந்தச் செயலர் மேலும் தெரிவிக்கிறார்.

அப்படியானால் எப்படி.....?

''அதிகாரத்தரப்பாருடன் இணைந்திருப்பதா இல்லையா என்பதை மீள்பரிசீலனை செய்வோம் என்பதன் அர்த்தம் நாங்கள் வகிக்கும் சகல பதவிகளையும் விட்டு ராஜினாமா செய்வோம். ஆனால் அரசாங்கத்தைக் கவிழ்க்கும் வகையில் செயற்படுவது எமது நோக்கமல்ல. முக்கியமானவைகளுக்கு அரசாங்கத்துக்கு ஆதரவாக வாக்களிப்போம். எமது மக்களுக்குப் பாதகமானவற்றுக்கு எதிராக வாக்களிப்போம்.''

இப்படித்தான் அவர் சொல்கிறார்.

இதே செயலர் அந்த உயர் மட்ட கூட்டத்தில் ஒரு பிரேரணையை முன்வைத்தார். ஆனால் அது ஏற்றுக்கொள்ளப்படவில்லை. கட்சியின் முக்கியஸ்தர்கள், அமைச்சர்கள், எம்.பிக்கள் எவரும் அதிகாரத்தரப்பாரிடம் எந்தவிதமான சலுகைகளையும் நலன்களையும் கேட்டுப் பெறக்கூடாது என்று ஒரு தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டும் எனபதுதான் அவர் முன்வைத்த பிரேரணை.

அதிகாரத்தரப்பாருக்கு காலக்கெடு விதித்திருக்கிறோம். அதிகாரத்தரப்பு இவற்றுக்கு இணங்காவிடில் பதவிகளை ராஜினாமா செய்வதாக தீர்மானித்திருப்பதால் இந்தப் பிரேரணையைத் தீர்மானமாக நிறைவேற்றவேண்டிய அவசியமில்லை என்று உறுதியாகச் சொல்லிவிட்டார்களாம் பெரும்பாலான உயர்மட்டக் குழு உறுப்பினர்கள்.

# சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனத் தலைவர் இலங்கை வருகிறார்

இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனத்தின் புதிய தலைமைக் காரியாலய கட்டடத்தின் திறப்பு விழா எதிர்வரும் 15ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இத்திறப்பு விழாவில் கலந்துகொள்வதற்காக சர்வதேச கால்பந்தாட்டச் சங்கங்களின் சம்மேளனத்தின் தலைவர் ஜோஸப் பிளாட்டர் இலங்கைக்கு வரவுள்ளார்.

203 நாடுகள் அங்கத்துவம் வகிக்கும் உலகின் மிகப்பெரிய விளையாட்டு கட்டுப்பாட்டு அமைப்பு சர்வதேச கால்பந்தாட்டச் சம்மேளனம் (ஃபிஃபா)ஆகும். இச்சம்மேளனத்தின் தலைவர் ஒருவர் உத்தியோக பூர்வமாக தெற்காசிய நாடொன்றுக்கு வர விருப்பது இதுவே முதல்தடவை.


ஜோஸப் பிளாட்டர்

சுவிட்சர்லாந்து நாட்டவரான பிளாட்டர் 16 வருடங்கள் ஃபிஃபாவின் செயலாளராக கடமைப்புரிந்தார். 1998 ஜூன் 8 முதல் அதன் தலைவராக விளங்குகிறார். இந்தியா உட்பட பல நாடுகள் தமது நாட்டுக்கு வரு மாறு பிளாட்டருக்கு அழைப்புவிடுத்துள்ள போதிலும் அவர் இலங்கைக்கே முதலிடம் கொடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

14ஆம் திகதி அதிகாலை இலங்கைக்கு வரும் பிளாட்டர் ,14ஆம் திகதியன்று காலை 11.00க்கு கோட்டே, பெத்தகானவிலுள்ள கால்பந்தாட்டப் பயிற்சி நிலையத்திற்கான அடிக்கல்லை நாட்டிவைப்பார். 15ஆம் திகதி காலை 9.00 மணிக்கு இலங்கை கால் பந்தாட்ட சம்மேளனத்தின் புதிய தலைமையகக் கட்டடத்தை திறந்து வைப்பார்.

இலங்கைக் கால்பந்தாட்டச் சம்மேளனத்தின் புதிய தலைமையகம் கொழும்பு சுதந்திர அவெனியூவில் 100/9 ஆம் இலக்கத்தில் அமைந்துள்ளது. 'ஃபுட்போல் ஹவுஸ்' எனப் பெயரிடப்பட்டுள்ள இக்கட்டடம் நூலகம், உடற்பயிற்சிக்கூடம், கருத்தரங்கு மண்டபம், வெளியூர்களிலிருந்து வரும் அதிகாரிகளுக்கான தங்குமிடம், சமையலறை, வீடியோகாட்சியறை, என்பனவற்றையும் கொண்டிருக்கும்.


ஃபுட்போல் ஹவுஸ்

இ.கா.சம்மேளனத்தின் நிறை வேற்றுக் குழு உறுப்பினரும் ஆசிய கால்பந்தாட்டச் சம்மேளனத்தின் உபதலைவருமான மணிலால் பெர்னாண்டோவின் திட்டத்தில் உருவானது இத்தலையகம்.

4 மாடிகளைக் கொண்ட இக் கட்டடத்திற்கான செலவு 6.5கோடி ரூபாவாகும். இதன் மூலம் மிகப்பெரிய தலைமை அலுவலகத்தை சொந்தமாகக் கொண்ட இலங்கையின் விளையாட்டுச் சம்மேளனமாக கால்பந்தாட்டச் சம்மேளனம் விளங்கவுள்ளது.

சர்வதேச சம்மேளனத்தின் பிராந்திய அபிவிருத்தி அலுவலகமாகவும் இது இயங்கும். ஆசியாவில் அமைந்துள்ள மூன்றாவது அபிவிருத்தி நிலையம் இது. ஏற்கனவே கோலாலம்பூர், துபாய் ஆகிய நகரங்களில் இத்தகைய நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

பெத்தகானவிலுள்ள கால்பந்தாட்ட பயிற்சி நிலையம் 100 மாணவர்கள் தங்கியிருந்து பயிற்சிபெறத்தக்கதாக அமைக்கப்படும். 100 கட்டில்கள் கொண்ட விடுதி, பயிற்சி நிலையம், மைதானம், நீச்சல்தடாகம் என்பவற்றை இது கொண்டிருக்கும்.

இதற்கான முதற்கட்டச் செலவு 430,000 டொலர்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இவ்விரு திட்டங்களுக்கான நிதியை ஃபிஃபாவே வழங்கியுள்ளது.

இதற்கான நிதியைப் பெறுவதில் மணிலால் பெர்னாண்டோ, இலங்கைக் கால் பந்தாட்டச் சம்மேளனத்தின் உபதலைவர் ஜே.எஸ்.என் ஆனந்தராஜா ஆகியோர் பிரதான பங்குவகித்தனர்.

இவ்வைபவங்களையொட்டி விமர்சையான வரவேற்பு உபசாரங்களுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பிரதான நகரங்களில் பிளாட்டரை வரவேற்று பதாகைகள் அமைக்கப்படும். கொழும்பு மாநகர வீதிகள் இலங்கை கால் பந்தாட்ட லீக்குகள் மற்றும் கழகங்களின் கொடிகளால் அலங்கரிக்கப்படவுள்ளன. 'கட்அவுட்'கள் பதாதைகள் ஆகியனவும் இதில் இடம்பெறும்.

பயிற்சி நிலையத் திறப்பு விழாவில் அமைச்சர் மங்கள சமரவீர, கோட்டே மேயர் சந்திரா சில்வா ஆகியோர் உட்பட பல பிரமுகர்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

தலைமைக் காரியாலய கட்டடத் திறப்பு விழாவில் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல, கொழும்பு மேயர் ஓமர் காமில் ஆகியோரும் அதிதிகளாகக் கலந்துகொள்ளவுள்ளனர்.

மே 15ஆம் திகதி கலாசார கண்காட்சி, இசை நிகழ்ச்சி ஆகியனவும் நடைபெறவுள்ளன.

10,000 பாடசாலை மாணவர்கள் 5,000 கால்பந்தாட்ட வீரர்கள் ஆகியோரும் இவ்வைபவத்திற்குச் சமூகமளிப்பர். ஆனால் இலங்கை தேசிய அணி வீரர்களுக்கு இதில் பங்குபற்ற வாய்ப்பு இல்லை.

உலகக் கிண்ணத் தகுதிகாண் போட்டிகளில் பங்குபற்றுவதற்காக அவர்கள் லெபனான் சென்றுள்ளதே இதற்குக் காரணம் .

ஜோஸப் பிளாட்டர் தனது இலங்கை விஜயத்தின்போது தெற்காசிய, தென்கிழக்காசிய நாடுகளின் கால்பந்தாட்ட சம்மேளன நிர்வாகிகளையும் மாநாடொன்றில் சந்திக்கவுள்ளார்.

ஆசிய கால்பந்தாட்டச் சம்மேளனத் தின் செயலாளர் பீட்டர் வேலப்பன், ஃபிஃபா நிறை வேற்றுக்குழு உறுப்பினர் களான கட்டாரைச் சேர்ந்த அப்துல்லா பின் ஸமாம், தாய்லாந்தின் வராட் மனோத் ஆகி யோரும் இலங்கைக்கு வரவுள்ளனர்.

இவ்வைபவங்களில் சிறப்பு அதிதியாகக் கலந்து கொள்ளுமாறு கால்பந்தாட்ட ஜாம்பவானான முன்னாள் பிரேஸில் வீரர் பேலேயும் அழைக்கப்பட்டார்.



ஆனால் தமது நிகழ்ச்சி நிரலின்படி இதில் பங்கு பற்றுவதற்கு அவகாசம் இல்லை எனத் தெரிவித்துள்ளார் பேலே.

எனினும் விரைவில் நடைபெறவுள்ள மற்றொரு வைபவத்தின் போது பேலேயை அழைப்பதற்கு கால்பந்தாட்டச் சம்மேளனம் தீர்மானித்துள்ளது.

## விளையாட்டுச் செய்திகள்!

-ஆர். சேதுராமன்

## எல்.பி.டபிள்யுவுக்கு நவீன கருவி தயார்!

கிரிக்கெட் போட்டிகளில் துடுப்பாட்ட வீரர் எல்.பி. டபிள்யு மூலம் ஆட்டமிழக்கிறாரா இல்லையா என்பதைத் தீர்மானிக்க நவீன உபகரணமொன்று அறிமுகப்படுத்தப் படவுள்ளது.

வளைகுடா யுத்தத்தின்போது ஏவுகணைகளின் பாதையைக் கண்டறிய பயன்படுத்தப்பட்ட தொழில்நுட்பத்தின் அடிப்படையில் இவ்வுபகரணம் தயாரிக்கப்பட்டுள்ளது.

இதற்காக நவீன வீடியோ கமராக்கள் மைதானத்தின் பல்வேறு கோணங்களில் பொருத்தப்படும். பந்துவீச்சாளரின் கையிலிருந்து பந்து புறப்படுவதிலிருந்து பந்தின் முப்பரிமாணப் படங்களை கமராக் கள் பதிவு செய்யும்.

பந்து விழுந்த இடம், அதன் நகர்வுத் திசை, வேகம், துள்ளல் என்பவற்றை ஒரு செக்கனிற்குள் இவ்வுபகரணம் கணித்துவிடும். அதன்பின் பந்து செல்லும் பாதையை அது அனுமானிக்கும்.

இதன் மூலம் துடுப்பாட்ட வீரரின் கால் கவசத்தில் பந்து படாமலிருந்தால் பந்து விக்கட்டைத் தாக்குமா, இல்லையா என்பதை அது அறிவிக்கும். 2 செக்கன்களிற்குள் இப்பெறுபேறு கிடைத்துவிடும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பிரிட்டிஷ் விஞ்ஞானியான போல் ஹேவ்கின்ஸ் இதை கண்டுபிடித்துள்ளார். எனவே 'ஹேவ்க்ஸ் ஐ' (ஹேவ்கின் கண்) என இவ்வுபகரணத்திற்குப் பெயரிடப் பட்டுள்ளது.

பிரிட்டனின் ஸ்கை தொலைக்காட்சி நிலையம் இங்கிலாந்து கிரிக்கெட் பருவத்தின்போது இவ்வுபகரணத்தை பயன்படுத்த எண்ணியுள்ளது.

இதேவேளை சர்வதேச கிரிக்கெட் பேரவை லோர்ட்ஸ் மைதானத்தில் இவ்வுபகரணத்தை செயற்படுத்திக் காட்டுமாறு கேட்டுக்கொண்டுள்ளது. அது பயனளிப்பதாகக் கருதப்பட்டால் 2002 ஆம் ஆண்டிலிருந்து சர்வதேச கிரிக்கெட் பேரவை யினால் உத்தியோகபூர்வமாகப் பயன் படுத்தப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

## மேற்கிந்திய அணியின் பாக். விஜயம் ரத்தாகுமா?

மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் அணி பாகிஸ்தானுக்கு விஜயம் செய்வதை உறுதிப்படுத்துமாறு சர்வதேச கிரிக்கெட் பேரவையிடம் பாகிஸ்தான் கோரியுள்ளது.

ஐ.சி.சியின் ஐந்து வருடகால அட்டவணையின்படி அடுத்த வருடம் பெப்ரவரி மாதத்தில் 2 டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றுவதற்காக மேற்கிந்தியத் தீவுகள் அணி பாகிஸ்தானுக்குச் செல்ல வேண்டும்.

ஆனால் இதே காலப்பகுதியில் இந்திய அணியை தமது நாட்டிற்கு அழைக்க மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் சபை முயற்சிப்பதாக செய்தி வெளியாகியுள்ளது.

இவ்வருட ஆரம்பத்தில் பாக். இந்திய அணி பாகிஸ்தானுக்குச் செல்ல திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால் இந்தியா இவ் விஜயத்தை ரத்துச் செய்தமை குறிப்பிடத்தக்கது.

எனவே இவ்விடயத்தில் தலையிட்டு மேற்கிந்தியத் தீவுகளின் வருகையை உறுதிப்படுத்துமாறு பாகிஸ்தான் கிரிக்கெட் சபை ஐ.சி.சியிடம் கோரியுள்ளது.

ஏற்பாடுகள் செய்யப்பட்டபின் மேற்கிந்தியத் தீவுகளின் விஜயம் ரத்தானால் தமக்கு பல கோடிக்கணக்கான ரூபா நட்ட மேற்படும் என்பதை பாக். கிரிக்கெட் சபையின் தலைவர் ஜெனரல் தாரிக் ஸியா ஐ.சி.சியிடம் கூறியுள்ளார்.

இந்தியாவுடனான போட்டிகள் ரத்தானதால் தமக்கு பல மில்லியன் டொலர்கள் நஷ்டமேற்பட்டதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதற்கு முன்னரும் பாகிஸ்தானுக்கான சுற்றுலாவொன்றை மேற்கிந்தியத் தீவுகள் அணி ரத்துச் செய்தது.

உள்ளூர் போட்டிகளில் தடங்கல் ஏற்படும் என்பதே அதற்குக் காரணம்.

## வஸிமுக்கு ஒரு காலம் வந்தால் வக்காருக்கு ஒரு காலம் வரும்

1999ஆம் வருட இறுதியில் கார்ல்டன் அன்ட் யுனைட்டட் கிரிக்கெட் சுற்றுப் போட்டி அவுஸ்திரேலியாவில் நடைபெற்றது. அதற்கான பாகிஸ்தான் வீரர்கள் தேர்வில் வேகப்பந்துவீச்சாளர் வக்கார் யூனுஸ் இடம்பெறவில்லை. அவ்வளவுதான். அணித் தலைவர் வஸிம் அக்ரம் மீது சீறிவிழுந்தார் வக்கார் யூனுஸ்.

"தேர்வுக் குழுவினர் என்னைத் தெரிவு செய்தனர். வஸிம் அக்ரம்தான் என்னை நீக்குமாறு வற்புறுத்தினார். கடந்த உலகக் கிண்ணப்போட்டியில் பங்களாதேஷுடன் மட்டுமே எனக்குப் பந்துவீசக் கிடைத்தது.


வக்கார் வஸீம்

அவுஸ்திரேலியாவுடனான டெஸ்ட் தொடரின் போதும் போதியளவு பந்துவீச கிடைக்கவில்லை.

என்மீது கோபமிருப்பின் அதை அறையினுள் தீர்த்துக்கொள்ளலாம். அரங்கிலே வெளிக்காட்டக்கூடாது. வஸிம் ஒரு சிறந்த வீரர் என்றாலும் நான் அவரை ஒரு நல்ல மனிதராகக் கருதமாட்டேன். "

இவ்வாறு அக்ரம் மீது பகிரங்க குற்றம் சுமத்தியதால் வக்காருக்குத் தடைவிதிக் கவும் பாக். கிரிக்கெட் சபை எண்ணியிருந் தது. ஆனால் சொஹைப் அக்தார் பந்தை எறி கிறார் என்று குற்றம் சுமத்தப்பட்டதால் உடனடியாக அவுஸ்திரேலியாவிற்கு அழைக்கப் பட்டார் வக்கார் யூனுஸ்.

பின்னர் இலங்கையில் நடைபெற்ற டெஸ்ட் போட்டிகளின் போது இருவரும் தோளில் கைபோட்டுக்கொண்டனர்.

இப்போது காலம் சுழன்று வக்கார் யூனுஸ் அணித் தலைவராகிவிட்டார்.

வஸிம் அக்ரம் காயம் காரணமாக 4 டெஸ்ட் போட்டிகளில் இடம்பெறவில்லை. எனினும் வஸிம் அக்ரம் இங்கிலாந்து சுற்றுலாவுக்கு அணியில் சேர்க்கப்பட்டார் வஸிம் அக்ரம். இவ்வேளையில் வஸிம் அக்ரம் மீதான வக்காரின் மனக்கசப்பு மீண்டுமொருமுறை வெளிப்பட்டது.

''இங்கிலாந்துடனான முதலாவது டெஸ்டில் வஸிமின் இடம் நிச்சயமில்லை என்று பகிரங்கமாகக் கூறினார் வக்கார்.

''வஸிம் தெரிவு செய்யப்படுவதற்கு முன் பிராந்தியப் போட்டிகளில் விளையாடி அவரது திறமையை வெளிப்படுத்த வேண்டும். சகலருக்கும் அது அத்தியாவசியமான விடயம்.

சொஹைப் அக்தார், மொஹமட் ஸமி, அப்துர் ரஸ்ஸாக், சக்லைன் முஸ்தாக் ஆகியோருடன் முதலாவது போட்டியில் விளையாட விரும்புகிறேன்'' என்றும் கூறினார் வக்கார்.

வஸிம் அக்ரம் சேர்க்கப்படுவதற்கு வக்கார் எதிர்ப்புத் தெரிவித்தமையே பாக். வீரர்கள் தேர்வு தாமதமாகியதற்குக் காரணம் எனவும் பாக். பத்திரிகைகள் சில விமர்சித்தன. அக்ரமைப் பழிவாங்குகிறாரோ வக்கார் என்றும் கருதப்பட்டது.

ஆனால் இங்கிலாந்துக்குச் சென்றவுடன் வக்காரின் பேச்சு மாறியது. "எமக்கிடையில் பிரச்சினைகள் எதுவும் கிடையாது. அக்ரம் என்னோடு ஆரம்பப் பந்துவீச்சில் ஈடுபடுவார்'' என்றார் வக்கார்.

அதிவேகப் பந்துவீச்சாளரான அக்தார் வயிற்றுக்கோளாறினால் அவதிப்படுகிறார். அவர் எப்போது அணியில் இணைந்து கொள்வார் என்பதும் சந்தேகமாகயிருந் தது. இதுவும் வக்காரின் போக்கில் மாற்றமேற்படக் காரணமாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது. எதிர் காலத்தில் வஸிம்-வக்கார் உறவு எப்படி மாறுமோ?

# தீ வைப்புக்களினால் உருக்குலைந்து உருமாறிய மாவனல்லை நகரம்

ஒரு தீப்பொறி பெருந்தீயையே மூட்டிவிடலாம் என்பதற்கு இந்த நாட்டில் பல சம்பவங்களை உதாரணம் கூறலாம். மாவனல்லையில் நடந்துள்ள சம்பவமும் இப்பொழுது ஓர் உதாரணமாகிவிட்டது.

மாவனல்லைச் சம்பவத்தின் எதிரொலியாக கொழும்பு நகரிலும் பதற்றம்



எரிக்கப்பட்ட ஒரு தொகுதிக் கடைகள்

உருவாகித் தணிந்துள்ளது.

கொழும்பில் முஸ்லிம் மக்கள் தமது எதிர்ப்பை வெளிக்காட்ட முன்வந்தபோதே பதற்றம் உருவானது. இறுதியில் ஊரடங்குச் சட்டத்தைப் பிறப்பிக்க வேண்டியதாயிற்று.

மாவனல்லை நகரில் ஏற்பட்ட அழிவுகளுக்கு காரணமானவற்றை ஆரம்பத்திலேயே ஆராய்ந்து தீர்த்திருந்தால் விரும்பத்தகாத எத்தனையோ சம்பவங்களைத் தடுத்திருக்கலாம்; அழிவுகளைத் தவிர்த்திருக்கலாம். செய்யத்தவறி விட்டார்கள்.

மாவனல்லையில் தினமும் நிலைமையை அவதானிக்க ஜனாதிபதி சந்திரிகா குழு ஒன்றை அமைத்துள்ளார். சம்பவங்களுக்குப் பொறுப்பானவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென அரசு


சேதமடைந்த கடைத் தொகுதி ஒன்றின் முன்னால் விரக்தியுடன் காணப்படும் மக்கள்

அறிவித்துள்ளது.

மாவனல்லை வெறியாட்டங்கள் தொடர்பாக ஓர் அரசியல்வாதி உட்பட சுமார் 50 பேரை இரகசியப் பொலிஸார் ஏற்கனவே விசாரணைக்கு உட்படுத்தியுள்ளனர்.

மூண்ட கலவரம், எற்பட்ட அழிவுகள் குறித்து அமைச்சர் அத்தாவுட செனவிரத்ன ஜனாதிபதிக்கு அறிக்கை சமர்ப்பிக்கவிருக்கிறார்.

மாவனல்லையில் உள்ள கடைகளில் 90 சதவீதம் முஸ்லிம் மக்களுக்கும் எஞ்சியவை சிங்கள, தமிழ் மக்களுக்கும் சொந்தமானவை. பெரிய மற்றும் சாதாரண வர்த்தக நிலையங்கள் அவை. நகருக்கு வந்துபோவோரில் சிங்கள மக்களே அதிகம்.

திங்கள் 30ஆம் திகதி இரவு முஸ்லிம் ஹோட்டல் ஒன்றுக்கு வந்த சிங்கள இளைஞர்களில் ஒருவர் அங்கிருந்த முஸ்லிம் இளைஞரிடம் 3 ரூபாவைக் கொடுத்து சிகரெட் கேட்டிருக்கிறார். இந்த விலைக்கு சிகரெட் தரமுடியாதென முஸ்லிம் இளைஞர் கூறவே இருவருக்கும் இடையில் வாக்குவாதம் மூண்டது.

இறுதியில் அந்த முஸ்லிம் இளைஞரைப் பிடித்து மின் கம்பத்தோடு கட்டிவிட்டார்கள். இதனைக் கண்டு ஊர் முஸ்லிம்கள் ஆத்திரமடைந்தனர்.

அதேவேளையில் 'ஹார்ட் வெயர்' கடை ஒன்றுக்குச் சென்ற மற்றொருவர் 80 ரூபாவுக்குரிய சாமான்களை வாங்கிவிட்டு 20 ரூபாவைக் கொடுக்க முற்பட்டார். இதனால் அங்கும் வாய்ச் சண்டை ஏற்பட்டது.

இந்த இரு சம்பவங்களும் ஒருவகையான கப்பம் கோரும் பாணியில் அமைந்தவை என்பதே முஸ்லிம்களின் பரவலான கருத்து. மின் கம்பத்தில் கட்டப்பட்டவரைத் தாக்கியதால் சினமுற்ற முஸ்லிம்கள் நீதி நியாயம் கேட்கத் தலைப்பட்டனர்.

இரவு இடம்பெற்ற இந்தச் சம்பவத்தையிட்டு பொலிஸார் உடனடியாக நடவடிக்கை எடுக்கவில்லை என்று கூறப்படுகிறது. இதனால் சுமார் 2000 பேர் அடங்கிய முஸ்லிம்கள் கறுப்புக் கொடிகளை ஏந்தி தமது எதிர்ப்பையும் கவலையையும் தெரிவித்தனர்.

நகரில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தை அறிந்து சுமார் 5000 பேர் அடங்கிய சிங்கள இளைஞர்கள் அரனாயக்கா, ரம்புக்கனை வீதி ஆகிய இடங்களில் இருந்து நகருக்கு வந்தனர். இருசாராருக்கும் இடையில் கல்லெறியும் அடி தடியும் இடம்பெற்றன.

நகரமே அல்லோலகல்லோலப்பட்டது. சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி கடைகள் சூறையாடப்பட்டன. வாயு சிலிண்டர்கள், உடு புடைவைகள், நகைகள், வீட்டுச் சாமான்கள் எல்லாமே சூறையாடப்பட்டன. நகரில் நிலைமையைக் கட்டுப்படுத்த பொலிஸார் கடமையில் இருந்தபோதிலும் நிலைமை கட்டுகடங்காமல் போய்விட்டது. சூறையாடல்கள் தொடர்ந்தன.

நிலைமையை உணர்ந்து சரிவர கடமையைச் செய்ய பின்னின்ற பொலிஸார் மீது ஏகப்பட்ட குற்றச்சாட்டுகள்.

இரவு எட்டு மணியாகியும் கட்டுக்கடங்காத கூட்டத்தை நோக்கி முதலில் ஆகாயத்தில் வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. பின்னர் பிரேமதாஸா சிலைக்கு அருகில் உள்ள மணிக்கூண்டுக் கோபுரத்தின் முன்பாக இருந்த இரு இளைஞர்கள் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகினர். பொலிஸார் சுட்டதில் அவர்கள் சுருண்டு விழவே நிலைமை விபரீதமானது.

புதன் நண்பகல் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. இதுதான் தருணம் எனப் பலர் சூறையாடுதலோடு தீவைப்பையும் மேற்கொண்டனர்.

ஊரடங்கு வேளையில் இடம்பெற்ற இந்தச் சம்பவங்களைப் பொலிஸார் கண்டும் காணாதவர்கள் போல் இருந்துவிட்டனர் என்பது முஸ்லிம் மக்களின் குற்றச்சாட்டு.

மாவனல்லை — ரம்புக்கனை வீதிக் கடைகள், கண்டி — கொழும்பு வீதிக் கடைகள் எனப் பெருந்தொகையான கடைகள் தீயினால் நாசமாகின. பிரபல ஆயுர்வேத வைத்தியர் வீட்டுக்கு முன்பாக இயங்கி வந்த பெற்றோல் விநியோக நிலையம் மற்றும் ஒரு பெரிய வர்த்தக நிலையம் ஆகியன உட்பட ஆடை தயாரிக்கும் இரண்டு நிலையங்களும் அக்கினியோடு சங்கமமாகின.

நான்கு வணக்கஸ்தலங்கள் சேதமாக்கப்பட்டன.

மாவனல்லை, அரநாயக்கா ஹெம்மாத்தகம பகுதியில் வாழும் முஸ்லிம்கள் பலரும் தங்களது வீட்டுக்குள்ளேயே தஞ்சம் புகும் நிலை ஏற்பட்டது. இந்தச் சம்பவங்களில் சுமார் 20 பேர் காயமடைந்தனர். இருவர் கொல்லப்பட்டனர். முஸ்லிம் அமைச்சர்களின் கவனத்துக்கு சம்பவம் கொண்டுவரப்பட்டதை அடுத்து அங்கு பொலிஸாரும் இராணுவத்தினரும் கடமையில் அமர்த்தப்பட்டனர்.

அமைச்சர்கள் அத்தாவுட செனவிரத்ன தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் இழப்புகளால் பாதிக்கப்பட்டோருக்கு நஷ்டஈடு வழங்கவும் மீண்டும் அப்பிரதேசத்தில் சமாதானத்தையும் ஐக்கியத்தையும் நிலைநாட்டவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவங்கள் மோசமடைய பிரபல அரசியல்வாதி ஒருவரின் சகாக்களே காரணம் என்பது பரவலான குற்றச்சாட்டு.

பல கோடி ரூபா பெறுமதியான சொத்துக்கள் தீக்கும் சூறையாடலுக்கும் உள்ளாகின. சுமார் 78 கடைகளும் 35 வீடுகளும் ஏழு வாகனங்களும் சேதமடைந்தன.

கனேதன்னை என்ற பகுதி, நகரில் இருந்து சில மைல் தூரத்தில் அமைந்துள்ள பிரதேசம். அப்பகுதியில் தோட்டங்களுக்குள்



பொருட்கள் சூறையாடப்பட்டு வீதியில் அலங்கோலமாகக் கிடக்கும் காட்சி

புகுந்த கோஷ்டி ஒன்று வன்செயல்களில் ஈடுபட்டதால் அப்பகுதியில் வசித்த வறிய முஸ்லிம்கள் தூர இடங்களை நாடவேண்டியிருந்தது.

மாவனல்லைச் சம்பவங்களை அடுத்து சகல அரசியல்கட்சிகளைச் சேர்ந்தவர்களும் அங்கு சென்று முஸ்லிம்களுக்கு ஆறுதல் கூறினர்.

இந்தச் சம்பவங்களின் பின்னணியில் இருந்ததாகக் கூறப்படும் ஓர் அரசியல்வாதி மீது மிகுந்த வேதனையை அப்பிரதேச மக்கள் கொண்டிருக்கின்றனர்.

சகல இன மக்களும் இச்சம்பவம் குறித்து வேதனையும் வெட்கமும் அடைவதாக அஸ்கிரிய பீடத்தைச் சேர்ந்த வரகாவே தம்மாலோக தேரர் கருத்து வெளியிட்டுள்ளார்.

இதுபோன்ற சம்பவங்கள் மீண்டும்


சேதமாக்கப்பட்ட கார் விற்பனை நிலையம்

தலைதூக்காமல் பார்த்துக்கொள்ளுமாறு ஜனாதிபதி பாதுகாப்புப் படையினருக்கு உத்தரவிட்டிருக்கின்றார்.

மாவனல்லை நகரின் ஒரு பகுதியைக் கட்டியெழுப்ப சில காலம் செல்லலாம். நகரில் வாழும் மக்களில் முஸ்லிம்கள் பெரும்பான்மையினராவர். மீண்டும் சமாதானத்தை ஏற்படுத்த முயற்சிகள் தேவை.

மாவனல்லைப் பிரதேசங்களில் உள்ள சுமார் ஏழு பள்ளிவாசல்களின் தர்மகர்த்தாக்கள் சபையினர், முஸ்லிம் அரசியல் சமூக மற்றும் சமூக நலன் விரும்பிகள் இணைந்து இது போன்ற சம்பவங்கள் மீண்டும் இடம்பெறாமல் இருக்க நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

— கண்டியூர்க் காவலன்












இப்பத்திரிகை கொழும்பு-06, வெள்ளவத்தை பெரக்கும்பா பிளேஸ் 1/5ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட் மார்க் என்டர்பிரைசஸ் ஸ்தாபனத்தினால் 2001 மே 13 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.